# செம்மண்

நிலம் 2 துகள் 61 வள்ளுவர் ஆண்டு 2052, 18 - 24 புரட்டாதி 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


# பொறுப்புக்கூறலில் ராஜபக்ஷ ஆட்சி கடும் பின்னடைவு

## ஐ.நா. நிபுணர் காட்டமான அறிக்கை



கொழும்பு, புரட்டாதி 18

இலங்கையில் நடந்த போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறலில் கடந்த 18 மாதங்களில் கடும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறப்பு வல்லுநர் பாபியன் சல்வியோலி தெரிவித்தார். உண்மை, நீதி, இழப்பீடுகள், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கான சிறுப்பு வல்லுநர் அவர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பேசிய அவர் இலங்கையில் மனித உரிமைகள் விடயங்களில் கடந்த ஒன்றரை வருடங்கள் இருண்டவை என்கிற வகையில் கருத்துத் தெரிவித்தார்.

கடந்த 18 மாதங்களில் இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமை பெரும் சரிவைச் சந்தித்துள்ளது என்று அவர் தெரிவித்தார். உண்மையைத் தேடுவதில் நடவடிக்கைகள் போதாமலுள்ளன, பொறுப்புக்கூறல் மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் விடயங்களில் மிக மிக மோசமான பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் இந்தப் போக்கு ஐ.நா. பரிந்துரைக்கும் நிலைமாறு கால நீதியை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான செயல்முறைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் தனது கவலைகளை வெளிப்படுத்திய வாய்மூல அறிக்கையை முன்வைத்த சில நாள்களில் சிறப்பு வல்லுநரின் இந்தக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

ஆணையாளரின் அறிக்கைக்குப் பதிலளித்த இலங்கை அரசு மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள வெளியக முன்முயற்சிகளை முழுமையாக நிராகரிப்பதாகத் தெரிவித்திருந்தது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டால் உள்ளூரில் உள்ள பொறிமுறைகள் ஊடாக விசாரணைகள் நடத்தப்பட்டு நீதி வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தது.

---

### ரிஷாத்தின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, புரட்டாதி 18

முன்னாள் அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய 16 வயதுச் சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கில் 5ஆவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்ட ரிஷாத்தின் விளக்கமறியல் ஐப்பசி முதலாம் நாள் வரை நீதிமன்றத்தால் நேற்று நீடிக்

பக்கம் 02

---

### தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீடிப்பு

கொழும்பு, புரட்டாதி 18

இலங்கையில் கடந்த நான்கு வாரங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு மீண்டும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டது. நிகழ்நிலையில் நேற்று நடைபெற்ற கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் கூட்டத்தின் பின்னர் இது தொடர்பான அறிவிப்பு விடுக்கப்பட்டது.

ஐப்பசி மாதம் முதலாம் நாள் காலை 4 மணி வரையும் தனிமைப்படுத்தல்

பக்கம் 02

---

### நகரங்களுக்குள் நுழைய தடுப்பூசி அட்டை கட்டாயம் நடைமுறைக்கு வரவில்லை

கொழும்பு, புரட்டாதி 18

நகரங்களுக்கு உள்ளே நுழைவதற்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டதை உறுதிப்படுத்தும் அட்டைகள் அவசியம் என்கிற கட்டாயம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்று சுகாதாரத் துறையினர் தெளிவுபடுத்தியுள்ளனர். அது தொடர்பான தெளிவான வரையறைகள் வழிகாட்டுதல்கள் இன்னும் உருவாக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

புரட்டாதி 15ஆம் நாள் முதல் முக்கிய நகரங்களுக்குள் செல்ப

பக்கம் 02

---



### மதுக் கடைகளின் முன் அலைமோதிய கூட்டம்

*முறையான அனுமதிக்கு முன்பே திறக்கப்பட்டன கடைகள்*

கொழும்பு, புரட்டாதி 18

நாட்டில் நேற்று திடீரென மதுக் கடைகள் திறக்கப்பட்டதை அடுத்து மதுபானங்களைக் கொள்வனவு செய்வதற்கு மதுப் பிரியர்கள் முண்டியடித்தனர். நீண்ட வரிசைகளில் நின்று அவர்கள் மது வாங்கிச் சென்றனர்.

கடந்த நான்கு வாரங்களாக நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக மதுக் கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் நேற்று மதுக் கடைகள் திடீரெனத் திறக்கப்பட்டன.

மதுக் கடைகளைத் திறப்பதற்கு நிதி அமைச்சு உத்தியோகபூர்வமற்ற அனுமதியை வழங்கிய

பக்கம் 02

---

### பாண்டிச்சேரி – இலங்கை இடையே கப்பல் சேவை

#### பயணிகளை ஏற்றி இறக்குவது குறித்து பேச்சு

சென்னை, புரட்டாதி 18

இந்தியாவின் பாண்டிச்சேரி ஒன்றிய பகுதியின் காரைக்கால் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்குப் பயணிகள் கப்பல் சேவையைத் தொடங்குவது குறித்து அங்கு சென்றுள்ள கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அமைச்சர் வியாழேந்திரன் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர் முதல்வர் ரங்கசாமியுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

பக்கம் 02

---



### காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம்

07



### மேடையேற்றப்பட்ட நாடகமா

04

# செம்மணி

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**


## சிறைச்சாலைகள் அமைச்சர் மீது சுயாதீன விசாரணை வேண்டும்

அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்புத்துறை அமைச்சர் லொகான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகள் இருவரை முந்தாளிட வைத்து அவர்களின் தலைகளில் துப்பாக்கியை வைத்து மிரட்டினார் என்கிற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனை அடுத்து அவர் அந்த அமைச்சுப் பதவியில் இருந்து விலகினார். தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் அறிவுறுத்தலுக்கு அமைய அவர் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுப் பதவியில் இருந்து விலகியிருக்கிறார்.

அவர் வசம் இருந்த மற்றொரு அமைச்சான இரத்தினக் கல் ஆபரணத்துறை அமைச்சில் அவர் தொடர்ந்தும் பதவி வகிக்கிறார். இந்த விடயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்று எதிர்க் கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன.

கைதிகளைத் தான் மிரட்டவில்லை என்றும் வழக்கமான சிறைச்சாலைக் கண்காணிப்புக்காக மட்டுமே தான் அனுராதபுரம் மற்றும் வெலிக்கடைச் சிறைகளுக்குச் சென்றார் என்றும் தன்னோடு வேறு எவரும் வந்திருக்கவில்லை என்றும் அமைச்சர் தன்னிலை விளக்கமளித்திருக்கிறார்.

ஆனால் அவர் அழகி ஒரவர் உள்ளிட்ட தனது நண்பர்கள் கும்பல் ஒன்றோடு மது போதையில் வந்திறங்கியே இந்த அட்டூழியத்தில் ஈடுபட்டார் என்கிறன ஊடகச் செய்திகள். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடந்து வரும் நிலையில் அமைச்சரின் இந்த நடவடிக்கை பன்னாட்டு மட்டத்தில் உடனடியாகவே கவனத்தைப் பெற்றது. இலங்கைக்கான ஐநா வதிவிடப் பிரதிநிதி உடனடியாகவே தனது கண்டனத்தை இது தொடர்பில் பதிவு செய்திருந்தார்.

இவ்வாறு எழுந்த கண்டனங்கள், அழுத்தங்களைத் தொடர்ந்தே லொகான் ரத்வத்தையை சிறைச்சாலைகள் அமைச்சுப் பதவியில் இருந்து மட்டும் விலகவைத்து நிலமையைச் சமாளிக்க முயன்றிருக்கின்றனர் இன்றை ஆட்சியாளர்கள்.

கைதிகளைப் பாதுகாக்க வேண்டிய அமைச்சர் ஒருவரே அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்திருப்பது மன்னிக்க முடியாத குற்றம். அதற்காக அவர் முழுமையாகத் தண்டிக்கப்படவேண்டும். நீதியான ஒரு விசாரணை நடத்துமுகமாக அவரது அனைத்துப் பதவிகளில் இருந்தும் உடனடியாக நீக்கப்படவேண்டும்.

அதன் பின்னர் குற்றவியல் சட்டங்களின் கீழ் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு அமைச்சர் தண்டிக்கப்படவேண்டும். தற்போது மனித உரிமைகள் ஆணைக்குழு, காவல்துறைப் புலனாய்வுக் குழு மற்றும் சிறைச்சாலைகள் நிர்வாகம் ஆகியன இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளைத் துவக்கி இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இவை அனைத்தும் ஏதோ ஒரு விதத்தில் ஆட்சியின் அங்கங்கள் என்பதால் இவற்றிடமிருந்து முழுமையான நீதி கிடைப்பதற்கு வாய்ப்புகளில்லை.

அதனால் சுயாதீனமான விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு நேர்மையான, நீதியான விசாரணை ஒன்று முன்னெடுக்கப்படுவது அவசியம். கண்துடைப்புக்காக ஒரு அமைச்சுப் பதவியில் இருந்து மட்டும் லொகான் ரத்வத்தவை விலகச் செய்து மற்றைய அமைச்சுப் பதவியில் தொடரவிடுவதும் அவர் மீது சுயாதீனமான விசாரணை நடத்தப்படாமல் இருப்பதும் குற்றவாளிகளைத் தண்டிக்காது தப்பவிடும் இலங்கையின் போக்குக்கான சமீபத்திய உதாரணமாக இருக்கின்றது.

இவ்வாறு மீள நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அரசு உறுதி வழங்கியிருக்கும் நிலையில் அமைச்சர் விடயத்தில் மீண்டும் அதயே செய்வது அல்லது கண்துடைப்பு நடவடிக்கைகளை மட்டுமே எடுப்பது ஏற்புடையதல்ல. அது கண்டிக்கத்தக்கது. வெறுக்கத்தக்கது.

### பாண்டிச்சேரி...

இந்தப் பேச்சுக்களில் கப்பல் சேவையைத் தொடங்குவது தொடர்பில் முதல்வர் ரங்கசமி சாதகமான பதிலைத் தெரிவித்துள்ளார் என்று இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

காரைக்காலுக்கும் இலங்கைக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்துத் தொடக்கப்படுவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலாத்துறை வளர்ச்சியடையும் என்றார் அவர். இந்தப் பயணிகள் கப்பல் சேவை விரைவில் தொடங்கப்படும் என்கிற நம்பிக்கை இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பயணத்தின்போது இராஜாங்க அமைச்சர்கள் ராமேஸ்வரம், நாகை, புதுக்கோட்டை மாவட்ட மீனவ சங்க பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர். இலங்கைக் கடற்படையால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது 200க்கும் மேற்பட்ட இழுவைப் படகுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையே பேச்சுக்கள் நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்து மீண்டும் பாரம்பரிய மீன்பிடியிடங்களில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான இணக்கத்தை எட்டுவதற்கு வழியேற்படுத்தித் தருமாறு கோரும் மனு ஒன்றையும் அவர்கள் கையளித்தனர்.

இலங்கை கடற்தொழில் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேசி இரு நாட்டு மீனவர்களும் அமைதியான முறையில் மீன்பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று, சந்திப்பின் பின்னர் பேசிய செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கையில் கொழும்பு துறைமுக விரிவாக்கத்தையே சீனா செய்கிறது என்றும் அங்கு துறைமுகத்தைக் கட்டவில்லை என்றும் கூறிய செந்தில் தொண்டமான். இவ்வாறு சீனா துறைமுகப் பணிகளில் ஈடுபடுவதன் காரணமாக இந்தியாவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவித்தார்.

### மதுக்...

ள்ளது என்கிற தகவல் பரவியதை அடுத்தே பரபரப்பான விற்பனை தொடங்கியது.

இந்த விடயம் தொடர்பில் மது வரித் திணைக்களத்திற்கும் நிதி அமைச்சுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதாகச் சில தகவல்கள் தெரிவித்தன. ஆனால், மதுக் கடைகளைத் திறப்பதற்கான உத்தியோகபூர்வ அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் நேற்றுத் தெரிவித்தார்.

மதுக் கடைகள் திறக்கப்படப்போகின்றன என்கிற செய்தி சமூக ஊடகங்களில் பரவியதை அடுத்து மதுப் பிரியர்கள் முண்டியடித்துக்கொண்டு மதுக் கடைகளின் முன் குவிந்தனர். சில இடங்களில் அவர்களைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கு காவல்துறையினர் கடமையில் ஈடுபட்டனர்.

முறையான அனுமதியின் கீழேயே மதுக் கடைகள் திறக்கப்படுகின்றன என்கிற நம்பிக்கையிலேயே காவல்துறையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்கிறபோதும் முறையான அனுமதி வழங்கப்படாமலேயே கடைகள் திறக்கப்பட்டன.

### தடுப்பூசி...

வர்கள் தடுப்பூசி அட்டையை வைத்திருப்பது கட்டாயம் என்று செய்திகள் வெளியாகின. இதனைத் தொடர்ந்து பண்டாரவளை மற்றும் மன்னார் நகரங்களுக்குள் நுழைய முயன்றவர்களில் தடுப்பூசி அட்டை இல்லாதவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். அது தொடர்பான ஒளிப்படங்களும் செய்திகளும் ஊடங்களில் வெளியாகின.

அத்தகைய நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான முறையான பொறிமுறை இன்னமும் உருவாக்கப்படவில்லை என்று ஊடகவியலாளர்களிடம நேற்றுத் தெரிவித்தார் சுகாதாரத்துறை பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் கேமந்த கேரத் தெரிவித்தார். சுகாதார மேம்பாட்டுச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

இந்த முடிவைச் செயற்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை நாம் இன்னும் வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மன்னார் மற்றும் பண்டாரவளை நகரங்களில் மக்களைத் திருப்பி அனுப்புவதற்கான அறிவுறுத்தல் காவல் மா அதிபராலோ ஆட்சியாளர்களாலோ வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் அது தொடர்பான முடிவு அந்தந்த மாவட்டங்களில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவு என்றும் காவல்துறைப் பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்தார்.

புரட்டாதி 15ஆம் நாள் புதன்கிழமை ஒருநாள் மட்டுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அதன் பின்னர் அது கைவிடப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

### தனிமைப்படுத்தல்...

ஊரடங்கு நீடிக்கப்பட்டிருப்பதாக அரச தலைவர் செயலகம் அறிவித்தது. சுகாதாரத்துறை அமைச்சர் கெகலிய ரம்புக்வெலவும் இந்தத் தகவலை தனது கீச்சகப் கணக்கில் நிலைத் தகவலாகப் பதிந்தார்.

முன்னதாக இந்த மாதம் 21ஆம் நாள் ஊரடங்கு உத்தரவு நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஊரடங்கு நீடிக்கப்படாது என்கிற எதிர்பார்ப்பு பரவலாக இருந்தது. எனினும் மருத்துவத்துறையின் ஒரு பகுதியினர் ஊரடங்கை நீடித்து தொற்றாளர்களின் எண்ணிக்கை அடிமட்டத்துக்கு வீழும்வரை காத்திருப்பது அவசியம் என்று பரிந்துரைத்திருந்தனர்.

நேற்றைய கூட்டம் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச தலைமையில் நடந்தது. அதில் கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமாக வீழ்ந்து வருவது சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு ஊரடங்கு நீடிப்பின் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இந்த மாத இறுதியில் தொற்றாளர் எண்ணிக்கை தொடர்பில் பெரும் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் மருத்துவர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

### ரிஷாத்தின்...

கப்பட்டது.முன்னதாக இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ரிஷாத்தின் மனைவி மற்றும் மாமனாருக்குப் பிணை வழங்கப்பட்டது.

ரிஷாத்தின் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை கொழும்பு மேலதிக நீதிவான் ரஜிந்திர ஜெயசூரிய நிராகரித்தார். இதேவேளை ஆயிஷா பதியுதீன் மற்றும் அவரது தந்தையார் இருவரையும் தலா 10 லட்சம் ரூபா பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதி வழங்கினார். அவர்கள் இருவரும் கடந்த 50 நாட்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

# ஒய்யாரக் கொண்டையிலே தாளம்பூவாம்... உள்ளே இருப்பதுவோ ஈரும் பேனுமாம் ...

-வாகடவாணன்-

கொரொனாவின் தாக்கம் குறை கிறதோ இல்லையோ, கொரொனா தொடர்பில் நாளாந்தம் அறி விக்கப்படும் இலக்கப் பெறுமா னங்களில் வீழ்ச்சி ஒன்று தென்பட்டிருக்கிறது. கடந்த மூன்று நான்கு நாட்களாக அறிவிக்கப்படும் நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் இறப்பு எண்ணிக்கை என்பவற்றில் காணப்படும் குறைவை கருத்தில்கொண்டு, நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு எதிர்வரும் வாரத்தில் தளர்த்தப்ப டலாம் என்றே கருதப்படுகின்றது. இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிப்படுத்தப்படாத நிலையிலும் கடந்த ஒரு மாத காலமாகப் பூட்டிய நிலைவரத்தில் உள்ள நிலைமையை வழமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமெ னவே பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

தடுப்பூசி வழங்கலில் ஏற்பட்ட முன் னேற்றம் மற்றும் பொருளா தார நிலைமை களை கருத்தில்கொண்டு நடைமுறைகளில் மாற்றம் கொண்டுவரப்படும் என்றே நம் பப்படுகின்றது.

**கொரோனாவினதும் அது சார்ந்த கெடு பிடிகளும் ஒருபுறம் இருக்க, கொழும்பு ஆட்சிப்பீடத்தின் செயற்பாடுகளை கேள்வி கேட்பதில், அது தொடர்பில் தமது அதிருப்தியை வெளிப்படுத்துவதில் சமூக ஆர்வலர்கள் காட்டும் ஆர்வம் அதிகரித்தி ருப்பதாகவே தென்படுகின்றது**

கொரோனாவினதும் அது சார்ந்த கெடு பிடிகளும் ஒருபுறம் இருக்க, கொழும்பு ஆட்சிப்பீடத்தின் செயற்பாடுகளை கேள்வி கேட்பதில், அது தொடர்பில் தமது அதிருப்தியை வெளிப்படுத்துவதில் சமூக ஆர்வலர்கள் காட்டும் ஆர்வம் அதிகரித்தி ருப்பதாகவே தென்படுகின்றது. நாடாளு மன்றத்திடம் அல்லாமல் தனி மனிதரிடம் அதிகாரம் குவிக்கப்படுவது மாத்திரமன்றி, அரசியல் மயப்படுத்தப் பட்டதாக பொது நிறுவனங்கள் அமைவதும் ஆட்சி மாற்றத்தின் பின் அவதானிக்கப்பட்டுவரும் ஒரு நிகழ்வாகும். இந்தப் பின்ன ணியில் இவ்வகை செயற்பாடுகளை பொது வெளியில் கேள்வி கேட்கவும், இன்னும் ஒருபடி மேலே சென்று நீதிமன்றத்தில் சவா லுக்கு உட்படுத்தவும் அடிகள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றது.

**பதவிப் பாய்ச்சல்!**

கொழும்பு அரசியல் தளத்தில் கடந்த வாரம் நடந்தேறிய கவனிப் பிற்குரிய ஒரு செயற்பாடாக அஜித் நிவாட் கப்ராலுடைய பதவி



விலகல் மற்றும் பதவியேற்பு விடயங்களைக் குறிப்பிடலாம். சிறி லங்கா பொது மக்கள் முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினரான அஜித் நிவாட் கப்ரால் கடந்த திங்கட்கிழமை தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தி ருந்தார். தற்போதைய அரசில் நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு விடயங்களுக்கான இராஜாங்க அமைச்சராக விளங்கிய இவர், தற்போது இலங்கை மத்திய வங்கி யின் 16ஆவது ஆளுநராகப் பதவியேற்றிருக்கிறார்.

அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சருக்குரிய அதிகாரங்களு டனேயே அவர் இந்த ஆளுநர் பதவியைக் கையேற்பதாக ஊடகங் கள் தெரிவிக்கின்றன. இவருடைய பதவிப் பாய்ச்சலை வசதிப்ப டுத்துவதற்காக, இதற்கு முன் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த பேராசிரியர் லக்மன் உரிய காலத்திற்கு முன்னதாகவே பதவியைத் துறந்திருந்தார்.

ஆளும் தரப்பிற்கு வேண்டப்பட்டவரான அஜித் நிவாட் கப்ராலின் ஆளுநர் நியமனத்தினை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தி யிருக்கி றார் கீர்த்தி தென்னக்கோன். சிவில் சமூக ஆர்வலரான கீர்த்தி தென்னக்கோன், அஜித் நிவாட் கப்ரால் இதற்கு முன் மத்திய வங்கி ஆளுநராக விளங்கிய காலத்தில் இடம்பெற்ற பிணைமுறி மோசடிகள் மற்றும் ஹெட்ஜிங் விவகாரம் போன்றவற்றை சுட்டிக் காட்டியே அவர் நீதிமன்றத்தினை நாடியிருக்கின்றார். கப்ராலினை மத்திய வங்கி ஆளுநராக மீள நியமிப்பது மோசமானதும் மீள முடியாததுமான இழப்பை நாட்டுக்கு ஏற்படுத்தும் என குறிப்பிட்டிருக்கும் முறைப்பாட்டாளர், குறித்த நியமனத்துக்காக இடைக்காலத் தடையுத்தரவையும் கோரியிருக்கிறார்.

**மற்றொரு சட்டச் சவால்!**

இலங்கை சாரணர் சங்கத்தினுடைய பிரதி தலைமை ஆணையாளரான ஜனப்ரித் பெர்னான்டோவை கவுன்சிலின் பிரதம ஆணையாளர் பத விக்கு நியமித்தமை தொடர்பில் குறித்த கவுன் சிலின் உறுப்பினர்கள் நீதி மன்றத்தினை நாடியிருக்கி றார்கள்.



குறித்த பதவிக்கு சந்ரா வாகிஸ்டவினது பெயர் முன்மொழியப்பட்டிருந்த போதிலும் அரச தலைவர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி ஜனப்ரித் பெர்னான்டோவிற்கு வழங் கியிருப்பது தொடர்பில், உச்ச நீதிமன்றில் அடிப் படை உரிமை மீறல் மனு வொன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஜனப்ரித் பெர்னான்டோவை மேற்படி பதவிக்கு அரச தலைவர் நியமிப்பது சட்டத்துக்கு மாறானது எனக் குறிப்பிட்டிருக்கும் முறைப்பாட்டாளர் தரப்பு, கவுன்சிலுடைய விதிமுறைகளுக்கு முரணாக இது இடம்பெற்றிருப்பதாகவும் சுட்டிக் காட்டியிருக்கிறது. இந்த விவகாரம் டெய்லி மிரர் இணையத்தளத்தி னால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

**சிறைச்சாலை அமைச்சரின் கலாட்டா!**

பரா ஒலிம்பிக்கில் இலங்கை பதக்கம் வென்றமை மற்றும் தென்னா பிரிக்காவிற்கு எதிரான ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரில் இலங்கையணி வென்றமை உள்ளிட்ட செய்திகள் அரச தரப்பினரை குஷிப்படுத்தியிருக்க, சிறைச்சாலை அமைச்சரின் கலாட்டா ஒன்று அரசை இக்கட்டில் மாட்டியிருக்கிறது. கடந்த வாரத்தில், அதுவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் நடை பெற்றுக்கொண்டிருக்கையில், சிறைச்சாலைகள் முகாமைத்துவம் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தை குடிபோதையில் குழுவினருடன் சிறைச்சாலைக்கு சென்று அநாகரிகமாக நடந்துகொண்டமை பெரும் விவகாரமாகியிருந்தது. குறித்த சம்பவத்திற்கு பின்னாக எழுந்த எதிர்ப்புக்களை அடுத்து அவர் தனது பதவி விலகல் கடிதத்தினை நீட்டியிருந்தாலும் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் விவகார இராஜாங்க அமைச்சராக அவர் நீடிக்கிறார். இது அவர் மீதான நடவடிக்கை ஒரு கண்துடைப்பு, வெளி உலகத்தைத் திருப்திப்படுத்துவதற்கு மட்டுமே யானது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

அனுராதபுர சிறையில் நடந்தேறிய விவகாரம் தொடர்பில் தனது கவனிப்பை பதிவு செய்திருக்கும் ஐ.நா., சிறைக்கைதிகளின் உரிமை களை பாதுகாப்பது அரசின் கடமை என்பதை நினைவூட்டியிருக்கின்றது.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு என்னும் தொனிப் பொருளில் அரசினால் வெளியிடப்பட்ட கொள்கைச் சட்டகம், பத்து உப பிரிவுகளைக்கொண்டது. தூய்மையான அரச நிர்வாகம் மற்றும் ஒழுக்கமான சட்டத்தை மதிக்கும் மற்றும் மதிப்புக்களை அடிப்படை யாகக்கொண்ட சமூகம் என்ப



னவும் குறித்த பத்து உப பிரிவுகளில் உள்ளடங்குவன ஆகும். குறித்த கொள்கைச் சட்டக உள்ளடக்கங்களோடு நாட்டில் அன்றாடம் நடந் தேறும் சம்பவங்களை சம்பந் தப்படுத்தி சிந்திக்கும் பொழுது வாசகர்களுக்கு இந்த பத்தியின் தலைப்பு மனக்கண்ணில் வருவது தவிர்க்க முடியாததாகவே அமையும்.

▮ ரவீந்திரன் ▮



**சிறீலங்கா சுதந்திரக் கட்சியைப் பூர்வீகமாகக் கொண்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சரின் மகனான லொஹான் ரத்வத்த பொது மக்கள் பெரமுன கட்சியைச் சேர்ந்த இன்றைய ஆட்சியாளரை வேண்டுமென்றே பகைத்துக்கொள்ள வாய்ப்பில்லை**

# மேடையேற்றப்பட்ட நாடகமா லோஹான் ரத்வத்தையின் செயல்?

இந்த மாதம் 12ஆம் திகதியன்று அனுராதபுரம் மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலைகளுக்குச் சென்ற சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் மறுவாழ்வு விவகார ராஜாங்க அமைச்சர் லோஹான் ரத்வத்த அங்கிருந்த கைதிகளைத் தனிப்பட்ட முறையில் மிரட்டினார் என்று செய்திகள் வெளியாகின. அனுராதபுரம் சிறைச்சாலையில் அடைத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளை முட்டியிட வைத்த அவர் தனது கைத்துப்பாக்கியைக் காட்டி அவர்களை மிரட்டினார் என்று கூறப்படுகிறது. பல தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டநிலையில் லோஹான் ரத்வத்த தனது அமைச்சுப் பதவியைத் துறந்திருக்கிறார்.

சிறைச்சாலை நிர்வாகம் ஒன்றை எடுத்துக்கொண்டால், எஸ்.சி.ஆர். என்ற 3 ஆங்கில எழுத்துகள் அதன் தாரக மந்திரமாகக் காணப்படுகின்றன. எஸ் - செக்குரிட்டி (பாதுகாப்பு), சி - கெயர் (கரிசனை), ஆர் - ரீகாபிளிடேசன் (மறுவாழ்வு). இந்த 3 விடயங்களும் இலங்கைச் சிறைகளில் சாதாரணமாகப் பின்பற்றப்படுவதில்லை. தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் இன ரீதியான புறக்கணிப்புகளும் இதில் இருப்பதுண்டு.

இந்தச் சிறைச்சாலை நடைமுறைகள் ஒவ்வொரு கைதிகளுக்கும் கிடைக்கின்றனவா என்பதைக் கைதிகளிடம் கேட்டறிந்து அவர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகவே சிறைச்சாலைக்குப் பொறுப்பான அமைச்சர் களப் பயணங்களை மேற்கொள்வதுண்டு. அவ்வாறு அமைச்சர் ஒருவர் சிறைச்சாலைக்குத் திடீரென வருகை தரும்போது சிறைச்சாலை நிர்வாகத்தினர் அவரைக் கண்டு பயப்பிடுவதுண்டு. ஏனெனில் கைதிகள் தமது குறைபாடுகளை அமைச்சரிடம் சொல்லிவிடுவார்களோ என்ற பயத்தில்தான். ஆனால், லொகான் ரத்வத்த விடயத்தில் இது தலைகீழாக நடந்திருக்கிறது.

**அனைவர் முன்னிலையிலும் அடக்குமுறை**

சாதாரணமான ஒரு சிறைச்சாலையை எடுத்துக்கொண்டால், அங்கு சிறைச்சாலை அத்தியட்சகர் (சுப்பிரீண்டன்), உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் (அசிஸ்ரெண்ட் சுப்பிரீண்டன்), முதன்மைச் சிறை அதிகாரி (சீவ் ஜெயிலர்), சிறை அதிகாரி தரம் 1 (இரண்டு நட்சத்திரச் சின்னத்தை தோளில் அணிந்திருப்பார்), சிறை அதிகாரி (ஜெயிலர் - ஒரு நட்சத்திரச் சின்னத்தை அணிந்திருப்பார்), பொறுப்பதிகாரி (இன்ஞ்சார்ஜ்), சார்ஜண்ட், சிறைச்சாலை ஊழியர் (ஜெயில் கார்ட்), இதைவிட சிறைச்சாலை மருத்துவர், நலன்புரி அலுவலர்கள் எனப் பல பதவி நிலைகளில் உள்ளவர்கள் இருப் பார்கள். இவ்வாறான அதிகாரிகள் புடைசூழவே சிறைச்சாலைக்குப் பொறுப்பான அமைச்சர் கைதிகள் இருக்கும் இடத்துக்குச் செல்ல வாய்ப்புண்டு. அதுவும் முக்கியஸ்தர் ஒருவர் (அரச தலைவர், தலைமை அமைச்சர், அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதர்கள், மனித உரிமை ஆணையாளர் போன்றவர்கள்) சிறைச்சாலைக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் கைதிகள் அனைவரும் தத்தமது சிறை அறைகளில் அடைக்கப்பட்டிருப்பர். அது மிருகக்காட்சிச் சாலையில் ஒரு கொடிய விலங்கை அடைத்து வைத்திருக்கும்போது மக்கள் சென்று பார்வையிடுவதைப்போன்றதாக இருக்கும். இந்த நடைமுறைகள் எதுவும் லோஹான் ரத்வத்தையின் பயணத்தின்போது பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு அவர் திடீரென அங்கு போனமை காரணம் என்று கூறப்படுகின்றது.

**அமைச்சரைக் கட்டுப்படுத்த முடியுமா?**

அமைச்சர் ஒருவர் கூறுவதையே சிறைச்சாலை அதிகாரிகளும் ஊழியர்களும் செய்யவேண்டியிருக்கும். ஏனெனில் சிறைச்சாலை அதிகாரிகளின் பதவி நிலையைவிட அமைச்சரின் பதவி நிலை மேலானது. அமைச்சர் லோஹான் ரத்வத்தையைத் துப்பாக்கியுடன் சிறைக்குள் செல்ல அனுமதித்த சிறை அதிகாரி தண்டிக்கப்படவேண்டும் என்கிற கருத்துகள் வெளியாகியுள்ளன. ஒரு சிறைச்சாலையின் நிர்வாகக் கட்டமைப்புப் பற்றித் தெரியாதவர்களே இவ்வாறு கருத்துத் தெரிவிக்க முடியும். அமைச்சரல்லாத ஒருவர் அவ்வாறு சென்றிருந்தால் அது சிறைச்சாலை அதிகாரிகளின் தவறாகவே இருக்கும். ஆனால் அமைச்சர் ஒருவரைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் சிறை அதிகாரிகளுக்குக் கிடையாது.

**ஐ.நா. கூட்டத்தொடரும் சிறைச் சம்பவமும்**

இந்தச் சம்பவம் நடந்த மறுநாள் ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடர் தொடங்கியது. ஏற்கனவே இலங்கை அரசின் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம், முக்கிய வழக்குகளைத் திரும்பப்பெற்றது, துமிந்த சில்வாவை விடுதலை செய்தது போன்ற மனித உரிமை விடயங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த அறிக்கை வெளியிடுவதற்கு முதல் நாளன்றுதான் சிறைச்சாலைக்குப் பொறுப்பான லொஹான் ரத்வத்த கொழும்பில் இருந்து அனுராதபுரத்துக்குச் சடுதியாக உலங்கு வானூர்தியில் சென்று, மதுபோதையில் கைத்துப்பாக்கியுடன் களமிறங்கி, தமிழ் அரசியல் கைதிகளை மிரட்டிய சம்பவம் நடந்தது.

இந்தச் சம்பவம் தமக்கு நெருக்கடியைத் தரும்; என்பது அரசுக்கு நன்கு தெரியும். அவ்வாறான நெருக்கடி ஒன்று ஏற்படுவதற்கு முன்னரே அமைச்சர் தானாகவே பதவி விலகியிருக்கிறார். அரச தலைவரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

**லோஹான் ரத்வத்தையின் அரசியல்**

சிறீலங்கா சுதந்திரக் கட்சியைப் பூர்வீகமாகக் கொண்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சரின் மகனான லொஹான் ரத்வத்த பொது மக்கள் பெரமுன கட்சியைச் சேர்ந்த இன்றைய ஆட்சியாளரை வேண்டுமென்றே பகைத்துக்கொள்ள வாய்ப்பில்லை. அவ்வாறு பகைத்துக் கொண்டால், அவரது அரசியல் நடவடிக்கைக்கு அது பாதகமாக அமையும் என்பது அவருக்குத் தெரியும். இன்னொரு வகையில் பார்த்தால், இது ஒரு திட்டமிட்ட நாடகமாகக்கூட இருக்கலாம் என்று கருத இடமுண்டு.

சிங்கள அமைச்சர் ஒருவர் தமிழ் அரசியல் கைதிகளை முட்டுக்காலில் இருத்திக் கைத்துப்பாக்கியை நெற்றியில் வைத்து மிரட்டியது என்பது மிகவும் தவறானது என்பதைத் தலைமை அமைச்சர், அரச தலைவர் ஆகியோர் கருத்தில் எடுத்ததால் அவர் அந்தப் பதவியிலிருந்து விலகினார் அல்லது விலக்கப்பட்டார் என்றும், தமிழருக்கு எதிராக நடக்கும் மிகச் சிறிய நடவடிக்கைகளைக்கூட தற்போதுள்ள அரசு ஒருபோதும் மன்னிக்காது என்பதையும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்குக் காட்டுவதற்காகவே இந்தச் சம்பவம் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டிருக்கிறது என்று சந்தேகிப்பதற்கான

# கடைநிலை ஊழியர்களை கவனிக்கத் தவறிய அரசு

**சந்திரஹாசன் சுஜந்தினி**

கொரனோராப் பெருந்தொற்று நிலைமை காரணமாக எதிர்கொண்டுவரும் பொருளாதார நெருக்கடி நிலையில், மாதாந்தம் 1 லட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறுவோரிடம் குறிப்பிட்டளவான வரித் தொகையை அறவிடுவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட இந்த வரியால் அந்தத் தொகையளவில் சம்பளம் பெறுவோர் பாதிக்கப்படப்போவதில்லை. ஆனால் மிகவும் குறைந்தளவான மாதாந்தச் சம்பளத்தைப் பெறுகின்ற அரச சார்பற்ற, தனியார் துறைகளில் பணியாற்றுபவர்களின் நிலைக்கு அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. 5 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரத்துக்கு உட்பட்டதாகவே பல தனியார்துறை ஊழியர்களின் சம்பளத் தொகை காணப்படுகிறது. கடைகள், பதிப்பகங்கள், ஊடகங்கள், அரிசி ஆலைகள், வெதுப்பகங்கள் போன்ற பல இடங்களில் இந்தக் குறைந்தளவு சம்பளத்தில் பணிபுரிவோரால் தமது மாதாந்தத் தேவைகளைக்கூட நிறைவுசெய்ய முடியாத நிலைதான் சாதாரண இயல்புக் காலத்தில்கூடக் காணப்பட்டது. தற்போதைய கொரோனாப் பெருந்தொற்றுச் சூழலில் அவர்களின் நிலை மேலும் பரிதாபத்துக்கு உரியதாகியிருக்கிறது.



### தொழில் இழப்பும், சம்பளக் குறைப்பும்

கொரோனா முடக்க சூழலில் தமது நிறுவனத்தின் வருமானத்தில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்றுகூறித் தனியார் நிறுவனங்கள் பலவும் தமது ஊழியர்களை வேலை நிறுத்தம் செய்திருக்கின்றன. தொடர்ந்தியங்கும் ஒரு சில நிறுவனங்களோ ஊழியர்களின் ஊதியத்தை வெகுவாகக் குறைத்து வழங்கி வருகின்றன. வருமானம் குறைவாக ஈட்டுகின்ற காலத்தில் இது போன்ற நடவடிக்கைகளில் குதித்துள்ள இந்த நிறுவனங்கள் தாம் வருமானத்தை அதிகமாக ஈட்டிய காலங்களில் அந்த ஊழியர்களுக்கு அதிகரித்த சம்பளத்தைக் கொடுத்ததாகவோ, ஊழியர்களை அதிகளவில் பணிக்கமர்த்தியதாகவோ பதிவுகளில்லை. வருமானம் தடையின்றி வந்த காலத்தில்கூடக் குறிப்பிட்டளவான ஊழியர்களிடமிருந்து உழைப்பைப் பெற்றுக்கொண்டு, வரையறுக்கப்பட்ட அளவு ஊதியத்தையே வழங்கி வந்த குறித்த நிறுவனங்களின் இந்தச் செயல் கண்டிக்கத்தக்கதே. இத்தகைய நிறுவனங்களில் தொழில் புரியும் பலர் தொழில் பாதுகாப்பு அல்லது உத்தரவாதமின்றியே காணப்படுகின்றனர்.

**கடைகள், பதிப்பகங்கள், ஊடகங்கள், அரிசி ஆலைகள், வெதுப்பகங்கள் போன்ற பல இடங்களில் இந்தக் குறைந்தளவு சம்பளத்தில் பணிபுரிவோரால் தமது மாதாந்தத் தேவைகளைக்கூட நிறைவுசெய்ய முடியாத நிலைதான் சாதாரண இயல்புக் காலத்தில்கூடக் காணப்பட்டது**

### தொழிலாளர் பாதுகாப்பு இல்லை

வளர்ந்த நாடுகளில் (கனடா) தனியார் துறையினர் தமது ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளத்தைச் சட்டபூர்வமாக அரசுக்குத் தெரியப்படுத்தியே வழங்கி வருகின்றனர். அதன்பொருட்டு தொழிலாளர் சட்டங்களும் வரையறை செய்யப்பட்டுள்ளன. இதனால் தனியார் நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கான சம்பளத்தை அரசின் வரி மற்றும் சம்பளப் பொறிமுறைகளுக்கூடாகவே வழங்கிவருகின்றன. இதன் மூலம் ஊழியர்களின் சம்பளம், அவர்களுக்கான பாதுகாப்பு நிதியம், ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகள் எனப் பல விடயங்களையும் அங்கு இயற்றப்பட்டுள்ள தகுந்த சம்பளச் சட்டத்தின் பிரகாரம் செய்து வருகிறார்கள்.

அவர்களுக்கு வேலையிழப்பு ஏற்படும் பட்சத்திலும் அவர்களுக்கு உரியளவான சம்பளம் கிடைப்பதை அந்த நாட்டு அரசால் உறுதிப்படுத்த முடிகிறது. இது ஓர் அரசு தனது குடிமக்கள் விடயத்தில் காட்டுகின்ற கரிசனையைக் காட்டுகிறது.

அத்தோடு சமூகத்தில் அனைவருக்கும் சமமான நிலை பேணப்படவேண்டும் என்பதை இந்தச் சட்டம் உறுதிப்படுத்துகிறது.

இலங்கையில் ஆகக்குறைந்த சம்பளமாக மாதாந்தம் 16 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட வேண்டும் என்பது தொழிற் திணைக்களத்தின் சட்டமாக இருந்த போதிலும் நடைமுறையில் அவ்வாறு இடம்பெறுவதில்லை. பெரும்பாலும் குறைந்த சம்பளத்தை வழங்குவதுடன் ஊழியர்களைப் பயிற்சியாளர்களாகக் காட்டிவிடுவதிலேயே பல நிறுவனதாரர்கள் கில்லாடிகளாக இருக்கின்றனர். தொழிற் திணைக்கள ஊழியர்கள் இது குறித்து விசாரிப்பதற்குச் செல்லும்போது தாம் அண்மைக் காலத்தில் தான் பணிக்கு வந்தோம் என்று ஊழியர்களும் பொய் கூறுகின்றனர்.

தொழில் வழங்குநருக்கு எதிராகக் கருத்து வெளியிட்டால் தமக்குத் தற்போதிருக்கின்ற வேலையும் இல்லாது போய்விடும் என்ற பயம் தொழில்புரிவோருக்கு உண்டு. ஆனால், கனடாபோன்ற நாடுகளில் சம்பளம் அரச பொறிமுறைக்கூடாகவே வழங்கப்படுவதால், கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் கனடா அரசு அவர்கள் பெற்ற சம்பளத் தொகையில் 80 வீதத்தை தொழில் இல்லாத காலத்தில் வழங்கி வருகிறது. இவ்வாறு வழங்கப்படும் பணம் மக்களிடமிருந்து பெற்ற வரிகளின் மூலமே ஈடு செய்யப்படுகிறது.

### இலங்கையில் இறுக்கமில்லை

இலங்கையைப் பொறுத்தவரை தொழில் சட்டங்கள் இறுக்கமாக இல்லை. இதனாலேயே பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு முதலீடுகளைச் செய்வதில் 1977ஆம் ஆண்டிலிருந்து ஆர்வம் காட்டியபடி இருக்கின்றனர். கடமையின்போது இறந்தவருக்கு நஷ்ட ஈடுகள் வழங்கப்படவேண்டும் என்ற சட்டம்கூட இங்கு இறுக்கமாக இல்லை. இந்த நிலமை மாற்றப்படவேண்டும். இதுவிடயத்தில் இறுக்கமான நடைமுறைகள் தேவை. அத்தோடு கடைநிலை ஊழியர்கள் விடயத்தில் கவனம் செலுத்தவும் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும் முற்படவேண்டும். ■

## மேடையேற்ற...

வாய்ப்புக்களையும் மறுக்க முடியாது. ஆகவே இது மேடையேற்றப்பட்ட நாடகமாகக் கூட இருக்கலாம்.

### பொறுப்பாகக் கையாள வேண்டும்

இதற்கு முன்னர் இங்கு நடந்த சிறைச்சாலைப் படுகொலைகள், தாக்குதல்கள் எனப் பல விடயங்கள் சிங்களக் கைதிகளாலும், சிறைச்சாலை ஊழியர்களாலும்தான் நடந்தேறின என்பதைத் தமிழர்கள் ஒருபோதும் மறந்துவிடமுடியாது. இந்தச் சம்பவத்தை ஊடகங்களும் மனித உரிமை அமைப்புகளும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் பொறுப்புடன் கையாள வேண்டும். எஞ்சியுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதற்குரியதாக இதனை வழிப்படுத்தவேண்டும். குறிப்பிட்ட அமைச்சர் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்கு அப்பால் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற அழுத்தங்களையே தமிழ் அரசியல் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இந்தச் சம்பவத்தை வைத்து அரசியல் நடத்துவது விடுதலைக்குக் காத்திருக்கும் கைதிகளுக்குச் செய்யும் துரோகமாகும்.

தனது உறவுகளிடமிருந்தும் தான் வாழ்ந்த சமூகத்திடமிருந்தும் தனித்து விடப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் கைதியின் மனநிலை எப்போதுமே பாதிப்புக்குள்ளாகியிருக்கும். இந்த நிலையில் ஒரு கைதியை மேலும் துன்பப்படுத்துவது மனித நடத்தையையே கொச்சைப்படுத்துவதாயும் கைதியின் மேலும் துன்புறுத்துவதாகவுமே இருக்கும்.

குரலற்றவர்களின் குரல் என்ற அமைப்பு அண்மையில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தது. அதில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கான சரியான தீர்வு கிடைக்கும்வரை நாடாளுமன்றக் கூட்டத்தொடரைப் புறக்கணிப்பதன் ஊடாக இந்த விடயத்தில் அழுத்தத்தை வழங்க முடியம் என விநயமாகக் கேட்டிருக்கிறது. அதுவும்கூட கவனிக்கத்தக்க கோரிக்கைதான்.

# ஐ.நா மனித உரிமைக்கூட்டமும் தமிழர் அறிக்கைகளும்



■ வி.அருணாசலம் ■

> அவசரகாலப் பிரகடன நடைமுறை படையினர் வியாபகத்தைத் தூண்டியிருக்கிறது, இலங்கை விடயத்தில் உறுப்பு நாடுகளின் கண்காணிப்பு அவசியம், முன்னேற்றங்களைச் இறுக்கமாகச் செயலில் காட்டவேண்டும், மோச மான நிலையில் சமூக பொருளாதார குறிகாட்டிகள் காணப்படுகின்றன

சாதாரணமான ஒரு பிரச்சினையைக்கூட நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றால், அந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளை விசாரித்த பின்னர், அந்த அடிப்படையை வைத்தே நீதிபதி தீர்ப்பு வழங்குவது வழக்கம். இதைச் சாதாரணமாகத் தமிழ்த் திரைப்படங்களில்கூடக் காணமுடியும். இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரில் பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கொல்லப்பட்டவர்களுக்கு அருகில் விடுதலைப் புலிகளும் அரச படையினரும் ஆயுதம் தாங்கிய நிலையில் நின்றார்கள் என்பதும் இவ்விரு தரப்புகளும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டிருந்தார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த பொதுவான விடயமாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை மற்றும் சில மனித உரிமை அமைப்புகள் இலங்கைப் படையினர் போர்க்குற்றம் செய்தனர் என்றும் அவ்வாறு குற்றமிழைத்த படையினர் தண்டிக்கப்படவேண்டும் எனக் குரல் கொடுத்தாலும் தமிழ் மக்கள் தரப்பில் விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ அமைப்பாகத் தற்போதும் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நாடு கடந்த தமிழீழ அமைப்போ அதன் பிரதமராகச் செயற்படும் உருத்திரகுமாரனோ இதுவரை உரிய தரப்பினரிடம் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் மிச்செல் பச்செட்டின் அறிக்கையில் ஆதாரத் தகவல்களைத் திரட்ட முடியாத நிலை உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஆதாரங்களை எப்போதோ தமிழர் தரப்பு கையளித்திருக்கவேண்டும்.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கூட ஐ.நா. மனித உரிமை ஆணையகம் தேடும் ஆவணங்களைத் தயாரித்து கையளித்ததாகத் தகவலில்லை. அதிலுள்ள சிலர் தனிப்பட சில முயற்சிகளை எடுத்திருக்கக்கூடும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இதுவிடயத்தில் உத்தியோகபூர்வமாக எதுவும் இடம்பெற்றதில்லை. போர் முடிந்து 12 வருடங்கள் ஆகியும் போர்க் குற்ற விசாரணை தொடர்பில் அறிக்கை ஒன்றை ஒற்றுமையாகத் தமது கூட்டிலுள்ளவர்களை வைத்தே தயாரிக்க முடியாத சூழலிலேயே கூட்டமைப்பினர் உள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையினர் விடுதலைப் புலிகளின் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைக்கப்போவதில்லை. அதற்கான முழுப் பொறுப்புக்கூறலையும் நாடு கடந்த தமிழீழ அமைப்பே மேற்கொள்ளவேண்டும். எந்த முக்கியத்துவமும் பெற்றிராத கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன், ''இனிமேலும் ஐ.நா. சபையை இலங்கை அரசு ஏமாற்ற முடியாது'' என்று அறிக்கை விட்டிருக்கிறாரே தவிர, ஐ.நா. கோரும் அடிப்படை ஆதாரங்களை 12 வருடங்கள் கடந்த பின்பும் தேடிக் கொடுக்கவில்லை என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.



இறுதிப் போரில் 10 ஆயிரத்துக் குட்பட்ட மக்கள் இறந்ததற்கான ஆதாரம் பதிவுகளில் உள்ளன. தமிழ் அரசியல்வாதிகள்கூறும் 40 ஆயிரம் பேர் இறந்தார்கள் என்றால், இன்னும் 30 ஆயிரம் பேரின் பெயர்ப் பட்டியலை அவர்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குச் சமர்ப்பிக்கவேண்டும். மன்னார் ஆயார் ராஜப்பு ஜோசப் குறிப்பிட்டதுபோல 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் இறந்திருக்கிறார்கள் என்றால் அவரது தரப்பால் அதை நிரூபிக்கும் வகையில் இன்னும் 1 லட்சத்து 30 ஆயிரம் பேரின் தரவுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். தமிழ்நாடு அரசியல்வாதி வைகோ குறிப்பிடுவதுபோல 1 லட்சத்து 46 ஆயிரம் மக்கள் இறந்திருந்தால் அவரது தரப்பால் இன்னும் 1 லட்சத்து 36 ஆயிரம் பேரின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும்.

போர் முடிந்து 12 ஆண்டுகள் ஆகிய போதும் கூட எந்தத் தமிழ்க் கட்சிகளும் இந்தப் பட்டியலைத் தயாரிக்கவில்லை. நாடு கடந்த தமிழீழத் தரப்பினரும் அந்த முயற்சியில் இறங்கவில்லை. இது ஒரு வெறும் அரசியல் கோரிக்கையாக முன்னகர்த்தப்பட்டு வருகிறதே தவிர, அதனை நிரூபிப்பதற்கான ஆகக் குறைந்தபட்ச நடவடிக்கைகளில் எந்தவொரு தமிழ்க் கட்சியும் ஈடுபட்டதில்லை என்பதே உண்மை. அவை வாக்குகளைப் பெறுவதற்கு இதனைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அப்பால் இது குறித்து அக்கறைப்படுவதில்லை.

### மிச்செலின் அறிக்கை

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செலின் அண்மைய அறிக்கையில் இலங்கை தொடர்பாக ஒரு சில விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அவசரகாலப் பிரகடன நடைமுறை படையினர் வியாபகத்தைத் தூண்டியிருக்கிறது, இலங்கை விடயத்தில் உறுப்பு நாடுகளின் கண்காணிப்பு அவசியம், முன்னேற்றங்களைச் இறுக்கமாகச் செயலில் காட்டவேண்டும், மோசமான நிலையில் சமூக பொருளாதார குறிகாட்டிகள் காணப்படுகின்றன, மாணவர்கள் மற்றும் மருத்துவர்கள் மீது அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படல்வேண்டும், உரிய ஆதாரங்களைத்திரட்ட வேண்டும் (யார் திரட்ட வேண்டும் என்பது குறிப்பிடப்படவில்லை. யாரிடமும் கோரப்படவுமில்லை. ஆனால், இலங்கை அரச தரப்பு பல்வேறுபட்ட தரவுகளை கடந்த 12 வருட காலத்தில் சேகரித்திருக்கிறது) துமிந்த சில்வாவின் விடுதலையில் நம்பிக்கையின்மை, கடற்படைத் தளபதி கருணாகொட விடயத்தில் கரிசனை செலுத்தப்படல்வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும் (இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈடு பற்றி வலியுறுத்தப்பட்டிருக்கிறது) எனப் பரவலாக இலங்கை விடயத்தில் பல விடயங்கள் பேசப்பட்டபோதிலும் திட்டவட்டமாகத் தமிழர் விடயத்தில் கவனம் செலுத்தவில்லை.

மிச்செலின் அறிக்கையின் பின்னர் இலங்கை சார்பாக இத்தாலியில் இருந்தவாறு காணொலித் தொழில்நுட்பத்தின் மூலம் பதிலளித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர்.ஜி.எல்.பீரிஸ், ''ஐ.நா. மனித உரிமை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுகளை இலங்கை அரசு அடியோடு மறுக்கிறது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

(17ம் பக்கம் பார்க்க)

# "காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தை சர்வதேசம் கண்டுகொள்ளவில்லை"

**▪ நியூட்டன் ▪**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்குமாறு போர் முடிந்த கடந்த 12 ஆண்டுகளாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பல்வேறு வழிகளில் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்கள். 2017 மாசி 20ஆம் திகதி தொடக்கம், வடக்குக் கிழக்கின் 8 மாவட்டங்களைச் சேர்ந்த இந்த உறவுக்காரர்களை இணைத்து உணவு தவிர்ப்புகள், ஊர்வலங்கள், முக்கிய பிரமுகார்களைச் சந்தித்தல் போன்ற விடயங்களில் ஓர் அமைப்பாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குரிய பல அமைப்புக்களில் ஒன்றின் செயலராகப் பணியாற்றி வருகிறார் திருமதி லீலாதேவி ஆனந்த நடராஜா. அண்மையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அந்த அமைப்பின் செயற்பாடுகள் பற்றி அவர் தெளிவுபடுத்தியிருந்தார்.




**இதுவரை தமது பிள்ளைகளைத் தேடிய பெற்றோர் நூறுக்குமேல் இறந்துவிட்டார்கள். எங்களுக்கு எங்கள் பிள்ளைகள்தான் முக்கியம், போர் முடிந்ததன்பின் நாங்களே எமது பிள்ளைகளை படையினரிடம் கையளித்தோம் - என்றார் திருமதி லீலாவதி ஆனந்த நடராஜா**

### ஜெனீவா வரை சென்றோம்

2018, 2019ஆம் ஆண்டுகளில் தமது அமைப்பின் சார்பில் ஜெனீவா மனித உரிமைக் கூட்டத்தொடர்களில் கலந்துகொண்டனர் எனவும் 2020இல் கலந்துகொள்ளச் சென்று கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இடையில் திரும்பினர் எனவும் அவர் குறிப்பிட்டார். அத்தோடு சர்வதேசம் தமது கோரிக்கைகளுக்குச் செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை என்றும் குறைப்பட்டார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இந்த அமைப்பு மட்டுமல்லாது தமிழ் அரசியல்வாதிகளும் பல குழுக்களாகப் பிரிந்து கலந்துகொள்ளும் ஒரு விடயமாக வருடா வருடம் ஜெனீவாக் கூட்டத்தொடர் ஆகியிருக்கிறது. ஆனால், இவர்கள் ஜெனீவாக் கூட்டத்தில் எதுவரை செல்கிறார்கள் என்பதே கேள்வி. இந்த வருடம் ஜெனீவாக் கூட்டத்தொடர் ஆரம்பித்தபோது கோவில் கொடியேற்றம்போல தமிழ் அரசியல்வாதிகள் கடிதம் அனுப்பியதும் அந்தக் கடித விவகாரத்திலேயே புலிகள் போர்க் குற்றம் புரிந்தார்கள், புரியவில்லை என்ற விவாதங்களும் ஒரே கட்சிக்குள் ஆளையாள் காட்டிக்கொடுக்கின்ற ஊடகப்பேச்சுகளும் நடந்தன. தற்போதும் அது தொடர்கின்றன. ஆனாலும் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக வருடா வருடம் ஜெனீவா வரை சென்று வந்த வாய்ப்பை இந்த முறை பலரும் இழந்திருக்கிறார்கள்.

ஜெனீவாக் கூட்டத்தொடரை ஒரு சாட்டாக வைத்துச் செல்பவர்கள் நல்லூர்த் திருவிழாவில் மூல விக்கிரகத்தை வணங்க முடியாத நிலையில் வெளிவீதியில் கச்சான் வியாபாரிகளைச் சந்தித்துக் கதைத்துவிட்டு வருவதுபோல ஒரு நிமிடம், ஒன்றரை நிமிடம் பேச்சுப்போட்டி நடத்திவிட்டு வருவதே கடந்த 12 ஆண்டுகளாக நடந்தன. அதனால் எந்தப் பயனும் இல்லையென்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம்.

### ஐ.நாவின் பரிந்துரை

மனித உரிமை ஆணையாளர் மிச்செல் தனது உரையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் இந்தத் தடவை இரண்டு விடயங்களைப் பரிந்துரை செய்திருக்கிறார். இலங்கை அரசின் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் தனது நடவடிக்கைகளைப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் செயற்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் அவர்களுக்கான நஷ்ட ஈடுகள் வழங்குவதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து ஒரு விடயத்தை மிச்சேல் அம்மையார் பூடகமாகக் கூறியிருக்கிறார். அதாவது பாதிக்கப்பட்டவர்கள் காணாமல் போன தமது உறவுகளை உயிருடன் மீட்க முடியாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி இழப்பீடுகளைப் பெறுங்கள் என்பதே அதன் உள்ளார்ந்த அர்த்தமாகும்.

இந்த விடயத்தைத்தான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அமைப்பின் செயலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார். காணாமல் ஆக்கப்பட்டவர்களை உயிருடன் அவர்களது குடும்பத்திடம் ஒப்படைக்கவேண்டும் என மனித உரிமை ஆணையாளர் இலங்கை அரசை வலியுறுத்தவில்லை.

இறுதிப்போரை நடத்துவதற்கு இலங்கை அரசுக்கு ஆயுத உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய நாடுகள் ஒருபோதும் இலங்கை அரசை இதுவிடயத்தில் நிர்ப்பந்திக்கப்போவதில்லை.



### இழப்பீட்டை வாங்க மாட்டோம்

தொலைக்காட்சிச் செவ்வியின்போது, இழப்பீடு தந்தால் வாங்குவீர்களா என்று கேட்டதற்கு, ஒருபோதும் நாம் அதற்குச் சம்மதிக்க மாட்டோம் இதுவரை தமது பிள்ளைகளைத் தேடிய பெற்றோர் நூறுக்குமேல் இறந்துவிட்டார்கள். எங்களுக்கு எங்கள் பிள்ளைகள்தான் முக்கியம், போர் முடிந்ததன்பின் நாங்களே எமது பிள்ளைகளை படையினரிடம் கையளித்தோம் - என்றார் திருமதி லீலாவதி ஆனந்த நடராஜா. காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பு பல பிரிவுகளாகப் பிரிந்து செயற்படுவது தொடர்பில் அவரிடம் கேட்டபோது, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் எமது அமைப்புக்கு மேலதிகமாக வேறு அமைப்புகளும் செயற்படுகின்றன. அவர்கள் வெளிநாடுகளில் இருந்து பணத்தைப் பெற்றுத் தமது பொக்கற்றுகளை நிரப்புவதற்காகச் செயற்படுகின்றனர். நாங்கள் வடக்குக் கிழக்கிலுள்ள 8 மாவட்டங் களையும் இணைத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பு எனச் செயற்படுகிறோம் என்றார்.

ஐ.நா. மனித உரிமைச் செயலரின் கருத்தும், நல்லாட்சி அரசின் காலத்தில் அவ்வாறு எவரும் இல்லை என ரணில்விக்கிரமசிங்க வெளிப்படையாகக் கூறிய கருத்தும் தற்போதைய அரசும் அவ்வாறே கூறியிருப்பதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகங்கள் திறக்கப்பட்டிருப்பதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அமைப்பு பல கூறுகளாகப் பல திசைகளில் செல்வதும் தமிழ் அரசியல்வாதிகள் இதுவிடயத்தில் முனைப்பாகச் செயற்பட்டு 12 வருட காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரைக்கூட மீட்க முடியாது போனதும் இனி என்ன நடக்கப்போகிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

திருமதி லீலாவதி கூறுவதுபோல நாங்கள் கூறுவது எதையும் சர்வதேசம் கேட்பதாக இல்லை என்பது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் 12 வருடங்களாக நிதர்சனமாக உள்ளது. ஆனால், தமிழ் அரசியல்வாதிகளோ சர்வதேசம் தமக்குப் பின்னால் நிற்கிறது எனக் கதை விடுகின்றனர். ▪

# மிதிலா

**நா.சத்தியபாலன்**

## 9



மனதில் நிறைவும் மகிழ்ச்சியும் வாழ்வின் அம்சங்களில் துளிர்ப்பும் கலகலப்புமாய்க் கழியுமெனில் காலம் விரைந்தோடுவது போலொரு உணர்வு தோன்றுகிறது. பாடசாலையில் கடமைகள் முடிந்து வீடு திரும்பும்போது மனது சிறகடித்துக் குதூகலிக்கிறது.

வீடு - மகேஷ் - அம்மா - கோமதி அக்கா - பி.எம் அங்கிள் என இனிய மனிதர்களின் அழகிய பூங்காவாக மாறிய இந்த வீட்டின் ஒரு செல்லப்பிள்ளையாய், அன்பு மகளாய், இனிய மனைவியாய் என் வாழ்க்கை எனக்குத் தந்திருக்கும் ஆசீர் வாதங்களை எண்ணும்போது மனம் நிறைந்து போகிறது.

வெளியே எங்கும் போகாமல் இந்த வீட்டுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருவதிலும், வீட்டைச் சூழவே குடிகொண்டு வருகிற பசுமையின் அழகில் மயங்கி நிற்கவுமே மனம் ஏங்குகிறது.

எனது மனதைப் புரிந்துகொண்டு மௌனமான அன்பாலும் இனிய காதலாலும் என்னை நிறைக்கும் மகேஷை நினைக்கையில் அவரது கையிலேயே ஒரு மழலைபோல் தவழவேண்டும் போலிருக்கிறது. நேற்று விடுமுறை நாளென்கிற சந்தோசத்தோடு எழுந்து குளித்து எனது மகேஷ் எனக்கு மிகப் பொருத்தமாய் இருக்குமென்று தேடித்தந்த வானத்து நீல நிற ஆடையை அணிந்துகொண்டு வெளியே வந்தபோது எதிர்ப்பட்ட அம்மா, "இப்ப என்ர செல்ல மகள் நல்ல சந்தோசத்தோட சிரிப்பு மாறாத முகத்தோட திரியிறதைப் பார்க்க மெய் மெய்யாய் நல்ல சந்தோசமாய் இருக்கடா" என்று சொல்லியபடியே என்னை அணைத்து உச்சியில் முத்தமிட்டபோது என் மனதுக்குள் "சொல்லு சொல்லு" என என்னை உந்துகிற அந்த இனிய சந்தோசத்தை வெளிப்படையாய்ச் சொல்லிவிடுவோமென ஒரு நினைவு தோன்றியபோதும் அந்தச் சந்தோசமான சந்தேகத்தை முதன் முதலில் மகேஷிடம்தான் பகிர்ந்துகொள்ள வேண்டுமென என் உள்ளத்தினடியில் பூவாய் மலர்ந்து ஒரு பூக்காடாய் மாறிக்கிடக்கும் மகேஷ் மீதான காதல் அந்த இனிய ரகசியத்தை அவனுடனேயே முதலில் பகிர்ந்துகொள்ளவேண்டுமென ரகசியமாய் என்னுள் மணம் பரப்பிற்று.

> **எனது மனதைப் புரிந்துகொண்டு மௌனமான அன்பாலும் இனிய காதலாலும் என்னை நிறைக்கும் மகேஷை நினைக்கையில் அவரது கையிலேயே ஒரு மழலைபோல் தவழவேண்டும் போலிருக்கிறது.**

இரவு உணவை முடித்துக்கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தபோது வழக்கம்போல புத்தகமொன்றுடன் படுக்கையில் சரிந்து கிடந்த மகேஷிடம்போய் அவரது கையிலிருந்த புத்தகத்தை மெதுவாக வாங்கி ஒரு புறமாக வைத்தேன்.


"என்ன?" என்பதுபோல் என்னை ஏறிட்ட மகேஷிடம், "உங்கடை புத்தகங்களைவிட இன்ரஸ்டிங்கான ஒரு கதை இருக்கு இப்ப. ரெண்டொரு நாளாய் உங்களிட்ட அதைச் சொல்லிவிட வேணுமெண்டு நினைப்பன். ஆனா ஏனோ ஒரு தயக்கம்"

நான் பீடிகையோடு பேசப்பேச மகேஷின் மனதில் ஆர்வம் அதிகரிப்பது புரிந்தது.

"என்ன... என்ன கதை சொல்லுங்கோவன் என்ரை அச்சாக்குஞ்செல்லே..." என்று கெஞ்சிய மகேஷின் அருகே சரிந்து படுத்தபடி, "இப்ப ரெண்டு மாசமாய் என்ர பீரியட் தள்ளிக்கொண்டுபோகுது... முதலிலை நான் அதைக் கவனிக்கேல்லை. இந்த மாதமும் ஒண்டையும் காணேல்லை... என்ர மகேஷ் கண்ட கனவு பலிக்கப்போகுதுபோல கிடக்குது... ஒரு குட்டி மகேஷோ... குட்டி மிதிலாவோ வரப்போகினம்போல..." என்று நான் சொல்லி முடிக்க முன்னரே "அப்பிடியா என்ர அம்முக்குட்டி அம்மாவாகப் போறாளா... நான் அப்பாவாகப் போறனா...? என்ர ஆண்டவனே நன்றி ஐயா. என்ர நெடுநாள் கனவு பலிக்கப் போகுதா...?" என்றபடி என்னை அள்ளித்தன் மடியில் இட்டுக்கொண்டு முத்தங்களால் என்னைத் திணறடித்தார்.

எனது நிலையை அம்மாவிடம் சொன்னபோது, "என்ர அம்மாளாச்சி எல்லாத்தையும் பாத்துக்கொள்ளாச்சி... என்ர பிள்ளை ஆசைப்பட்டமாதிரி ஒரு பேரனோ, பேத்தியோ கிடைக்கவேணும்... ஒரு கஸ்ரமும் இல்லாமல் என்ர பேரக்குஞ்சை என்ர மடியிலை தவழ வைக்கவேணும் என்ர பெருமானே..." என்று உளமுருகவேண்டினாள்.

நிறைந்த மகிழ்ச்சியில் அந்தக் குடும்பத்தின் எல்லா உறவுகளும் நிம்மதியில் நிறைந்தன. (தொடரும்)




# பையின் வாழ்க்கை

தரமான திரை

கடல் பயணம் ஒன்றில் தனது குடும்பத்தை இழக்கிறான் பதின்ம வயதுச் சிறுவன். புலி ஒன்றுடன் சிறிய படகு ஒன்றில் கடலில் உயிர்பிழைக்கவேண்டியிருக்கின்ற அவனது வாழ்க்கைப் போராட்டத்தை விவரிக்கும் படமே இது. படகிலுள்ள புலி அதிலிருந்த சிறிய விலங்குகளைக் கொன்று தனது இரையாக்குவதுடன் சிறுவனுக்கும் உயிராபத்தை ஏற்படுத்துகிறது. புலியால் ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் கடலில் திக்குத் தெரியாமல் தத்தளிக்கிறான் சிறுவன். அவன் அந்தக் கடல்பயணத்தில் எதிர்நோக்கும் துன்ப துயரங்கள் என்ன என்பதைக் காட்சிப்படுத்துகிறது படம். அவை முடிவுக்கு வந்தனவா இல்லையா என்பது படத்தின் மீதிக்கதை. ஆனால் அதற்குள் உயிர்வாழ்தல் என்கிற பெரும் வாழ்க்கைத் தத்துவத்தையும் மனித - விலங்கு வாழ்வியல் வேறுபாட்டையும் விளக்கிவிடுகிறது 2012ஆம் ஆண்டில் வெளியாகிய இந்தப் படம். வசூலிலும் விமர்சன ரீதியிலும் வெற்றியீட்டிப் பாராட்டுகளைப் பெற்றுச் சிறந்த படம் - சிறந்த நாடகக் கதை, சிறந்த இயக்குநர் உட்பட மூன்று கோல்டன் குளோப் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது. 85ஆவது ஒஸ்கர் விருதில் சிறந்த படம், சிறந்த தழுவல்



திரைக்கதை உள்ளிட்ட நான்கு விருதுகளை வென்றது.

பையின் தந்தை இந்தியாவின் பாண்டிச்சேரியில் விலங்குகள் காட்சியகம் ஒன்றை நடத்துகிறார். அந்தக் காட்சியகத்திலிருந்த ரிச்சர்ட் பார்க்கர் என்கிற புலியைப் பைக்கு மிகவும் பிடிக்கிறது. புலி என்றால் பிற விலங்குகளை அடித்துக் கொன்று அவற்றின் மாமிசத்தை உண்ணும் ஒரு கொடூர விலங்கு என்பதைப் பைக்கு உணர்த்துவதற்காக அந்தப் புலி ஆடு ஒன்றை அடித்துக் கொன்று தின்பதை அவன் காணும்படி செய்கிறார் தந்தை.

பூர்வீகத்தில் இந்துவாக வளர்கிற பை 12 வயதாகையில் கிறிஸ்தவ சமயத்தைப் பற்றித் தெரிந்துகொள்கிறான். பின்னர் இஸ்லாத்தில் அவனுக்கு ஆர்வம் ஏற்படுகிறது. மூன்று சமயங்களையும் கடைப்பிடிக்கிறான். 16 வயதை அடைந்தபோது அவனுடைய அப்பா அந்த விலங்குக் காட்சியகத்தை மூடிவிட்டு, குடும்பத்தோடு கனடாவுக்குச் சென்று அங்கு விலங்குகளை விற்கத் தீர்மானிக்கிறார். அப்போது பைக்குக் காதல் ஒன்று முளைக்கிறது. ஆனால், அதை இழந்து, திட்டமிட்டபடி கப்பல் ஒன்றில் விலங்குகளையும் ஏற்றிக்கொண்டு கனடா நோக்கிப் பயணிக்கிறது பையின் குடும்பம்.

**2012ஆம் ஆண்டில் வெளியாகிய இந்தப் படம். வசூலிலும் விமர்சன ரீதியிலும் வெற்றியீட்டிப் பாராட்டுகளைப் பெற்றுச் சிறந்த படம் - சிறந்த நாடகக் கதை, சிறந்த இயக்குநர் உட்பட மூன்று கோல்டன் குளோப் விருதுகளுக்கு பரிந்துரைக் கப்பட்டது.**

ஆழ்கடலில் கப்பல் பெரும்புயலில் சிக்குகிறது. கப்பலின் மேல் தளத்தில் நின்று புயலின் கொடூரத்தைப் பார்க்கின்ற பை தனது பெற்றோரைத் தேடுகிறான். அப்போது கப்பல் அலுவலர் ஒருவர் பையை ஓர் உயிர்காப்புப் படகினுள் தள்ளுகிறார். தனது குடும்பமும் கப்பல் அலுவலர்களும் அந்தக் கப்பலோடு கடலில் மூழ்கிப் போகச் சிறிய படகில் பை மாத்திரம் தப்பிக்கிறான். புயல் ஓய்கிறது. விடிகிறது. பையின் அந்தச் சிறிய படகில் காயமுற்ற வரிக்குதிரை ஒன்றும், ஓர் ஒராங்குட்டான் குரங்கும் இருக்கின்றன. அப்போது படகின் அடியிலிருந்து கழுதைப்புலி ஒன்றுமேலே வந்து, வரிக் குதிரையைத் தாக்கிக் கொல்கிறது. ஓரங்குட்டானையும் தாக்கிக் காயப்படுத்துகிறது. அந்தக் கழுதைப்புலி மீது ஆத்திரமும் வரிக் குதிரை, ஓரங்குட்டான் மீது பரிதாபமும் படுகின்றபோது, படகின் அடிமட்டத்திலிருந்து திடீரென்று புலி பாய்ந்து வருகிறது. அது கழுதைப் புலியை அடித்துக் கொன்று தின்றுவிடுகிறது.

இந்தக் காட்சிகள் கடலில் மிதக்கும் அந்தச் சிறிய படகிலுள்ள விலங்குகள் ஒன்றையொன்று கொன்று உணவாக்கி உயிர்வாழும் நிலையையும் வலியன பிழைக்கும் என்கிற கோட்பாட்டையும் பைக்குள் தோற்றுவிக்கின்றன. அதனால், அந்தப் புலியால் தனக்கு ஆபத்து வந்துவிட்டதை உணர்கிறான் சிறுவன். மற்றைய விலங்குகளைக் கொன்று உணவாக்கிவிட்ட புலியின் பார்வை சிறுவனின்

*பையின்...*

மீது விழுகிறது. படகில் அவசரத் தேவைக்கான உணவும் நீரும் இருந்தாலும் புலியின் கண்ணில் படாமல் கவனமாக இருக்க வேண்டியதாகிறது. புலியோடுகூட இருந்தால் ஆபத்து என்பதை உணர்ந்து துடுப்புகள் மரத்துண்டுகளைக் கொண்டு ஒரு மிதப்பத்தைக் கட்டி நீளக் கயிற்றில் அதைப் படகில் கட்டி அதில் ஏறி மிதக்கிறான். அதில் போன பிறகும், புலிக்குத் தேவையான உணவைக் கொடுக்காவிட்டால் தனது உயிருக்கு ஆபத்து என்பதால், மீன் பிடிக்கத் தொடங்குகிறான். மழைநீரைச் சேகரித்து குடிக்கிறான்.

ஒருமுறை மீனை வேட்டையாடக் கடலில் இறங்கும் புலியால் மீண்டும் படகில் ஏற முடியாமல்போக அது கடலில் தத்தளிக்கிறது. மர ஏணியைப் பயன்படுத்தி அதைப் படகில் ஏற்றுகிறான் பை. ஓரிரவில் ஒரு பெரும் திமிங்கிலம் கடலிலிருந்து எழுந்து படகில் இருந்த உணவை



யெல்லாம் கடலில் விழச்செய்துவிடுகிறது. பின்னர் பசியின் கொடுமை தாங்காமல் மீனைப் பிடித்துப் பச்சையாக உண்கிறான். பல நாள்கள் இவ்வாறு அவதிப்பட்ட பிறகு பை இனிமேலும் தான் சிறிய மிதப்பத்தில் பயணத்தைத் தொடர முடியாது என உணர்கிறான். புலியோடு படகில் போய்ச் சேர்ந்தால்தான் பிழைக்க முடியும் என்றும், புலியிடம் பாசமாக இருந்தால்தான் அதுவும் உயிர்பிழைக்கும் என உணர்ந்து புலிக்குப் பயிற்சி அளிக்கிறான். புலிக்கும் இதே நிலைதான் ஏற்படுகிறது. பையுடன் சேர்ந்திருந்தால் தான் உணவு கிடைக்கும் என்கிற சிந்தனையைப் புலிக்குள் ஏற்படுத்தித் தன்னைத் தற்காத்துக் கொள்ள முயற்சிக்கிறான். அவனது முயற்சிகள் என்னவாகின? அந்தப் புலியின் அச்சுறுத்தலையும், கடல் ஆபத்துகளையும் அவன் எவ்வாறு எதிர்கொள்கிறான்? இவையெல்லாம் முடிவுக்கு வந்தனவா, இல்லையா? என்பதுதான் மீதிக்கதை.

இதே பெயருடைய நாவலை அடிப்படையாகக் கொண்ட இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார் ஆங் லீ. 5 வயதுப் பையாகக் கவுதம் பெலுரும், 11 வயதுப் பையாக அயூஷ் டாண்டனும், 16 வயதுப் பையாக சுரஜ் சர்மா (அதிக காட்சிகளில் வரும் முக்கிய பாத்திரம்) இறுதியாக இந்தக் கதையைச் சொல்லும் வயது முதிர்ந்த பையாக இர்ஃபான் கான் எனப் பல பாத்திரங்களில் பையின் வாழ்க்கை காட்டப்படுகிறது.

பல வாரங்கள் கடலில் தத்தளித்தபின்னர் மெக்சிக்கோவில் கரைசேரும் பைக்கும் புலிக்கும் இடையில் இனம்புரியாத ஓர் உறவு முளைத்துவிடுகிறது. ஆனாலும் கரைசேர்ந்த புலி பையைவிட்டுக் காட்டுக்குள்போகிறது. தொடக்கத்திலிருந்த புலியின் குணத்தை முற்றிலுமாக மாற்றிப்போட்டதை உணர்த்தும் காட்சி அது. போகும்போது புலி திரும்பி தன்னை ஒருமுறை பார்க்கும் என்று எதிர்பார்த்த பைக்கு ஏமாற்றமே கிடைக்கிறது. உடல் இயலாமல்போகக் கரையில் விழுந்து கிடக்கின்ற பையை அங்கே வந்த சிலர் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்கிறார்கள். பை உயிர்பிழைக்கிறான்.

உண்மையில் பை சொல்லும் அந்தப் புலி உண்மையான புலிதானா அல்லது பை என்கிற மனிதனுக்குள் தன்னைத் தற்காத்துக்கொள்வதற்காக எழுந்த விலங்குணர்வின் பிரதிபலிப்பா என்கிற கேள்வியை எழுப்பி முடிகிறது படம்.

# நம்மவூர்ச் சுத்துமாத்து

## நுட்பமாக ஊடுருவும் பராமரிப்பாளர்கள்

**■ கோகிலா - அளவெட்டி ■**

தற்போது யாழ். குடாநாட்டில் வயோதிபர்களைப் பராமரிக்கும் தொழில்முறையொன்று சட்டபூர்வமாக நடக்கிறது. இது காவலாளிகளை இயக்கும் நிறுவனங்களைப்போல பெரியளவில் ஆளணிகளை வைத்துச் செயற்படுத்தப்படுகிறது. இதற்கான விளம்பரங்கள் பத்திரிகைகள், முகநூல், இணையத்தளங்கள் எனப் பல்வேறு மட்டங்களிலும் உலவருகின்றன.

இந்த விளம்பரங்களைப் பாரத்துவிட்டும், இந்தத் திட்டம் குறித்தும் அறிந்தவர்கள் தம்மால் கவனிக்கவியலாத தாய், தந்தையர், பெற்றோர்களைக் கவனிப்பதற்காக இத்தகைய நிறுவனங்களை நாடிப் பணியாளர்களைப் பெறுகிறார்கள். இங்குள்ள வயதான தாய், தந்தையரின் பிள்ளைகள், உறவினர்கள் யாராவது வெளிநாட்டில் இருந்து தமது பெற்றோரைக் கவனிப்பதற்கு ஆள் தேடி இந்த நிறுவனத்தை நாடும்போது இங்குள்ளவர்களைவிடவும் அவர்களிடமிருந்து அதிக பணம் கறக்கலாம் என்பதும் இந்த நிறுவனங்களில் உள்நோக்கமாக இருக்கிறது. ஆனால், இதைவிடப் பாதிப்பான விடயமாக இருப்பது அந்த நிறுவனத்தின் பணியாளர்கள் ஆற்றும் காரியங்களே.

பராமரிப்புப் பணியாளர்கள் தேவைப்படுவோர் குறிப்பிட்ட நிறுவனங்களை நாடும்போது தமது பணியாளர்கள் தொடர்பிலான முழு விவரங்களையும் குறிப்பிட்ட நிறுவனம் பொறுப்பேற்கிறது. எந்த விடயமானாலும் தங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளுமாறும் பணத்தைத் தமது பணிமனையில் செலுத்தவேண்டும் எனவும் கூறுகின்றனர். இதன் பின்னர் வாடகைக்கு அமர்த்தப்படும் பணியாளர்கள் ஒரு வீட்டில், ஒரு வாரமளவில் பராமரிப்புப் பணியைச் செய்யும்போது அந்த வீட்டுச்சூழலை நன்கு அறிந்துவிடுகின்றார். பின்னர் "எங்கள் சம்பளத்தில் பெருமளவு பங்கை குறிப்பிட்ட நிறுவனத்துக்குச் செலுத்தவேண்டியிருக்கிறது. சிறிதளவு பணத்தைத்தான் அந்த நிறுவனம் எங்களுக்குத் தருகிறது. இதனால் எங்கள் குடும்பத்தைப் பராமரிப்பது சிரமமாக உள்ளது" என்று வீட்டுக்காரருக்குக் கதைவிடும் பணியாளர்கள் அதிகம். அதிலும் குறிப்பாகப் பெண் பணியாளர்கள் என்றால், "கணவர் பிரிந்து போய்விட்டார். நானும் பிள்ளைகளும்தான் கஸ்ரப்படுகிறோம்" என்றெல்லாம் கூறி அந்த வயோதிபரை வைத்திருக்கும் குடும்பத்தின் அனுதாபத்தைப் பெற்றுவிடுகின்றனர் (ஆனால், இந்தப் பெண்களின் கணவர்களே அவர்களைக் குறிப்பிட்ட வீட்டில் இறக்கிச் செல்கின்றனர்).

இவ்வாறான பெண் பராமரிப்பாளர்களிடம் சொந்தமாக மோட்டார் சைக்கிள் இருந்தாலும் வீட்டுக்காரரின் அனுதாபத்தைப் பெறுவதற்காகப் பழைய மிதிவண்டியில் அங்கு போய் வருவார்கள். இதைவிட வெளிநாட்டிலிருந்து வந்து நிற்கும் வயோதிபரின் பிள்ளைகளிடம் தமது சோகக் கதையைக் கூறி மேலதிக கொடுப்பனவுகள், பரிசுப் பொருள்கள் எனப் பலவற்றைப் பெறுகிறார்கள்.

வீட்டுக்காரருடன் நல்லுறவு வளர்ந்தபின் அவர்கள் ஒழுங்குசெய்த நிறுவனத்துக்குக் குறிப்பிட்ட பராமரிப்பாளரின் சேவை தேவையில்லை என்று வீட்டுக்காரரைக் கொண்டு அறிவிக்கப் பண்ணிவிட்டு அங்கேயே தொடர்ந்து நிரந்தரப் பணியாளராகிக் காலப்போக்கில் முழுமையான சம்பளத்தையும் கையில் வாங்குகின்றனர்.

இதைவிட உள்வீட்டுக்குள் புழங்குவதாலும் வீட்டுக்காரருக்குப் பராமரிப்பாளர் அவசியம் என்பதாலும் வயதானவரை வைத்து அவரது பிள்ளைகளிடம் உதவி பெறுவதும் வெளிநாட்டிலிருந்து வந்து நிற்பவர்களுக்கும் உள்நாட்டில் இருப்பவர்களுக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்தும் பராமரிப்பாளர்கள் அதிகம் நன்மையடைகின்றனர்.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் மீண்டும் அவர்கள் வாழும் நாட்டுக்குச் சென்ற பின் தொலைபேசி உரையாடல் மூலமும் சில நலன்களைப் பெறுகின்றனர். இந்த உதவிகள் ஊரிலுள்ள சகோதரர்களுக்கோ உறவுக்காரருக்கோ தெரிவதில்லை. இவ்வாறாகப் பணம், கைபேசிகள், தங்க ஆபரணங்கள், மோட்டார் சைக்கிள் எனப் பலவற்றைக் குறிப்பிட்ட வயோதிபர்கள் இறப்பதற்கு முன் பெற்றுவிடுகின்றனர். சிலர் தமது தேவைகள் பூரத்தியானபின் இனி வந்து பார்க்கமுடியாது எனக் கைவிட்டு விடுகின்றனர்.

இந்தப் பராமரிப்பாளர்கள் முதலில் தமது நிறுவனத்தை ஏமாற்றிப் பல குடும்பங்களுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தி உயிருக்கு ஊசலாடும் ஒருவரை முதலீ டாக்கி ஈவு இரக்கமில்லாது செயற்படுகின்றனர். இந்தப் பணிக்கு வருபவர்கள் மிகவும் தந்திரசாலிகளாகவும் ஏமாற்றுக்காரர் களாகவும் சுத்துமாத்துக் காரர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களின் வெளித்தோற்றத்தை வைத்து அவர்களை அடையாளம் காண்பது சிரமம். இவர்கள் விடயத்தில் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். ■






# தாயின் முலையில் பால் குடித்த பாம்பு

மட்டக்களப்புச் சிறையில் குளிப்பு, உணவு எல்லாம் முதலில் அரசியல் கைதிகளுக்குத்தான் வழங்கப்படும். ஏனைய கைதிகள் நீண்ட காலம் சிறையில் இருப்பதில்லை. சிலர் அடிக்கடி வெளியே போய் வருவார்கள் (விடுதலையாவது பின்னர் குற்றம் செய்வது என). நான் அங்கிருந்த காலத்தில் பலரை இவ்வாறு சந்தித்திருக்கிறேன்.

30.9.2001 அன்று இரவு 7.30 மணியளவில் மட்டு நகரில் கடுமையான துப்பாக்கி வேட்டுகள் கேட்டன. போர்க் காலம் ஆதலால் போர் என்ற விளக்கத்தைத் தவிர என்ன நடந்தது என்று எதுவுமே தெரியவில்லை. வெளியே மக்களின் நிலை எப்போதும் பயமாகத்தான் இருந்தது. ஒரு நாள் மட்டக்களப்பு மருத்துவமனைக்கு மருந்து எடுப்பதற்காகச் சிறைச்சாலை ஊழியருடன் சென்று வந்த நண்பர் ஒருவர் இவ்வாறு கூறினார்.

"மருத்துவமனையில் சனத்தைப் பார்க்கக் கவலையாக இருக்கிறது. எல்லாரது முகத்திலும் பயப்பீதி தெரிகிறதே தவிர மகிழ்ச்சியில்லை" என்று. நாம் சிறைக்குள் இருக்கிறோம் என்ற துன்பம் மட்டும்தான். ஆனால், வெளியே இருக்கும் மக்களின் நிலையோ, படையினர், புலிகள், படையினருடன் இணைந்துசெயற்பட்ட ஆயுதக் குழுக்கள் என யாராவது தாக்கக்கூடும் என்று பயந்தே சாகவேண்டியிருந்தது.

சிறை அறையிலிருந்து எம்மைத் திறந்து விடும் நேரங்களில் மற்றப் பகுதிகளில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளுடன் கதைத்துப் பழையவற்றை மீட்டுப் பார்ப்பதுண்டு. சிறு குற்றம் ஒன்றுக்காகக் குறுகியகாலத் தண்டனை பெற்ற ஒரு கைதியுடன் ஒரு நாள் கதைத்துக் கொண்டிருந்தேன். அவர் மட்டக்களப்பு -படுவான்கரையைச் சேர்ந்த ஒரு கிராமத்தவர். தனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர் என்றும் தான் சிறைக்குள்ளிருப்பதால் அவர்களைப் பார்ப்பதற்கு யாரும் இல்லை என்றும் கவலைப்பட்டார். "ஏன் உங்கள் மனைவி எங்கே?" என்று கேட்டேன். நான் என்றுமே கேள்விப்படாத அதிர்ச்சியான தகவல் ஒன்றை அவர் கூறினார்.

தனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர் என்றும் தான் சிறைக்குள்ளிருப்பதால் அவர்களைப் பார்ப்பதற்கு யாரும் இல்லை என்றும் கவலைப்பட்டார். "ஏன் உங்கள் மனைவி எங்கே?" என்று கேட்டேன். நான் என்றுமே கேள்விப்படாத அதிர்ச்சியான தகவல் ஒன்றை அவர் கூறினார்

தனது கடைசிப் பிள்ளைக்குப் பால் கொடுக்கும் காலத்தில் ஒரு நாள் தான் வயலுக்குப் போய்விட்டாராம். இரவு பிள்ளைக்குப் பால் கொடுத்தபடியே மனைவி நித்திரையாகிவிட அந்தப் பால் மணத்துக்கு வந்த நாக பாம்பு ஒன்று மனைவியின் முலையில் பாலைக் குடித்துவிட்டு முலைக்காம்பிலும் காயம் ஏற்படுத்தி விட்டுப் போனதால் காலையில் அவர் இறந்து கிடந்தார் என்றும் பிள்ளை தப்பிவிட்டதாகவும் கூறினார்.

*** *** ***

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் ஞாயிற்றுக் கிழமைகளில் அரசியல் கைதிகளுக்கு மட்டும் திரைப்படம் (டெக்கில் போடுவார்கள்) பார்ப்பதற்கு அனுமதி இருந்தது. அது சட்டப் படியான அனுமதியல்ல. அரசியல் கைதிகள் என்பதால் சிறைச்சாலை நிர்வாகம் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தது. நான் படம் பார்ப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால், சில இளைஞர்கள் உணவுண்ணாமல்கூட அந்தப் படங்களைப் பார்த்து முடிப்பார்கள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் விசிற் (கைதிகளைப் பார்வையிடுவதற்கு வருவோர்) இல்லாததால் பல கைதிகளுக்குப் படம் பார்ப்பதில் அதிக ஆர்வம் இருக்கும். சிறைச்சாலையில் தொலைக்காட்சி, விளையாட்டுப் பொருள்கள், சங்கீத உபகரணங்கள் ஏதும் இல்லாவிட்டால் கைதிகளுக்கிடையில் தேவையற்ற விவாதங்களும் வாக்குவாதங்களும் முரண்பாடுகளும் அதனால் அடிபிடிகூட ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். அந்த வகையில் தொலைக்காட்சியின் பயன்பாடு சிறையைப் பொறுத்தவரையில் பயனுள்ளதுதான். ஒருவகையில் அது ஒரு சமாதான தேவதையும்கூட.

10.10.2001 அன்று பேராசிரியர் ஜி.எல். பீரீஸ், எஸ்.பி.திசாநாயக்க ஆகியோர் அப்போதைய அரச தலைவர் சந்திரிகா தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துவிட்டனர் என்று தொலைக்காட்சிச் செய்தியில் காட்டினார்கள். இருவரும் அரச தலைவர் சந்திரிகாவைக் கடுமையாக விமர்சனம் செய்திருந்தனர். இந்தத் திடீர் மாற்றம் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமான விளைவுகளைக் கொடுக்கும் என எதிர்பார்த்தோம். வெளியே ஆட்சி மாற்றம் நடப்பதைத்தான் கைதிகள் விரும்புகின்றனர். எந்த அடிப்படையிலாவது தமக்கு விடுதலை கிடைக்கவேண்டும் என்பதே கைதிகளின் எதிர்பார்ப்பு.

முதலில் இலங்கையில் நிலவுகின்ற அரசியல், பொருளாதார, படைத்துறைக் கட்டமைப்புகள் மாற வேண்டும் என்பதே அதன் எதிர்பார்ப்பு.

மறுநாள் 11அம் திகதிச் செய்தியில் நேற்று நள்ளிரவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது என்றும் மார்கழி 5இல் தேர்தல் என்றும் தை முதலாம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடும் என்றும் அறிவிக்கப்பட்டது. எனவே தை மாதம் வரை கைதிகளின் விடுதலையில் மாற்றம் இருக்கப்போவதில்லை என்பது தெரிந்தது.

சிறைச்சாலைக்குள்ளிருக்கும்போது வெளியே அரசியலில் என்ன மாற்றம் நடந்தாலும் அது கைதிகளுக்கு எந்தளவுக்குச் சாதகம் அல்லது பாதம் என்பதைப் பற்றியே கைதிகள் மத்தியில் ஆய்வுகளும் விவாதங்களும் இருக்கும். அந்தக் கால கட்டத்தில் இலங்கையிலுள்ள எல்லாச் சிறைச்சாலைகளையும் சேர்த்துப் பார்த்தால் 750பேர் வரைதான் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட தமிழ்க் கைதிகள் இருந்திருப்பார்கள்.

(தொடரும்)

■ கார்த்திக் பாலசுப்பிரமணியன் ■

# அந்தரிப்பு






**நான் சுற்றி வளைக்க விரும்பவில்லை. உங்களுடைய பல இரகசியங்கள் இப்போது என் வசம் உள்ளன**

'க்ளிங்' என்ற ஓசையெழ வந்து நின்ற மின்னஞ்சலைத் திறந்து பார்த்த மீராவுக்கு ஒரு நொடி தூக்கிவாரிப் போட்டது. படம் ஓடிக்கொண்டிருக்க கிடைத்த சின்ன இடைவெளியில் மொபைலை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். இப்போது இது வழக்கமாகி விட்டது. பத்து நிமிடத்துக்கு ஒருமுறை வாட்ஸப்பிலோ பேஸ்புக்கிலோ ஏதாவது புதிய செய்தியோ பதிவோ வந்திருக்கிறதா என்று பார்ப்பது ஓர் அனிச்சைச் செயலைப் போல் நிகழ்கிறது. சனிக்கிழமை மதியப் பொழுது ஏதாவது படம் பார்க்கலாம் என்று பரத் வம்படியாய் இழுத்து உட்கார வைத்துவிட்டான். அச்சுக்குட்டியும் இம்முறை அவனோடு சேர்ந்துகொண்டாள். கவனம் சிதறாமல் முழுதாக ஒரு படத்தை இரண்டு மணி நேரம் அமர்ந்து பார்ப்பதெல்லாம் இப்போது அத்தனை எளிதாக இருப்பதில்லை. எவ்வளவுதான் சிறப்பான படமாக இருந்தாலும் ஒரே ஒரு நிமிடம் கூடுதலாக நீளும் சண்டைக் காட்சியோ படத்தோடு ஒன்றாமல் ஒலிக்கும் ஒரு பாடலோ போதும். அந்த இடைவெளியில் அவள் மொபைலை கையில் எடுத்துக்கொள்வாள். பரத் பார்த்தால் கோபித்துக்கொள்வான். பேச்சு நீளும். இருவரில் ஒருவருக்குக் கொஞ்சம் வார்த்தை பிசகினாலும் அது மற்றுமொரு பெரிய சண்டையில் போய் முடியும். அதனால் அவன் முன்னால் முடிந்த வரை மொபைலை எடுத்துப் பார்ப்பதில்லை. ஆனால், இப்போது அவளால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அந்த மெயிலின் தலைப்பைப் பார்த்ததுமே தலை கழன்று காற்றில் மிதக்க ஆரம்பித்துவிட்டது. பதற்றத்தையோ பரபரப்பையோ வெளிக்காட்டாமல் இயல்பாகச் செல்வதுபோல் எழுந்து பாத்ரூம் இருக்கும் திசையை நோக்கி இருவருக்கும் கண் காட்டியபடி அதனுள் நுழைந்தாள்.

கம்மோடின் மூடியை இறக்கிவிட்டு அதன் மேல் அமர்ந்துகொண்டாள். வியர்த்திருந்த உள்ளங்கைகள் இரண்டையும் நைட்டியில் ஒருமுறை இழுவி கை ரேகையால் மொபைலை உயிர்ப்பித்து ஜி-மெயிலைத் திறந்தாள். ஆடம் பீச் என்ற பெயரிலிருந்து அந்த மின்னஞ்சல் வந்திருந்தது. முன்பின் அறியாத நபர்களிடமிருந்து இது போன்ற மின்னஞ்சல்கள் வருவது அடிக்கடி நிகழ்வதுதான் என்றபோதும் அதன் தலைப்பாக அவளுடைய ஜிமெயிலின் பாஸ்வேர்ட் இருந்ததுதான் அவளின் இத்தனை பதற்றத்துக்கும் காரணம். நினைவில் வைத்துக் கொள்ள எளிதாக இருக்கும் பொருட்டு அதே பாஸ்வேர்டைத்தான் அவளுடைய பேஸ்புக், இன்ஸ்டா போன்ற அனைத்துச் சமூக ஊடகங்களுக்கும் வைத்திருந்தாள். ஒவ்வொன்றாக யோசிக்க யோசிக்க அவளுக்கு உடலெல்லாம் பதறியது.



டியர் மீரா86,

நான் சுற்றி வளைக்க விரும்பவில்லை. உங்களுடைய பல இரகசியங்கள் இப்போது என் வசம் உள்ளன. தலைப்பிலிருக்கும் கடவுச்சொல் ஒன்று போதும் நான் சொல்வதை நிரூபிக்க. இது வெறும் சான்று மட்டுமே. நீங்கள் அழித்துவிட்டதாய் நம்பிக்கொண்டிருக்கும் பல இரகசிய உரையாடல்கள் என்னுடைய சேமிப்பில் பத்திரமாய் இருக்கின்றன. அதுபோக நீங்கள் ஆபாச இணையதளம் ஒன்றுக்குள் சென்றபோது நான் செலுத்திய மால்வேரின் வழியே உங்களுடைய மொபைல் காமிராவினைக் கைப்பற்றி எடுத்த அன்னியோன்யமான சில புகைப்படங்களும் என்னிடம் இருக்கின்றன.

இவை அத்தனையையும் உங்களுடைய நட்புப் பட்டியலில் இருக்கும் நண்பர்கள் எல்லோருக்கும் அனுப்புவதற்கு எனக்கு ஒரே ஒரு கிளிக் போதும்.

மேற்சொன்ன எதையும் செய்யாமலிருக்க நமக்குள் ஒரு சிறு ஒப்பந்தம் செய்துகொள்வோம். இவை எதுவும் வெளியேறாமல் இருக்க **3500** டாலர்களை கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பிட்காயின் அக்கவுண்ட்டுக்கு அனுப்பி வைக்கவும்.

இந்த மின்னஞ்சல் உங்களை வந்தடைந்த **48** மணி நேரங்களுக்குள் நீங்கள் மொத்த பணத்தையும் அனுப்பாவிட்டால் துரதிர்ஷ்டவசமாக என்னிடமிருக்கும் அத்தனை தகவல்களையும் வெளியிடுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

பி.கு. : நீங்கள் இந்த மெயிலைத் திறந்தவுடன் எனக்குத் தானியங்கித் தகவல் வந்து சேர்ந்திருக்கும். இதோ இந்த நொடியிலிருந்து உங்களுக்கு இருப்பது **48** மணி நேரங்கள்.

—ஆடம்.

*** *** ***

முந்தைய இரவு எப்போது தூங்கினாள் என்று அவளுக்குச் சுத்தமாக நினைவிலில்லை. விழிப்புக்கு நடுநடுவே கொஞ்சம் தூங்கியிருக்க வேண்டும். அதிகாலையில் எதிர்பாராமல் பெய்த மழையால் பரவிய குளிர்ச்சியே தூக்கத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடும். அதையும்கூட முழுமையாக அனுபவிக்க விடாமல் ஒரு கொடுங்கனவு. கைவிடப்பட்ட பழைய கட்டிடம் போலிருந்த

அந்த அறையில் அவளைத் தவிர யாரும் இல்லை. ஈரத்தில் ஊறிய சாக்குப் பைகளின் முடை நாற்றம். சுவரெங்கும் சுண்ணாம்பு பெயர்ந்து அதில் ஈரம் பரவி நின்றது. இவளுடைய காலிலிருந்து கழுத்துவரை கயிற்றால் இறுகக் கட்டப்பட்டிருக்கிறது. அவளால் அதிலிருந்து உடலின் எந்தப் பாகத்தையும் இம்மியும் அசைக்க இயலவில்லை. அவள் முகத்தை முன் பின் அறியாத கை ஒன்று வருடுகிறது. அது பரத்துடையது அல்ல. ஆயிரமாயிரம் தொடுகையிலும் அவனுடையதை அவளால் பிரித்தறிய இயலும். திருமணமான புதிதில், எதிர்பாராத நேரத்தில் அவன் அவளைத் தொட்டு அணைக்கும் நேரங்களில் அவளுக்கு உடல் வெடவெடவத்துச் சிலிர்த்துக்கொள்ளும். முகமெல்லாம் இரத்தம் பாய்ந்து மேலுதட்டில் வியர்வை அரும்பி நிற்கும். அந்தச் சிலிர்ப்பு வெட்கத்தின் பாற்பட்டது அல்ல என்பதை மட்டும் அவள் நன்கு அறிவாள். அதன் பிறகான நாட்களில் அவனது தொடுதலுக்கு அவளுடல் மரத்துச் சோம்பிவிட்டது. தற்போதெல்லாம் கலவியின்போது அவன் முயங்கிச் சொருகும் நேரத்தில்கூட 'அரைத்து வைத்த மாவை பிரிட்ஜில் ஏற்றியாகி விட்டதா?' என்றெண்ணத் தோன்றுமளவுக்கு அவளுக்கு அவனிடத்தில் இலயிப்பற்றுப் போய்விட்டது. இறுக்கிப் பிணைத்திருக்கும் கட்டினால் உடல் வியர்த்து கசகசத்தது. கால்களுக்கிடையில் ஈரம் மெல்லப் பரவியது. அதைக் கண்டு பதறி எழவும் வெளியே பெய்யும் மழை ஜன்னல்களைச் சத்தமிட்டுத் தட்டி எழுப்பவும் சரியாக இருந்தது.

படுக்கைக்கு அருகிலிருந்த மேசையில் வைக்கப்பட்ட பாட்டில் தண்ணீரை எடுத்துக் குடித்தாள். பரத்தும் அச்சுக்குட்டியும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். நினைவுக்குத் திரும்பியவளாக தனது மொபைலை எடுத்து ஜி-மெயிலைத் திறந்தாள். முக்கியம் என்று குறிக்கப்பட்ட அந்த மின்னஞ்சல் அப்படியே இருந்தது. கால் ஈரமாகியிருக்கிறதா என்று பார்த்தாள். இல்லை, அதற்கு இன்னும் நாட்கள் இருக்கின்றன. எது கனவு, எது நினைவு என்று குழம்பினாள். வெளியே தூறல் நிற்காமல் பெய்துகொண்டிருந்தது. அந்த மின்னஞ்சலைத் தவிர மற்றதெல்லாம் கனவு. மறுபடியும் அதைத் திறந்து மெதுவாக ஒவ்வொரு வரியாக வாசித்தாள். நேற்று மதியம் மூன்று பத்துக்கு மின்னஞ்சல் வந்திருக்கிறது. இப்போது நேரம் காலை ஏழு. இதற்கிடையில் பதினாறு மணி நேரம் கடந்துவிட்டது. மிச்சமிருப்பது முப்பத்திரண்டு மணி நேரம் மட்டுமே. அதற்குள் அவள் ஏதாவது செய்தாக வேண்டும். பரத்திடம் இதைப் பற்றி பேசவே முடியாது. என்ன ஏது என்று கேட்பதுக்கு முன்னால் வானத்துக்கும் பூமிக்குமாய் குதிப்பான். சமீபமாகத்தான் சமூக வலைதளங்களை அவள் பயன்படுத்துவது குறித்து அதிகமாக அலட்டிக்கொள்ளாமல் இருக்கிறான். இப்போது இதைச் சொன்னால் அவை அத்தனையையும் விட்டு வெளியேற நேரிடும். இருக்கும் கொஞ்ச நஞ்ச சுதந்திரத்தையும் இழக்க வேண்டியது வரும். அவன் மாற்றி மாற்றி கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லி மாளாது. எல்லாவற்றுக்கும் மேல் கண நேரமென்றாலும் அவனிடத்தில் தோன்றி மறையும் இகழ்ச்சியையும் மட்டம்தட்டும் அப்பார்வையையும் அவளால் பொறுத்துக்கொள்ள முடியாது.

அவர்களுடைய முதல் சந்திப்பில் "ஓ ஹோம் சயின்ஸா?" என்று கேட்டபோது அவனிடத்தில் வெளிப்பட்ட அந்த எக்களிப்புதான் அவனோடு இன்று வரை ஒன்றவிடாமல் தடுக்கிறது. திருமணத்துக்குப் பிறகு அவளுக்கு வேலைக்குப் போக வேண்டும் என்ற பெரிய இலட்சியமெல்லாம் எதுவுமிருக்கவில்லை. ஆனால், போகக் கூடாது என்று பரத் வீட்டில் சொல்லியபோதுதான் போயே தீர வேண்டும் என்று தோன்றியது. அப்போது அதைப் பெரிதுபடுத்தாமல் விட்டுப்போனது எத்தனை பெரிய பிழை என்பது பின்னாளில்தான் புரிந்தது. ஆனால், அது புரிய ஆரம்பித்தபோது அவளால் எதுவும் செய்ய இயலவில்லை.

பரத்தைவிட்டால் பிரியங்காவிடம் கேட்டுப் பார்க்கலாம். ஆனால், பொய் சொல்ல வேண்டும். யாரிடத்தும் இப்போதைய நிலையை விளக்கிச் சொல்லிப் புரியவைக்க முடியாது. யாரும் புரிந்துகொள்ளவும் மாட்டார்கள். அவளுக்குமே அது பெரிய தொகை. இயலாமையில் கோபம் பொங்கி வந்தது. உள்ளதை மறைக்காமல் திறந்து சொல்ல, அப்படிச் சொன்னாலும் அதைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும்படியான ஒருத்தரைக்கூட தன் வாழ்நாளில் சம்பாதிக்கவில்லை என்று நினைக்க அவளுக்கே வெட்கமாயிருந்தது.

சுந்தர் ஆன்லைனில் இருக்கிறானா என்று பார்த்தாள். அவன் ஆன்லைனில்தான் இருந்தான். நேற்றிரவு இன்பாக்ஸில் "படம் பார்த்துட்டு இருக்கியா? ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போயிருக்கலாம்" என்று விசனப்பட்டு கடைசியாக, "குட் நைட்" என்று சொல்லி முடித்திருந்தான்.

பரத் உடனிருக்கும் வேளைகளில் சுந்தருடனான உரையாடல்களை இன்பாக்ஸின் 'இக்னோரி'ல் போட்டுவிடுவாள். இடையில் அவன் தகவல் அனுப்பி, பரத்தே இவள் மொபைலை எடுத்தாலும்கூட அவனுடனான உரையாடல் எதையும் பார்க்க முடியாது. இந்த மெயிலைப் பார்த்ததும்



**முதலில் சுந்தரின் மேல்தான் அவளுக்குச் சந்தேகம் வந்தது. அவள் இத்தனை தூரம் பதறுவதற்கு அவன் மட்டுமே காரணம். அவளைத் தவிர இந்த உண்மை தெரிந்த ஓர் ஆள் அவன் மட்டுமே என்று அந்த மின்னஞ்சல் வரும்வரை அவள் நம்பிக்கொண்டிருந்தாள்**

முதலில் சுந்தரின் மேல்தான் அவளுக்குச் சந்தேகம் வந்தது. அவள் இத்தனை தூரம் பதறுவதற்கு அவன் மட்டுமே காரணம். அவளைத் தவிர இந்த உண்மை தெரிந்த ஓர் ஆள் அவன் மட்டுமே என்று அந்த மின்னஞ்சல் வரும்வரை அவள் நம்பிக்கொண்டிருந்தாள்.

அவனைப் பற்றி அறிந்தவரையில் அவன் அப்படிச் செய்யும் ஆள் இல்லை. ஓரளவுக்கு வசதியுள்ள வீடு அவனுடையது. அதனால் சுந்தருக்குப் பணம் ஒரு பொருட்டில்லை. இந்த மின்னஞ்சலோ முழுக்க முழுக்கப் பணத்தை மட்டுமே குறி வைத்து அனுப்பப்பட்டிருக்கிறது. அவனுமில்லை என்றால் வேறு யாராக இருக்கக்கூடும்? அவர்கள் அத்தனை தூரம் பழகியிருந்த போதும் பொதுவெளியில் அவ்வுறவைப் பற்றித் துளியும் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. அப்படியிருக்க இது எப்படிச் சாத்தியம்? முந்தைய நாள் பின் மதியத்திலிருந்து அவளை இக்கேள்விகள் படுத்திக்கொண்டிருந்தன. அதன் பின் படத்தில் பார்த்த ஒரு காட்சிகூட அவள் நினைவில் இல்லை. அன்றைய நாளின் அத்தனை வேலைகளையும் முடுக்கிவிடப்பட்ட பொம்மையைப் போல் செய்து முடித்தாள். கைகள் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருக்க மனம் முழுவதும் மெயிலைச் சுற்றிக்கொண்டிருந்தது.

பேஸ்புக்கில் நுழைந்த போதிலிருந்தே சுந்தரைத் தெரியும் என்றபோதும் அவனுடன் அவள் பழக ஆரம்பித்து ஆறு மாதங்கள்தான் ஆகின்றன. முதல் மாதத்திலேயே மெய்நிகராகச் சாத்தியமுள்ள அத்தனை எல்லைகளையும் இருவரும் கடந்துவிட்டிருந்தனர். அவளைவிட நான்கு வயது இளையவன். சுந்தர் மாநிறம். சராசரி உயரம். இவனை ஒப்பிட பரத் அழகன்.

சுந்தருக்குச் சொந்த ஊர் உடுமலைப்பேட்டை. பொறியியல் முடித்துவிட்டு காற்றாலை நிறுவனமொன்றில் இரண்டாண்டுகள் பணியாற்றினான். பின்பு, அங்கிருந்து வெளியேறி திரைப்பட இயக்குநராகும் முயற்சியில் தமிழின் முக்கியமான இயக்குநர் ஒருவரிடம் நான்கு ஆண்டுகளாக உதவி இயக்குநராகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறான். கையில் எழுதி முடிக்கப்பட்ட நிலையில் இரண்டு திரைக்கதைகள் வைத்திருக்கிறான். மேலும் ஒன்றை எழுதிக்கொண்டிருக்கிறான். எழுத்து அவனுக்கு இயல்பாக வந்தது. திரைப்படத் துறையில் இருப்பதால் அது சம்பந்தமான தொடர்புகளும் அதிகம். அவனுடைய கல்லூரிப் படிப்பும் பின்பு பார்த்த பன்னாட்டு நிறுவன வேலையில் கற்றுக்கொண்ட மக்கள் தொடர்புக் கலையும் அவன் கொண்டிருந்த இலக்கியப் பரிச்சயமும் சமூக நடப்புகள் எல்லாவற்றின் மீதும் அவனுக்கென்று தனித்ததொரு பார்வை உருவாகக் காரணமாயிருந்தன. தேவைக்கு அதிகமாக அவனிடமிருந்து ஒரு சொல் வராது. அதன் பொருட்டே பேஸ்புக்கில் அவனுக்கென்று பெரிய இரசிகர் கூட்டம் ஒன்று இருந்தது. சமயங்களில் அவனுடைய சாதாரண ஒரு இடுகைக்கே ஆயிரக்கணக்கில் லைக்குகள் குவிவதைக் கண்டு மீரா ஆச்சரியப்பட்டிருக்கிறாள்.

பெரிய இரசிகர் கூட்டம் உள்ள ஆள், ஏற்கனவே லைக்குகளும் ஹார்ட்டின்களும் கமெண்ட்டுகளுமாய் நிறைந்து வழியும் அவன் நிலைத்தகவல்களில் தான் இடப்போகும் ஒரு விருப்பக் குறிக்கு எந்தவித முக்கியத்துவமும் இருக்கப் போவதில்லை என்றே ஆரம்பத்தில் நினைத்தாள். அவள் அறியாமலே அவன் மேல் முதலில் ஒருவித மெல்லிய வெறுப்புதான் வளர்ந்து வந்தது. அது அவனுடைய புகழைப் பற்றிய பொறாமையில் வந்ததில்லை. அவனுக்கு முன் எந்த முக்கியத்துவமும் இன்றி தான் இருப்பதில் அவளுக்கு விருப்பமில்லை. எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு பற்றும் ஒன்றின் மீது இயல்பாக எழும் விலகலே அதற்குக் காரணம் என்பதைச் சற்று நிதானித்து யோசிக்கும்போது அவள் உணர்ந்திருக்கிறாள். அப்படி விலகியிருப்பதன் வழியே அவள் தன் சுயத்தைத் தக்க வைத்துக்கொள்வதாக அவளே கற்பனை செய்துகொண்டாள்.

அது எல்லாம் பரத்துடன் ஏற்பட்ட கடும் சண்டைக்குப் பின் வரவேற்பறை சோபாவில் தனியாகப் படுத்து விழித்துக் கிடந்த அந்த ஒரு நாளில் மாறியது. அன்றைக்கு சுந்தர் தன்னுடைய பழைய காதல் தோல்வியைப் பற்றி எழுதியிருந்தான். அதிலும் குறிப்பாக ஒரே ஒரு வார்த்தை கூட அந்தப் பெண்ணைப் பற்றி கண்ணியக் குறைவாக இல்லை. இத்தனைக்கும் அவன் எழுதியிருந்ததைப் படித்த யாருக்கும் அப்பெண்ணின் மேல் கடுஞ்சினம் எழுவதே இயல்பு. அதே நேரத்தில், மற்றவர்களின் பார்வைக்காகவோ வரப்போகும் லைக்குகளுக்காவோ அவன் அதை எழுதியிருக்கவில்லை என்றும் தோன்றியது. அதில் உள்ளோடியிருந்தது உண்மையான காதல். மீராவுக்கு அப்பெண்ணின்மேல் பொறாமையாக இருந்தது. தான் அந்த இடத்தில் இருந்திருந்தால் எப்பாடு பட்டாவது அவனுக்காகக் காத்திருந்திருப்போமே என்று நினைத்தாள். அதே நேரத்தில் அப்படியான நினைப்பிலிருந்த அபத்தத்தை எண்ணி நொந்துகொண்டாள். அவனுடைய நிலைத்தகவலுக்கு முதன் முதலாக ஹார்ட்டின் விட்டாள். அன்றே அவனுடைய பக்கத்தை தன்னுடைய முதல் பார்வையில் இருக்குமாறு மாற்றியமைத்தாள். அதன் பின் அவனுடைய ஒரு பதிவையும் அவள் தவறவிட்டதில்லை. ஒருமுறைகூட இவளுடைய

நிலைத்தகவலுக்கு அவன் விருப்பக்குறியேதும் இட்டதில்லை. இது, பேஸ்புக்கில் கொண்டாடப்படும் பிரபலங்கள் பலரும் செய்வதுதான் என்பதால் அவள் அதைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

அன்றொரு நாள் அவனிடமிருந்து எதிர்பாராததொரு தருணத்தில் இன்பாக்ஸில் குறுஞ்செய்தி ஒன்று வந்திருந்தது. அதிலிருந்தே எல்லாம் தொடங்கியது.

"என்ன இன்னிக்கு ஹார்ட்டின் வரலயே!"

அவனுடைய சமீபத்திய நிலைத்தகவலுக்கு வெறும் லைக் மட்டும் இட்டுவிட்டு வந்திருந்தாள். அடுத்த நிமிடத்தில் அவனிடமிருந்து அந்தக் கேள்வி. அப்போதுதான் அவளுக்கே புரிந்தது இதுவரையிலான அவனுடைய எந்த பதிவுக்கும் வெறும் லைக் மட்டும் இட்டு நகர்ந்ததில்லை. அதே நேரத்தில் அவன் இத்தனை உன்னிப்பாக தன்னுடைய எதிர்வினைகளைக் கவனித்திருக்கிறான் என்று நினைத்தபோது உள்ளுக்குள் அவளுக்கு ஜிவ்வென்று இருந்தது. சோபாவுக்குப் பின்னாலிருந்த நிலைக் கண்ணாடியில் தன் உருவத்தை ஒருமுறை பார்த்துக்கொண்டாள்.

இருந்தாலும் அவளுடைய ஆர்வத்தை வெளிப்படுத்திவிடாதபடி, "புரியலையே!" என்று பதில் அனுப்பினாள்.

"இல்ல எப்பவும் போஸ்ட்டுக்கெல்லாம் ஹார்ட்டின்தான் போடுவீங்க. இன்னிக்கு ஏதாவது தப்பா எழுதிட்டேனா? வெறும் லைக் மட்டும் போட்டிருக்கீங்களே?" என்று கேட்டான். வலிந்து வந்து பேசினாலும் அதில் அலட்டலோ அதீத குழைவோ இல்லை. அது அவளுக்குப் பிடித்திருந்தது.

தகுந்த நேரத்தில் நிகழ வேண்டியதெல்லாம் தானாய்ச் சரியாக நிகழும் என்பதில் முன்பெல்லாம் அவளுக்கு நிறைய நம்பிக்கை இருந்தது. பரத்துடனான திருமணத்திலேகூட அவள் அப்படி எண்ணிச் சகித்துக்கொள்ள எத்தனையோ முறை முயன்றிருக்கிறாள். அவனை முழுதாகக் கெட்டவன் என்றெல்லாம் ஒதுக்கிவிட முடியாது. அவனுக்கும் அவள் மேல் ஆசை, பிரியம் எல்லாம்கூட உண்டு என்பதை அவள் அறிவாள். ஆனால், அவன் மேல் அவளுக்கு துளியும் அப்படியான உணர்வு தோன்றவேயில்லை. தன்னை வீட்டிலிருக்கும் பிரிட்ஜ், டிவி, ஏ.சி.யோடு சேர்த்து நகருமொரு ஜடப் பொருள் போன்று நடத்துகிறான் என்பதை உணர அவளுக்கு அதிக நாட்கள் எடுக்கவில்லை. வெளிப்படுத்தப்படாத நேசத்துக்கு என்ன மதிப்பு இருக்கப்போகிறது? அதே நேரத்தில் அவனை முறித்துக்கொண்டு வருவதற்கு வலுவான காரணமில்லை. அப்படிப்போய் நிற்பதற்கானச் சூழல் அவள் வீட்டில் இல்லை. அதற்குள் அச்சு உருவாகி அந்த எண்ணத்தையே முற்றிலுமாய் முறித்துக்கொள்ள நேரிட்டது. திருமணமான ஏழு வருடங்களில் ஒரே ஒரு முறைகூட அவனிடத்தில் அவள் 'ஐ லவ் யூ' என்று சொன்னதில்லை. புணர்ச்சியின் உச்சத்தில் திளைத்த போதுகூட தவறியும் அவள் அதை உச்சரித்ததில்லை. ஒருமுறை அதைப் பற்றி அவன் கேட்டபோது வேறெங்கோ பார்த்தபடி "தோணல" என்றாள்.

சுந்தர் முதன்முதலாக இன்பாக்ஸ் வந்த அன்று அப்படித்தான் எல்லாம் சரியாக நிகழ்ந்தது. பரத் அலுவலகப் பயணமாக ஒரு வாரம் புனேவுக்குச் சென்றிருந்தான். சாதாரணமாக ஆரம்பித்த உரையாடல் தொட்டுத் தொட்டு நீண்டு நள்ளிரவு மூன்று மணி வரை சென்றது. அடுத்த ஒரு வாரம் அவள் மொபைலைக் கீழே வைக்கவில்லை. குளிக்கும் போது கூட சோப்பு வைக்கும் திண்டில் வைத்துக்கொண்டு திரிந்தாள்.

ஏழு வருடங்களாக பரத்துடன்

**அரை மணிநேரத்துக்கு ஒரு முறை கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டாள். மொபைலைக் கையில் எடுக்கவே அஞ்சினாள். அதிலிருந்து வந்த ஒவ்வொரு அறிவிப்பு ஓசைக்கும் மனம் அடித்துக்கொண்டது.**

உணராத நெருக்கத்தை சுந்தரிடத்தில் ஏழே நாளில் அவளால் உணர முடிந்தது. அவன் அவளை உருகி அலையவிட்டான். எதையும் அவன் வலிந்து செய்யவில்லை. எல்லாமும் இயல்பாக நிகழ்ந்தது. பல 'முதல் அடி'களை அவளே எடுத்து வைத்தாள். ஒரு நாள் பேசிக்கொண்டிருக்கும் போது நட்பின் எல்லைகளைத் தாண்டி அவர்கள் பேச்சு நீண்டது. அவளே கேட்டாள்.

"இதெல்லாம் எதில் போய் முடியும் என்று நினைக்கிற?"

"தெரியலையே."

"ம்ம்.."

"ஏன்? நீ என்ன நினைக்கிற?"

"மதில் மேல் பூனை"

அவன் அவளுடைய பூனை பதிலுக்கு ஹார்ட்டின்களைப் பறக்கவிட்டான்.

பூனை சரியாக அவன் பக்கமே குதித்தது. அப்போது ஆரம்பித்து ஆறு மாதங்கள் எப்படிப் போனது என்றே தெரியவில்லை. பொதுவாக வெளிப்படையானவள், எதையும் உடைத்துப் பேசுபவள், ஆகச் சிறிய விசயங்களில்கூட நேர்மையைக் கடைபிடிப்பது என்றிருந்தவள் முற்றிலுமாக மாறிப் போனாள். அவளையறியாமல் திருட்டுத்தனங்கள் குடிவந்தன. எல்லாவற்றுக்கும் மேல் அதிலிருந்த குறுகுறுப்பு அவளுக்குப் பிடித்திருந்தது. ஒரு கட்டத்தில் சுந்தரிடத்தில் தனக்குத் தோன்றும் ஈர்ப்பே பரத்தைப் பழிவாங்குவதற்கான ஒரு கருவிதானோ என்று யோசிப்பாள். அதே நேரத்தில் பரத்தைப் பற்றி யோசிக்கும் போதும் அவனும் அச்சுவும் கொஞ்சுவதைப் பார்க்கும்போதும் அவளுக்குக் குற்ற உணர்வு பொங்கி வரும். அன்றெல்லாம் சுந்தருடனான உரையாடலில் சுணக்கம் காட்டித் திரிவாள். மறுநாளே இயல்பாகிக் குழைந்துருகுவாள்.

இத்தனை மாதங்களுக்குப் பிறகு இப்போது அதே குற்ற உணர்வு அதீதமாய் ஆட்டிப் படைக்க ஆரம்பித்தது. நட்பு என்ற எல்லையைத் தாண்டாமல் இருந்திருந்தால் எங்கிருந்தோ எவனோ அனுப்பியிருக்கும் ஒரு மின்னஞ்சலுக்கு இப்படி பயந்து வெருள வேண்டியிருந்திருக்காது. இரவெல்லாம் மனம் அடித்துக்கொண்டது. பரத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. குடும்பக் கௌரவத்தைப் பெண்களின் முந்தானையில் முடிந்து வைத்திருப்பதாய் நம்பும் பிறவி. துப்பட்டா சற்று விலகினாலே கற்பில் பாதி போய்விட்டதாய் கவலைகொள்கிறவன். சுந்தருடன் நிகழ்ந்த ஒரே ஒரு இரவு உரையாடல் போதும் நேராக கோர்ட்டில் போய்தான் நிற்பான். அது, தான் இல்லை என்றோ இது போலி என்றோ நிரூபிப்பது அத்தனை சுலபமில்லை. எத்தனை செல்ஃபிகள் அனுப்பியிருக்கிறாள். நினைக்கும் போதே உடலின் மொத்த இரத்தமும் மேலேறி அவள் தலைக்குள் பாய்ந்தது. அவளை அறியாமல் கண்ணீர் பெருகி வழிந்தது. சத்தமில்லாமல் வாய்பொத்தி அழுதாள். வாழ்வில் குறைந்தபட்ச நேர்மைகூட இல்லாதவள், நாளை அச்சு பெரியவளாகி நிற்கும்போது எந்த முகத்தை வைத்துக்கொண்டு அவளை ஏறிட்டுப் பார்ப்பது? அச்சு முதலாய் அம்மா வரை பரத்தைப் பற்றி இருக்கும் பிம்பமே வேறு. இவள் சொல்வதையெல்லாம் காரணமாய் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள். அவளுக்கே இப்போது சந்தேகம் வந்தது. தானே சுந்தருடன் பழகுவதற்காகத்தான் பரத்தைத் தேவைக்கு அதிகமாய் வெறுக்கிறேனோ என்று யோசித்தாள். அதில் உண்மையில்லாமலும் இல்லை.

சுந்தரின் மேல் கோபம் வந்தது. அவன் ஏன் தேவையில்லாமல் இன்



பாக்ஸ் வரவேண்டும், தன்னிடம் மட்டும்தான் இப்படி நடந்துகொள்கிறான் என்று எப்படி நம்புவது? தான் குடும்ப சகிதமாக ஒரு படம்கூட பேஸ்புக்கில் போட்டதில்லை. அதையெல்லாம் கவனித்திருப்பானோ? தன்னுடைய பின்னணி அறிந்தே அவனும் இந்த அளவுக்கு இறங்கியிருப்பானோ? அவன் அப்படிச் செய்தால் தனக்கு எங்கே போனது புத்தி? பரத் ஒழுங்காக இருந்தால் தன் புத்தி ஏன் அப்படிப் போகிறது? தொட்டுத் தொட்டு அவளுக்கு மொத்த உலகின் மேலும் வெறுப்பு படர்ந்தது.

மொபைலை ஸ்விட்ச் ஆப் செய்துவிட்டு படுத்துக்கொண்டாள். இந்தப் பிரச்சினையிலிருந்து எப்படியாவது வெளியேறிவிட வேண்டும். சுந்தருக்கு இதெல்லாம் ஒரு பொருட்டாக இருக்காது. ஒரே ஒரு படம் எடுத்துவிட்டானென்றால் அவனுடைய நிலையே வேறு. இந்தப் பிரச்சினையைத் தாண்டிவிட வேண்டும். இனியொரு முறை இப்படி நிகழவிடக் கூடாது. எல்லா சமூக வலைதளங்களிலிருந்தும் முற்றிலுமாய் வெளியேறிவிட வேண்டும். இது தனக்குச் சரியான சூடு. வேண்டும்தான் என்று நினைத்துக்கொண்டாள். அப்படி நினைப்பதே அவளுக்குச் சற்று ஆறுதலாய் இருந்தது. ஆனால், இந்தப் பிரச்சினையிலிருந்து எப்படி வெளியேறுவது என்பது மட்டும் புரியவில்லை.

யோசித்துக்கொண்டே இருந்தவள் அப்படியே தூங்கிப்போனாள். அவள் எழுந்தபோது மதியமாகியிருந்தது. முகத்தைக் கழுவிவிட்டு வரவேற்பறைக்கு வந்தாள். தூங்கி எழுந்தாலும் களைப்பு தீரவில்லை. பரத் லேப்டாப்பில் ஏதோ படம் பார்த்துக்கொண்டிருந்தான். படத்திலிருந்து பார்வையை அகற்றாமலே, "உடம்பு ஏதாவது சரியில்லையா?" என்றான்.

"இல்லல்ல.. லைட்டா தலைவலி."

"மாத்திரை ஏதாவது போட வேண்டியதானே?" என்றான். 'மதியம் சமைத்துவிடுவாய்தானே?' என்ற கேள்வியைத்தான் அவன் இடக்கரடக்கலாய் அப்படிக் கேட்கிறான் என்பதை அவள் அறிவாள்.

"மதியம் சாப்பிட்டு போடுறேன்" என்றாள்.

பரத்தைப் பற்றி அவளுக்குத் தெரியும். அவளைக் கண்டுகொள்ளாதது போலிருப்பான். ஆனால் அவளின் ஒவ்வொரு அசைவையும் தெரிந்து வைத்திருப்பான். வந்த மெயிலின் பொருட்டெழுந்த அச்சத்தைவிட, பரத்துக்கு முன்னால் மனதின் சஞ்சலச் சுவடெதுவும் வெளித் தெரியாமல் நடிப்பதே அவளுக்கு அதிக சிரமமாயிருந்தது. அவளுக்கு அன்றைய நாள் முழுவதும் அந்த மெயிலைச் சுற்றியே கழிந்தது.

அரை மணிநேரத்துக்கு ஒரு முறை கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டாள். மொபைலைக் கையில் எடுக்கவே அஞ்சினாள். அதிலிருந்து வந்த ஒவ்வொரு அறிவிப்பு ஓசைக்கும் மனம் அடித்துக்கொண்டது. அதே நேரத்தில் நாற்பத்தெட்டு மணி நேரம் கழித்தும் அவன் எதையும் யாருக்கும் உடனே அனுப்ப மாட்டான் என்று நினைத்தாள். அதிகபட்சம் இன்னும் ஒரு மின்னஞ்சல் மிரட்டி அனுப்புவான் என்று யூகித்தாள். அப்படிச் செய்தால் அவனை நம்பக்கூடாது. அது பொய்யாக இருக்கக்கூடும். அவன் தன் பெயரை அழைத்திருந்த முறையே சற்று உறுத்துகிறது. அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால், ஒரு வேளை எல்லோருக்கும் அனுப்பிவிட்டால் என்ன செய்வது? அப்படி அனுப்பினால் ஒன்றும் செய்வதற்




# பாழடைந்த வீடுகளில் பேய்களின் நடமாட்டம்

**துளசிநாதன் - மூளாய்**

ஊரிலுள்ள சில வீடுகளுக்குள் பேய் நடமாட்டம் உள்ளதாகப் பலரும் பேசிக்கொள்வதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பாழடைந்து கிடக்கின்ற அந்த வீடுகள் மிகப் பெரியவையாகவும் இருக்கக் கண்டிருக்கிறேன். மிகவும் வசதியாகவும் செல்வச் செழிப்புடனும் பல வேலையாட்கள், உதவியாட்கள் புடைசூழ வாழ்ந்த குடும்பங்களின் இடங்களே இன்று அவ்வாறான பேய்வீடுகளாகவும் பங்களாக்களாகவும் காணப்படுகின்றன.

அநேகமாக இந்தப் பெரிய வீடுகளுக்கு அருகில் அந்த ஊரில் வேறெந்த வீடுகளும் இருந்ததாக அடையாளங்கள் இல்லை. அந்தப் பெரிய வீடுகளின் எஜமானர்கள் இறந்ததன் பின்னர் கவனிக்க யாருமில்லாத நிலையில், அவர்கள் பேயாக உலாவுவதாகவும் தம்மை வெருட்டினர் அல்லது வேறு கொலைச் சம்பவங்கள் நடந்தன என்றெல்லாம் அயலிலுள்ள மக்கள் கூறுகின்றனர். அங்கு பணியாற்றிய சிலர்கூடச் சொல்கின்றனர்.

அவ்வாறான பெரிய வீடுகளின் அமைப்புகளை நன்கு தெரிந்திருப்பவர்களும், வேறு சிலரும்கூட அங்குள்ள பொருள்களைக் களவெடுப்பதற்காக இரவில் ஏதாவது சத்தம் கேட்டால் அந்த வீட்டுப் பக்கம் அயலில் உள்ளவர்கள் யாரும் போக வேண்டாம் என்றும் பயப்படுத்தி வைத்துத் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர். இவ்வாறுகூறிப் பயப்படுத்திய பின்னரும் யாராவது இரவில் அந்த இடத்துக்குச் சென்று, அங்கு களவெடுப்பதையோ களவு எடுப்பவர்களையோ அடையாளம் கண்டுவிட்டால் அவர்களால் அங்கு சென்றவர் கொல்லப்படுவதும் பேய் அடித்துவிட்டது எனக் கதையை முடிப்பதும் நடக்கிறது. பின்னர் அதுவே அந்த ஊரின் நம்பிக்கையாகவும் ஆகிவிடுகிறது.

இதுபோன்ற பல பங்களாக்களில் பேய் இருக்கிறது என்று கூறப்பட்டபோதிலும் அங்குள்ள பொருள்கள் அனைத்தும் அப்படியே இருப்பதில்லை. கூரை, கதவு, யன்னல், தளபாடங்கள் என அனைத்தும் களவாடப்பட்டிருப்பதைக் காணமுடியும். உண்மையில் அங்கு பேய் இருந்தால் அந்தப் பொருள்களைக் களவாட எவருக்கும் துணிவிருக்காது. இந்தக் கட்டடங்களுக்குச் சொந்தமான பணக்காரர்கள் பலருக்கு வாரிசுகள் இல்லாதிருப்பதும் சகோதரர்கள், சொந்தக்காரர்களுக்கிடையில் சொத்துப் பிணக்குள் இருப்பதாலும் குறிப்பிட்ட உரிமையாளர் இறந்ததும் ஏனையவர்கள் திட்டமிட்டுப் பேய்க் கதைகளை அவிழ்த்துவிடுகின்றனர்.

பாழடைந்த வீட்டில் பேய் இருக்கிறது என்றால், அங்குள்ள பொருள்கள் அனைத்தும் தானாகவே உக்கிப்போய் விழுந்து



கிடக்கவும் அங்கு யாரும் செல்வதில்லை என்பதுமே உண்மையாக இருக்கவேண்டும். ஆனால், பெரும்பாலான வீடுகள் பேய்க் கதையைக்கூறி யாரோ ஒருசிலரால் சூறையாடப்பட்டவையாகவே காணப்படுகின்றன.

---

## அந்தரிப்பு...

கில்லை. ஊரில் யாரும் செய்யாத தப்பா? நேரில் பார்த்ததுகூட இல்லையே. மனதால்கூட தவறாக நினைக்காத ஒருத்தி இங்கே இருக்க முடியுமா? அப்படி ஒருத்தியோ ஒருவனோ இருந்தால் உண்மையில் அவர்களைத்தான் அதிகம் சந்தேகிக்க வேண்டும். இதுவே இயற்கை. எல்லோரும் இதை உள்ளே உணர்ந்தே இருப்பார்கள். அச்சுவுக்கும் ஒரு நாள் இது புரியும். இப்படி நினைப்பது அவளுக்கு சற்று நிம்மதியளித்தது. என்னவானாலும் சரி இன்னுமொரு நாளில் தெரிந்துவிடும். இப்போது செய்ய வேண்டியதெல்லாம் கையிலிருக்கும் இந்த ஒரு நாளைக் கடப்பது மட்டுமே.

வீட்டைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள். வேண்டுமென்றே வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தாள். உடலைச் சோர்வடையச் செய்து இரவையாவது சற்று தூங்கிக் கடக்கலாம் என்று நினைத்தாள். ஆனால், குருட்டு அதிர்ஷ்டத்தை நம்பியிருந்த அவள் அன்றிரவு ஒரு நொடிகூட கண் அசரவில்லை. உடல் சோம்பியும் கண் எரிந்தும்கூட தூங்க இயலவில்லை. பெரிதாக கடவுளை நம்புபவள் கிடையாது. ஆனால், பிரார்த்தனையாக முணுமுணுத்துக்கொண்டாள். இந்த ஒரு முறை தப்பிவிட வேண்டும் என்று வேண்டிக்கொண்டாள்.

நிமிடம் நிமிடமாய்க் கடந்தது. திங்கட்கிழமை ஆதலால் அச்சு பள்ளிக்கும் பரத் அலுவலகத்துக்கும் கிளம்ப அதுவே பெரும் ஆசுவாசமாய் இருந்தது. அன்று மதியம் மூன்று பத்தானது. கைகள் நடுநடுங்க மொபைலை வைத்துக்கொண்டிருந்தவள் வரக்கூடிய சமிக்ஞைக்காக காத்துக் கொண்டிருந்தாள். ஆனால் அது வரவில்லை. மூன்று பத்து, நான்கு பத்து, ஐந்து பத்து என்று ஒவ்வொரு மணி நேரம் கூடக்கூட அவளுக்கு மனம் இலேசாகி மெல்ல மெல்ல உயரப் பறக்க ஆரம்பித்தது.

திரும்பவும் ஒருமுறை அந்த மின்னஞ்சல் வந்த நேரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள ஜி-மெயிலைத் திறந்தாள். அந்த மின்னஞ்சலைக் காணவில்லை. மேலும் கீழுமாய் சென்று பார்த்தாள். பின்னர், மெதுவாக நகர்த்தி ஒவ்வொரு மின்னஞ்சலாகப் பார்த்தாள். அப்படியொன்று இல்லவே இல்லை. தவறுதலாக கைபட்டு



அழிந்துவிட்டதோ என்று நினைத்து 'பின்'னில் தேடினாள். அங்குமில்லை. 'ஆடம் பீச்' என்று பெயரிட்டுத் தேடினாள். அப்படி ஒரு பெயரே இல்லை என்று காட்டியது. மறுபடியும் குழம்பினாள். இந்த முறை சந்தோஷக் குழப்பம். இனி எப்போதும் மின்னஞ்சல் வராது என்பது அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது. அன்றிரவு அந்தக் கனவும் வரப்போவதில்லை. இது ஒன்று மேயில்லை. தான் தப்பித்துவிட்டோம் என்று உள்ளுணர்வு மிகத் தீவிரமாய்ச் சொன்னது.

பூதாகரமாய் நினைத்தது பெரிதாய் ஒன்றுமில்லாமல் போனது குறித்து அவளுக்கு பெரும் நிம்மதி. நன்றாகப் பசிக்க ஆரம்பித்தது. இரண்டு நாட்களாகச் சரியாகச் சாப்பிடவில்லை. சட்டென்று சுறுசுறுப்பு தொற் றிக்கொண்டது. படுக்கையிலிருந்து எழுந்தாள். வாய்க்கு ருசியாக ஏதாவது நல்லதாகச் சாப்பிட வேண்டும்போல் இருந்தது. பிரிட்ஜ்ஜிலிருந்த வாழைக் காயை எடுத்து அரிந்து பஜ்ஜியும் மிச்சமிருந்த இருந்த ரவையைக் கிளறி கேசரியும் செய்தாள். அடுப் பில் டீயைக் கொதிக்க வைத் தாள். இரண்டு நாட்களாய்த் தூறிக் கொண்டிருந்த வானம் வெளி றித் தெளிந்திருந்தது. பால்கனியிலிருந்து பார்த்தாள். பச்சை துளிர்த்து தெருவே புதிதாகத் தெரிந்தது.

காற்றுக்கு கிளையாடப் பறந்து செல்லும் குருவிகள் போல மனத்தை அழுத்திய அத்தனை பிரச்சினைகளும் ஒரே நிமிடத்தில் பறந்தோடின. படுக்கையறையில் சார்ஜ் போடப்பட்டிருந்த மொபைலை எடுத்து இன்பாக்சுக்குள் நுழைந்தாள். ■

மைல் 16

# தொலைதூர காதல்

கலியுக பித்தன்

சங்கரனின் கைகளை பிடித்து நேராக வகுப்பிற்குள் கூட்டி சென்றாள். ஒட்டுமொத்த வகுப்பும் அவர்களை விநோதமாகப் பார்த்துக்கொண்டிருந்தது.

கோபத்துடன், "என்ன" எனும் பாணியில் தலையை மேலே தூக்கி அசைத்தாள் ரவீனா.

திடீரென அவளிடமிருந்து அந்த முக பாவனையை எதிர்பாராத மாணவர்கள், பார்வையை அவர்களிடமிருந்து எடுத்து தங்கள் வேலைகளில் குவித்தனர்.

ரவீனா சங்கரனை கதிரையில் போய் அமருமாறு கூறிவிட்டு, ராஜூவை நோக்கி வெளியில் வருமாறு சைகை செய்தபின் வகுப்பிலிருந்து வெளியேறினாள்.

எதுவுமே புரியாத ராஜூ சுந்தரை பார்த்து முழித்துக் கொண்டிருந்தான்.

"என்னடா என்னை எதுக்கு கூப்பிடுறாள்?"

"எனக்கா தெரியும்? "

"டேய் மச்சான் நீயும் வாவன்டா.."

"உன்னைதானே கூப்பிட்டா.. பிறகு என்னத்துக்கு நான்..."

"என்னடா இப்டி சொல்றா.. நீயும் வா எனக்கு சப்போர்ட்டா.." சுந்தரின் கைகளை பிடித்து பிசைந்தான்.

"சரி சரி நட வாறன்..."

ராஜூவும் சுந்தரும் எழுந்து வெளியே வர, ரவீனா இருவரையும் தனியாக ஓரிடத்திற்கு அழைத்து சென்றாள்.

"ஏய் ரவீனா, எங்கடி கூட்டிக்கொண்டு போறா?" மெதுவாக கேட்டான் ராஜூ.

"நீ வாவன்..."

"சொல்லிட்டு கூட்டிக் கொண்டு போவன் "

"ஏன் சொன்னாதான் வருவீங்களோ?"

"அப்டி இல்லை, ஒரு பொம்பிள பிள்ளை இப்பிடி ஆம்பிள பிள்ளையை தனியா கூட்டி கொண்டு போறாய், அப்பிறம் ஒன்டு கிடக்க ஒன்டு......"

ரவீனாவின் ஏற இறங்கல் பார்வையில் மிகுதியை தனக்குள் விழுங்கி கொண்டான் ராஜூ.

"என்ன சுந்தர் சத்தத்தையே காணேலை?" சுந்தரை பார்த்தபடி கேட்டாள்.

"நீ அவனை தானே கூப்பிட்டா, இதுல நான் என்னத்தை கதைக்கிறது? " சலித்து கொண்டான்.

"ஓஹோ ஐயாக்கு அதான் பிரச்சனையோ? என்ட கண்ணில டக்கென்டு அவன் தான் பட்டான்... அதான் அவனை கூப்பிட்டன்.. உங்க ரெண்டு பேரில யாரை கூப்பிட்டாலும் மற்ற ஆளும் வருவீங்க என்டும் தெரியும்..." நடப்பதை நிறுத்தி, விளக்கம் கொடுத்தாள்.

"சரி சரி சமாளிச்சது காணும்..."

"என்னை நம்பலையா நீ.."

"நம்பிறன் நம்பிறன் " அந்த நம்பிக்கை வார்த்தையில் வந்ததே தவிர அவன் முகத்தில் துளியும் இல்லை..



**அவள் மறுபக்கம் திரும்பி அமைதியாக நின்றாள். அவளின் வாய்களில் இருந்து எந்தவொரு வார்த்தைகளும் வராததால் அங்கு குறுகிய நேரத்திற்குள் பேரமைதி தொற்றி கொண்டது**

"நீ என்னை நம்பேலையென்டு தெரியுது. ஆனா அவனை மட்டும் நான் ஏன் கூப்பிடோனுமென்டு நீ யோசிக்கேலையோ?"

அமைதியாக சுந்தர் நிற்க,

"ஓமோம் என்னை எதுக்கு நீ கூப்பிட்டா " ராஜூ தொடங்கினான்.

"ச்சோ நிப்பாட்டுங்கடா சாமி.. ஆளாளுக்கு பதில் சொல்லிக் கொண்டு நிக்க என்னால ஏலாது.. நான் உங்களை கூப்பிட்ட விசயத்தை சொல்றன் " பெருமூச்சொன்றை வலு வேகமாக விட்டாள்.

ராஜூவும் சுந்தரும் ஆளையாள் பார்த்து திகைத்து கொண்டு ரவீனா சொல்ல போகும் விசயத்தை கேட்க தயாரானார்கள்.

அவள் மறுபக்கம் திரும்பி அமைதியாக நின்றாள். அவளின் வாய்களில் இருந்து எந்தவொரு வார்த்தைகளும் வராததால் அங்கு குறுகிய நேரத்திற்குள் பேரமைதி தொற்றி கொண்டது.

"என்னென்டு சொல்லன் கேப்பம் " சுந்தர் குடைந்தான்.

"அதானே சொல்லவென்டு சொல்லிட்டு பிறகென்ன சத்தமொன்டும் இல்லாம இருக்கிறா?" சுந்தருக்கு ஆதரவாக ராஜூ ஆஜர் ஆனான்.

"சங்கரனை பற்றி என்ன நினைக்கிறீங்கள்?"

திடீரென அவளுடைய கேள்வி இருவரையும் குழப்பத்தில் ஆழ்த்தியது.

"எடுத்த எடுப்பில இப்பிடி கேட்டா நாங்க என்னத்தைச் சொல்றது?"

"உங்களுக்கு என்ன தோணுதோ அதை சொல்லுங்கோ"

மீண்டும் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து கொண்டு அமைதியாக நின்றனர்.

"எங்களுக்கு எதுவும் தோணேல" ஒருமித்த குரலில் ஒப்புவித்தார்கள்.

"நானே சொல்றன்..."

சிறு இடைவெளியின் மீண்டும் தொடர்ந்தாள்.

"சங்கரனுக்கு மென்டல் டிஸோடர்.." எடுத்த எடுப்பில் சொல்லி முடித்தாள்.

"என்ன அவனுக்கு பைத்தியம் அதானே?" நான்காவது குரல் ஒலித்த திசையில் திரும்பி பார்க்க அங்கே சந்துரு நின்று கொண்டிருந்தான்.

"நீ எப்பிடி இங்க?" முறைத்தாள் ரவீனா.

"சீதை இருக்கும் இடம்தான் ராமனுக்கு அயோத்தி"

"உனக்கு பைத்தியமா... அலம்பிறா?"

"எனக்கு பைத்தியமில்லை. உன்ட ஒருதலை காதலனுக்கு தான் பைத்தியம்.." நக்கலாக சொன்னான்.

"அவனுக்கு ஒன்டும் பைத்தியமில்லை." கோபத்தோடு வார்த்தைகளை உதிர்த்தாள்.

"ஓமோம் உனக்கு அவனில சரியான பைத்தியம். அவனுக்கு பைத்தியம் என்டது உனக்கு தெரியாதுதானே.."

"உன்னை மாதிரி பெட்டையளுக்கு பின்னால அலையிற பைத்தியமா அவன்?" முறைத்தாள்.

"நான் ஒன்டும் பெட்டையளுக்கு பின்னால அலையேல. நீ என்ன மாதிரி சங்கரனுக்கு பின்னால அலையிறியோ அதை மாதிரி தான் நானும் உனக்கு பின்னால அலையிறன்... அவ்வளவு தான் " அழுத்தமாக பதிலளித்தான்.

ராஜூவும் சுந்தரும் என்ன நடக்கிறது என்பது புரியாமல் பேந்த பேந்த முழித்து பார்த்து கொண்டிருந்தனர்.

"வாயை மூடு... உன்னையும் அவனையும் ஒப்பிடாத.."

"அப்போ உன்னையும் என்னையும் ஒப்பிடவா?"

சந்துருவின் கேள்விகள் மேலும் மேலும் ரவீனாவை எரிச்சலூட்டியது.

"என்ன உன்னோட ஒப்பிடவோ?" மேலும் உசுப்பினான்.

"உன்னோட பேச நான் ரெடி இல்லை.. இப்பிடி பின்னால களவா வந்து கதைக்கிற கதையளை ஒட்டு கேக்க வெக்கம் இல்லையோ?" சினந்தாள்.

"என்ன அவனுக்கு பைத்தியம் என்ட கதையை ஒட்டு கேட்டதுக்கோ இவ்ளோ துள்ளுறா? அவனுக்கு பைத்தியம் என்டது

## ஐ.நா மனித ...

**தமிழர் தரப்பில்**
**மனித உரிமை விவகாரம்**

தமிழ் அரசியல்வாதிகள் மட்டத்தில் ஏற்கனவே ஆயுத அமைப்புகளில் இருந்த பலர் தமது அமைப்புகள் சார்பாகவும் இந்திய இலங்கை படையினரின் பின்னணியிலும் செயற்பட்டவேளை பல மனித உரிமை மீறல்களை மேற்கொண்டிருப்பதால் அவர்கள் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுவதுபோல ஐ.நா. மனித உரிமை ஆணையருக்குத் தமது எழுத்து மூல ஆவணங்களை அனுப்ப முடியாது (அவ்வாறு அனுப்பினாலும் அவற்றை ஐ.நா. பரிசீலிக்கப்போவதில்லை). கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாக இருப்பினும் ரெலோ, புளொட் ஆகிய ஆயத அமைப்புகளைத் தமது கூட்டாக வைத்திருப்பதும் விக்னேஸ்வரன் அணியில் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் போன்றவர்கள் இடம்பெற்றிருப்பதும் மனித உரிமை விடயங்களைப் பேசுவதற்கான தளத்தை அந்தக் கட்சிகளுக்கு இல்லாது செய்திருக்கிறது.

ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அறிக்கை என்பதில் பத்தோடு பதினொன்றாகத் தமிழர் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறதே தவிர அதில் வேறேதும் இல்லை. இது 48ஆவது கூட்டம் 51ஆவது கூட்டத்தொடரில் தீர்க்கமான முடிவுகள் தமிழருக்குக் கிடைக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழர் தரப்பு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒற்றுமையின்றிச் சிதறியிருப்பதால் இறுதிப் போர் தொடர்பில் இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைப்பது என்பது எந்த வகையளிலும் சாத்தியமில்லை. கடிதம் எழுதுவதில் தமிழ்த் தலைவர்கள் சொற்பிழை, பொருட்பிழை, இலக்கிய இலக்கணப் பிழைகளைத் தேடுவதாலோ அவற்றையெல்லாம் சீர்செய்து திருத்திய கடிதம் ஒன்றை அனுப்புவதாலோ ஐ.நா. மனித உரிமைகள் சபை இதற்கு மேல் தமிழர் விடயத்தைக் கருத்தில் எடுக்கப்போவதில்லை என்பதைக் கடந்த 12 வருடகால அனுபவத்தின் ஊடாகத் தமிழ் மக்கள் புரிந்துகொள்வதே இன்றுள்ள தேவையாகும்.

---

## அகரத்தில் மூன்று உறை கிணறுகள் ஒரேயிடத்தில்...!

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள கீழடி, மணலூர், அகரம், கொந்தகை ஆகிய இடங்களில் இதுவரை ஆறு கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்றுள்ளன.

தற்போது 7ஆம் கட்ட அகழாய்வுப் மணி கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதுவரை 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அகரத்தில் நடைபெற்று வரும் அகழாய்வின் போது 8 அடி ஆழத்தில் ஒரே குழியில் 2 அடுக்கு மற்றும் 3 அடுக்குகள்கொண்ட அருகே அருகே 3 உறை கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கிடைப்பது இதுவே முதன்முறை ஆகும். இது ஆராய்ச்சியாளர்களிடம் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனை தொடர்ந்து அகழாய்வுப் நடத்தும் பட்சத்தில் இதன் அகலம் உயரம் மற்றும் முழு பயன்பாடும் தெரியவரும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

மேலும் அகரத்தில் கிடைத்துள்ள உறை கிணுறுகளை பற்றி தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தனது ட்விட்டர் பக்கத்தில் அகரம் இப்போ சிகரம் ஆச்சு என பதிவு செய்துள்ளார்.

மேலும் தொடர்ந்து கீழடி,கொந்தகை மணலூர் அகரம் ஆகிய நான்கு இடங்களில் அகழாய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

---

# கிளிப்பிள்ளைப் பாடமெண்டிறது இதுதானோ?

**கதிரேசன் காத்தவராயன்**



"அதிலை செல்லரண்ணை வீட்டடியிலை நிண்டால் நாலைஞ்சு மீன்காறர் வருவங்கள் நல்ல மீனுமாம்.. விலையும் பறவாயில்லையாம்" எண்டு என்ரை மனிசி கதைச்சது ஒரு நல்ல விசயமல்லே? செல்லரண்ணை வீட்டுக்குப் போனன். தம்பர் அங்கையிருந்துது. செல்லரண்ணையின்ரை மேள் "வாங்கோ மாமா.. இருங்கோ" எண்டுது. பேந்தென்ன கதைக்கத் தொடங்கினம் எண்டதை சொல்லவே வேணும்?

"சூசூ... ஊரடங்கு எண்டதைச் சத்தியம் பண்ணிச் சொன்னாலும் நம்புற மாதிரியே கிடக்குது?" எண்டு தொடக்கினன் கதையை. தம்பர் உடனை குறுக்கை நுளைஞ்சார் "அது ஊரடங்கு இரவு பத்துக்கும் விடிய நாலுக்கும் இடையிலையல்லே... இப்ப பகலிலை தனிமைப்படுத்தல்தானே... அதாலைதான் சனம் திரியுது" எண்டொரு புது விளக்கத்தைச் சொல்லிச்சுது.

செல்லரண்ணையின்ரை மேள் பிலத்தாச் சிரிச்சுப்போட்டுது. பிறகு "தம்பண்ணை உந்த விளக்கத்தை ஆரண்ணை கண்டுபிடிச்சது? உங்களுக்கு சொன்னதாரண்ணை? அந்த வருசத்துக்கான சிந்தனையாளர் விருது குடுக்கலாம்.." எண்டு பிறகும் சிரிச்சுது. தம்பர் முளிச்சார். "ஆரெண்டு பிள்ளை சொல்ல? உங்கை எல்லாரும் திரியினம்... றோட்டுகள் சந்தியளிலை ஆமியள் பொலிசுகள் நிக்குதல்லே அவங்கள் ஒண்டும் பறையாமலுக்கு நிக்கிறதைப் பாத்தா அது சரிதான் போலையல்லே கிடக்குது?" எண்டு செல்லரண்ணைதான் தம்பருக்காக சப்போட் பண்ணிறமாதிரிச் சொல்லிப்போட்டு எல்லாரையும் ஒரு பார்வை பாத்தார்.

"அவங்கள் சனம் பாவமெண்டோ என்னத்துக்கோ பேசாமல் நிக்கிறாங்கள். உண்மையா சனம் வீட்டுக்கையே கிடந்தா சாப்பிடுறதுக்கு என்ன கிடக்கு? அதையிதைச் செய்து ஏதோ காசு தேடாட்டில் சாப்பிடுகிறதுக்கு என்ன செய்ய?" எண்டு நான் சொன்னன். அதுக்கு அவள் பெட்டை "காசு தேடுறது ஒரு பக்கம் சாமானுகள் தேடுறதல்லே பெரிய வேலையாப்போச்சுது? நாட்டுக்குள்ள தாராளமாய்ச் சாமானுகள் கிடக்கெண்டு வாய்க்கு வாய் சொல்லுகினம்... கடையளிலை இல்லையெண்டா எங்கை கிடக்கெண்டது தெரியாமலுக்கொ இருக்கினம்? சனம் பாவம்.." எண்டாள் அவளின்ரை கதைக்குப் பின்னாலை பெரிய உண்மை கிடக்குதல்லே?

"உதுகள் உனக்கேன்ரியம்மா? அதுகள் பெரிய இடங்களின்ரை பிரச்சனையல்லே?" எண்ட செல்லரண்ணை மேளை அடக்கப் பாத்தார். அவள் விடுவாளே? "அதுகள் பெரிய இடத்துப் பிரச்சனைதான் எண்டது எல்லாருக்கும் தெரியும்.. அதை மறைக்கிறதுக்குத்தானோ என்னவோ சனம் பொறுப்பில்லாமல் நடக்குது ஒழுங்கு விதியளைக் கடைப்பிடிக்குதில்லை, கட்டுப்படுகுதில்லை, சொல்வழி கேக்குதில்லை எண்டு ஒரே மாதிரியே சொல்லிக்கொண்டல்லே பெரிய இடங்கள் இருக்கு?" எண்டாள்.

"உண்மைதான் பிள்ளை உன்ரை நியாயமும் சரிதான் கொப்பரின்ரை பயமும் நியாயந்தான்... நான் அதிலை வீட்டடியிலை வாங்காமலுக்கு இஞ்ச மீன் வாங்க வாறது பிழைதான்.. அதுதான் அநாவசியமான நடமாட்டம். ஆனால் மலிவாய் வாங்கினால்த்தானே கட்டுப்படியாகும்? அப்பிடி தேடி வாங்காட்டில் காசல்லே அனியாயமாகுது... கையிலை மட்டுமட்டாய்க் கிடக்கிற காசை ஏன் வீணாய்க் குடுப்பான் எண்டு நான் யோசிக்கிறன்.. ஒவ்வொருத்தனும் அப்பிடித்தானே நினைக்க வேண்டிக் கிடக்குது...இல்லையோ?" எண்டன். எல்லாருமே ஓமெண்டினம்.

"கலியாண வீடு செத்த வீடு சாமத்திய வீடு பிறந்தநாளெண்டு கூடிக்கும்மாளமடிக்கிறதை வேணுமெண்டால் பொறுப்பில்லாத்தனம் எண்டு திட்டட்டும்... ஆனால் உழைச்சுச் சாப்பிடுறதுக்கும் சாமானுகளை மலிவாய் வாங்கிறதுக்குமெண்டு சனம் வீட்டாலை வெளியாலை வருகுதெண்டதை குறைசொல்லுற தகுதி ஒருதருக்கும் இல்லை.." எண்டு செல்லரண்ணையின்ரை பெட்டை சொல்லிப்பொட்டு அங்காலை போனாள்.

முளிச்சுக்கொண்டிருந்த தம்பர் "உண்ணாணை தெரியாமல்தான் கேக்கிறன்! ஊரடங்குச்சட்டம் இரவுக்கோ முழு நாளுக்குமோ?" எண்டதைக் கேக்கப் பாவமாய்க்கிடந்துது. "முழுநாளுக்குந்தான். சனத்தைக் குறைசொல்லுறதை விட்டுப்போட்டு சனத்தின்ரை வயித்துப்பாட்டுக்கு ஏதாலும் செய்வம் எண்டிற சிந்தனை வந்தாத்தானே? கிளிப்பிள்ளைப் பாடம் மாதிரி சொல்லிக்கொண்டி ருக்க வேண்டினதுதான்.." எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க மீன்காறன் வந்திட்டான். மீன்வாங்கப் போட்டம்.

---

### தொலைதூர ...

எனக்கு எப்பவோ தெரியும்.."

"அவனுக்கு பைத்தியம் இல்லை என்டு சொல்லுறது உனக்கு விளங்கலையோ முண்டம் " பார்வையாள் எரித்தாள்.

"இஞ்சே சந்துரு உனக்கு இப்போ என்ன பிரச்சினை... ஆ..." சுந்தர் முறுகினான்.

"நானும் அவளும் தானே கதைக்கிறம். உனக்கு என்ன பிரச்சினை.." பதிலுக்கு முறுகினான் சந்துரு.


"என்னோட யாரும் கதைக்க தேவையில்லை. நான் அவங்களோட கதைக்கதான் வந்தன். நீ மூடிக்கொண்டு போடா" வார்த்தையில் வன்மத்தை தெளித்தாள்.

"அதான் அவளே சொல்லிட்டாள் எல்லோ.. இதுக்கு மேல ஏதாச்சும் கதைச்சா என்டா கதை வேற மாதிரி போகும்.." ஒரு அடி முன்னே நகர்ந்து சுந்தர் இரைய, ராஜூ அவனின் கைகளை பிடித்து சாந்தமாக்கினான்.

மேற்கொண்டு பேச இயலாதவனாய் ரவீனாவையும், சுந்தரையும் முறைத்து கொண்டு அங்கிருந்து விலகினான் சந்துரு. மூவரும் அவனை எரிச்சலோடும், கோபத்தோடும் பார்த்து கொண்டிருந்தனர்.

பயணம் தொடரும்...






# மலிவு விலையில் கங்கணா...?

தலைவி படத்தில் நடித்த கையோடு கங்கணாவுக்கு இராமனின் மனைவி சீதையாக நடிக்கும் அடுத்த பட வாய்ப்புக் கைக்கு எட்டியிருக்கிறது. பல மொழிகளில் பிரம்மாண்டமாக உருவாகி வருகின்ற 'சீதா அவதாரம்' திரைப்படத்தில் நாயகியாக நடிப்பதற்குக் கங்கணா ரணாவத் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அலாவுகிக் தேசாயின் இயக்கத்தில் உருவாகும் இந்தப் படத்தில் கரீனா கபூர்தான் சீதையின் பாத்திரத்தில் நடிப்பார் என்று கூறப்பட்டது. இதில் நடிப்பதற்கு அவர் அதிக சம்பளம் கேட்டதால் கங்கணா ரணவத் நடிக்கிறார். இதைப் படத் தரப்பும் உறுதி செய்துள்ளது. கரீனா கபூரைவிட மலிந்த சம்பளத்தில் ஒப்பந்தமாகியுள்ள கங்கணா ரணவத் தலைவி படத்தையடுத்து இதிலும் தடம்பதிக்கவுள்ளார்.

இந்தப் படத்தின் சுலரொட்டியைத் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்திருக்கிறார் கங்கணா. அவருடன் எடுத்துக்கொண்ட ஒளிப்படத்தைப் பகிர்ந்து, 'சீதா தொடங்குகிறது. இதுவரை சரியாக ஆராயப்படாத தெய்வீகக் கதாபாத்திரத்தைப் பற்றிய கனவு தற்போது உண்மையாகியிருக்கிறது. சீதாவாக நடிக்க கங்கணா ரணாவத்தை ஒப்பந்தம் செய்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி." என்றுள்ளார் இயக்குநர் அலாவுகிக் தேசாய். கங்கணாவுடன் இதிலும் 'தலைவி' திரைப் படத்துக்குத் திரைக்கதை எழுதிய விஜயேந்திர பிரசாத் இணைகிறார். அவரது திரைக்கதையில்தான் உருவாகிறது சீதை...!

# எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்

24

எண்ணங்கள் வழி செயல்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நோக்கம் உண்டல்லவா? அந்த நோக்கம் அதனையடைவதற்கான முயற்சி என யாவுக்குமான உந்து விசை எங்கேயிருந்து வரவேண்டும்? எண்ணத்துக்குரியவனாகிய நானிலிருந்து அந்த உந்துவிசை கிடைக்காதுவிட்டால் எண்ணத்துக்கான செயல் வடிவம் எப்படிக் கிடைக்கும்? ஆக நான் என்பது தவிர்க்கக் கூடியதா? தவிர்த்து விட்டு எதனைச் சாதிக்கப்போகிறோம்? எதனைச் சாத்தியமாக்கப்போகிறோம்?

பற்றுக்களிலிருந்து விடுபடுதல் என்கிறோமே அது சாத்தியமானதா? கற்பனையுலகாயிருக்கிற மறுபிறப்பு இறைவன்திருவடியின் பேரின்பப்பேறு போன்ற கற்பிதங்களை தலைக்கு மேலும் தலைக்குள்ளும் நிறைத்துக்கொண்டிருப்பதுதான் காவித்திரிவதுதான் பற்றறுநிலையா? பற்று என்பதன் அர்த்தம் என்ன? பற்றறல் என்பதன் அர்த்தம் என்ன? இங்கே எண்ணமும் செயலும் முரண்படுவதை அவதானிக்க முடியவில்லையா? எண்ணமே தனக்குள் முரண்படுகிறதே? உணரமுடிகிறதா? முரண்கள் எப்போதுமே முட்டி மோதிக்கொண்டிருக்கும் என்பது இயற்கை. அப்படியாயின் நாம் எதிர்பார்க்கிற அமைதி கிடைத்துவிட வாய்ப்புக்கள் உண்டா?

எதிர்காலம் மறுபிறப்பு இறைவன்திருவடி என்றெல்லாம் பேசுகிற கற்பனைக் கானற்புள்ளியை அடைவது அல்லது அண்பிப்பது என்பன சாத்தியமா? அதற்கான முயல்வுகள் எல்லாம் வீணல்லவா? யதார்த்த உலகில் நிகழ்காலத்தில் தொட்டுணர முடிந்தனவற்றை உதறியெறிந்து விடுதல் சாத்தியமா? அதுவும் கற்பனையைப் பிடிப்பதற்காக நிகழ்கால சாத்தியங்களை கைநழுவ விடுதல் என்பது சிந்தனைத் தெளிவோடிருக்கிற ஒருவனால் செய்துகொள்ள முடியுமா?



நான் எனும் ஒரு தொடக்கப் புள்ளியும் இன்று என்கிற நிகழ் யதார்த்தப் புள்ளியும் அவற்றுள்ளுள்ள சாதக பாதகங்களும் அவற்றால் எழுப்பப்படுகிற சிக்கல்களும் அவற்றுக்கான தீர்வுகளுமின்றி இருக்கின்ற ஒருவனால் எதனைச் சாதிக்க முடியும்? எதனை எட்டமுடியும்?

நான் என்கிறதை தொடக்கப் புள்ளியாகக் குறிப்படுதுகூடச் சரியானதுதானா? அதனை மையப் புள்ளியென்றுகூடச் சொல்ல முடியுமல்லவா? எமது எண்ண வளையங்கள் உற்பத்தியாவது அங்கல்லவா? எண்ண வளையங்கள் உற்பத்தியாவது மட்டுமல்ல விரிந்து வியாபிப்பதற்கான உந்து விசை கூட அந்த மையப்புள்ளிதானே? நூலிழை அறுந்த பட்டம் உயர்ந்து பறக்க வாய்ப்புளேதுமுண்டா? அதற்கு ஒரு இழுவிசை அல்லது பிடிமானம் தேவைப்படுகிறதல்லவா? நான் எனும் நாணறுந்து உயர்தல் சாத்தியமாகுமா?

நானெனும் ஒன்றும் அதன் கிளைகளான எனது எனக்கான எனக்காக போன்றனவும் இல்லையென்பதை கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அதில் என்ன சாரம் இருக்கிறது? என்ன அர்த்தமிருக்கிறது? நான் எனும் தொடக்க நிலைப்புள்ளி இல்லாது நாமென்றோ நாங்களென்றோ நீயென்றோ நீங்களென்றோ எதையாவது அர்த்தப்படுத்திக்கொள்ள முடியுமா? அப்படிச் சாத்தியங்கள் உள்ளனவா? எமையறிதல் என்பதன் நிலை மையம் எனையறிதல் அல்லவா?

என்னை நான் அறிந்து கொள்வதை விடுத்து எனக்கு வெளியேயுள்ளவற்றை எப்படி அறிந்துகொள்வது?

இப்பகுதிக்கான ஒரு துணைப் பகுதியே இது.

நாம் யதார்த்தமான எம்மை(என்னை) விடுத்து எங்கெங்கோ அலைகிறோம். விஞ்ஞானம் மனிதனது செயல்களையெல்லாம் அவனது எண்ணங்களே நெறிப்படுத்துவதாக உறுதிசெய்ததன் பின்னாலும் தெளிவுபெறமுடியாத நிலைக்குள்தான் இருக்கிறோம் என்பது கசப்பான உண்மையல்லவா? ஏற்கனவே யாராலோ என்ன நோக்கத்துக்காகவோ உருவாக்கப்பட்ட கருத்துகள் அதனை உருவாக்கியவனுக்கு பயனுள்ளதாக இருக்கலாம். இருக்கவே வேண்டும்.

நான் என்பதை விட்டொழியுங்கள் என்று போதித்தவன் நான் என்கிற தன்னை விட்டொழிந்துதான் அப்படிச் சொன்னானா? விட்டொழியுங்கள் என முன்னிலையில் சொல்ல வேண்டிய தேவை என்ன? சரி தேவையிருக்கிறதாகவே கொண்டாலும் தன்னையே தொலைத்த ஒருவன் சொல் கேட்கப்படக் கூடியதுதானா? தன்னையே கவனித்துக்கொள்ளத் தவறுகிற ஒருவனால் வாழ்க்கை பற்றி எந்தளவுக்குத் திருத்தமாக கவனிக்க முடியும்? தன்னிலை பிறழ்ந்தவனாக அல்லது உணர்வற்றவனாக அவனைக் கவனிக்க வேண்டியுள்ளதல்லவா?

தானிருக்கும் யதார்த்தத்தை உணரமுடியாதவனால் நாளை என்கிறதை கற்பிக்க முடியுமா? சிந்திப்போம்.

# கவிதை எனும் தேனாறு

## மலையாளத்தில் மொழிபெயர்ப்பாகும் கவிஞர் சோ .பத்மநாதன் கவிதைகள்

● வேலணையூர் _ தாஸ்



9

சோ.பத்மநாதனின் பிந்திய கவிதைகள் 34 மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மொழி பெயர்த்தவர் கே.எஸ் வெங்கிடாசலம். இத்தொகுப்பு கவிஞர், விமர்சகர், நாட காசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முக ஆளுமை படைத்த மு.சச்சிதா னந்தனுக்குச் சமர்ப்பணம்.

கேரளத்தின் கொடுங்கல்லூரைச் சேர்ந்த கவி செபஸ்தியன் தமது PULITZER BOOKS ஊடாக இதை வெளியிட்டுள்ளார். இந்தச் செய்தியை அண்மையில் முகநூலில் படிக்க கிடைத்தது

சோ.பா என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் சோ.பத்ம நாதன் அவர்கள் ஈழத்தின் தலைசிறந்த முத்த கவிஞர், பேச்சாளர், மொழிபெயர்ப்பாளர், விரிவுரையாளர் எனப் பன்முகமாகச் செயற்படு பவர்.

**காவடிச் சிந்து**
**வடக்கிருத்தல்**
**ஆபிரிக்கக் கவிதைகள்**
**தென்னிலங்கைக் கவிதை**

நினைவுச் சுவடுகள் உட்படப் பல நூல்களை எழுதியவர்.இவரது கவிதைகள் மலையாளத்தில் வெளியிடப்படுவது அவருக்குக் கிடைத்த மதிப்பு மட்டுமல்ல ஈழக் கவிதைகளுக்குக் கிடைத்த அங்கீ காரமாகவும் கொள்ளப்படலாம். வாழ்த்துக்கள் சோ.பா சேர்.

இவரது பழைய கவிதையொன்று இணையத்தில் கிடைத்தது. காரை சுந்தரம் பிள்ளை அவர்கள் காலமானபோது இவரால் எழு தப்பட்டது. துயரும் ஆற்றாமையும் நிரம்பியிருக்கிற அக்கவிதை செம்மண் வாசகர்களுக்காக...

### தமிழுறானவர் முதுசொம்

*காரை என்ற புனைபெயர் தாங்கியே*
*கவிதை வானில் எறித்த முழுநிலா*
*ஊரைத் தன்னெழுத் தூழியத் தால்தமிழ்*
*உலகெலாம் நிலை நாட்டிய உத்தமன்*
*ஆர வாரமற்(று) ஆய்வுகள் செய்தவன்*
*அநுப வஸ்த்தன் ஆசிரியர் நடுவன்ஓர்*
*தாரகை எனப் போற்றிடத் தக்கவன்*
*தமிழ ரானவர் முதுசொம்நம் சுந்தரம்*
*நாட்டுக் கூத்துக்கள் ஆடி நயந்தவன்*
*நாட கத்தின் வளங்கள் அறிந்தவன்*
*ஏட்டில் கூத்துப் பழக்கும் அண்ணாவியார்*
*இரவெ லாம்மத் தளத்தொ டிசைத்திடும்*
*பாட்டில் நெஞ்சைப் பறிகொடுத் துப்பல*
*பாத்தி ரங்களை ஆட்டிப் படைத்தவன்*
*வாட்டும் நோய்தரு வாதையினூடும் நம்*
*மலைய கத்தவர் கூத்தை ஆராய்ந்தவன்*
*ஆர வாரங் கடந்தவன் தன்முதுகு*
*ஆரும் ஏற அனுமதிக் காதவன்*
*ஈர அன்பினன் உதவிகள் செய்வதில்*
*ஈடில் லாதவன் நட்புக் கிலக்கணம்*
*நேரில் போயிரு வார்த்தைகள் சொல்லிக்கண்*
*நீரி லாட்ட ஒண்ணாத மிகப்பெருந்*
*தூரமாம் எனும் சோகம் சுமந்தனம்*
*தூய நெஞ்சினோய்! சென்றுவா நண்பனே!*
*கண்ணை மூடிநீ தூங்குகிறாய், உன்றன்*
*காதல் மக்கள் கண்ணீர் கடலாட, நான்*
*என்ன வாறவர்க் காறுதல் சொல்லுகேன்!*
*ஏவர்தாம் எனக் காறுதல் சொல்லுவார்!*
*விண்ணை மூடிக் கவிந்தது காரிருள்*
*வீட்டில் எல்லா விளக்கும் அணைந்தன*
*எண்ண எண்ண இனிக்கின்ற பண்பினோய்*
*எண்ணுகேன் உனை என்றைக்கும் எண்ணுகேன்!*

**சிலேடைக் கவிதைகள்**

பழம் தமிழ்க் கவிதைகள் தான் கொண்டிருக்கின்ற ஓசை அமைவு இலக்கணம் என்பதற்கேற்ப பல்வேறு வகையான பாவினங்களாக வகைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. அது மட்டுமன்றி அதன் அழகை கருத்துச்செறிவைக் கூட்டும் வண்ணம் பல அணி அலங்காரங்களையும் கையாண்டு அக்காலப்புலவர்கள் பாடல் இயற்றினார். இதில் ஒன்றுதான் சிலேடைஅணி. புலவர்கள் பெரும்பாலும் ஒரு பொருளையே அமைத் துப் பாடுவர். சில நேரங்களில் ஒரே பாடலில் இருவேறு பொருள் அமையுமாறும் பாடுவர். தமிழில் ஒரு சொல் பல பொருள் உணர்த்து வதும் உண்டு. அதேபோல ஒரு சொல்தொடரும் வெ;வேறு வகையா கப் பிரிப்பதற்கு ஏற்ற வகையில் அமையும்போது பல பொருள் தருவது உண்டு. இத்தகைய சொற்களையும் தொடர்களையும் ஒரு பாடலில் அமைத்து இரு வேறுபட்ட பொருள்களைப் பாடத் தலைப்பட்டதன் விளைவாகவே சிலேடை அணி தோன்றியது. இதனை 'இரட்டுற மொழி தல்' என்று கூறுவர். இவ்வாறு சிலேடைப்பாடல்கள் பாடுவதில் காள மேகப்புலவர் சிறந்து விளங்கினார். உதாரணத்திற்கு அவரது பாடல் ஒன்று... பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் சிலேடை ...

*நஞ்சிருக்குந் தோலுரிக்கு நாதர்முடி மேலிருக்கும்*
*வெஞ்சினத்திற் பற்பட்டான் மீளாது -விஞ்சுமலர்த்*
*தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்*
*பாம்பாகும் வாழைப் பழம்.* (4)

பாம்பிடம் நஞ்சு இருக்கும். பாம்பு தன் தோலை உரிக்கும். சிவபெரு மான் முடிமேல் இருக்கும். கொடிய சினத்தில் அதன் பல்லால் கடிக்கப்பட்டால் உயிர் மீளாது.

வாழைப்பழம் நைந்துபோயிருக்கும். வாழைப்பழத்தின் தோல் உரிக்கப்படும். சிவபெருமான் படையலில் மேலான பொருளாக இருக்கும். கொடிய பசியோடு இருக்கும் ஒருவர் பல்லில் பட்டால் அப் பழம் மீண்டுவராது.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியத்தில் பல சிலேடைப்பாடல்கள் காணப்படுகின்றன. இவ்வாறு புலவர்கள்பாடிய இந்தச் சிலேடை அணியை பயன்படுத்திக் கண்ணதாசன் போன்ற பல பிற்காலக் கவிஞர்களும் பாடல்களை எழுதியுள்ளனர். ஈழத்திலும் சிலேடைக் கவிதைகள் பல புலவர்களால் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் இதைத் தற்காலத்தில் திறம்பட எழுதுகிற கவிஞராக இ .சு முரளிதரனைக் குறிப்பிடலாம்.



**இ.சு. முரளிதரன்**

யாழ்ப்பாணத்தின் வடமராட்சியில் உள்ள கரணவாயைச் சேர்ந்தவர். கவிஞர், சிறுகதை எழுத்தாளர், கட்டுரையாளர், சினிமா விமர்ச கர், சஞ்சிகையாளர் எனப் பல தளங்களில் இயங்கும் இ .சு. முரளிதரனின் சிலேடைக் கவிதைகள் இரண்டைச் செம்மண் வாசகர்க ளுக்காக இங்கு தருகிறேன்.

**பாரதியும் யானையும் (சிலேடை வெண்பா)**

*சிந்துகள் ஈர்ப்பால் புதுக்க விதைகளுக்கும்*
*உந்தியதால் உச்சக் குயிற்பாட்டால் - செந்தமிழை*
*ஏற்றியதால் யானைகை தூக்கலால் பாரதியைப்*
*போற்று பனையாய்ப் புகழ்ந்து..*

**வடிவேலும் தேனும் (சிலேடை வெண்பா)**

*கூட்டிணைவால் நக்கலால் பாத்திரம் ஏற்பதால்*
*ஈட்டும் பணத்தால் வதைபடலால்- பாட்டும்*
*உறைவதால் என்றும் வடிவேலு பாரில்*
*நறையை நிகர்த்தார் நமக்கு!*

■

# மீன் தீயல்



யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்துள்ள சதுப்புநிலக் கடற்பகுதிகளில் வாழ்கின்ற மீன்களைவிட பாறை-கற்பாசிகள் படர்ந்துள்ள கடல் படுக்கைகளில் வாழ்கின்ற மீன்களின் ருசி அதிகம் என்பது மீனவர்களின் பரவலான கருத்து. கடல் மீன்பிடியானது பருவகாலங்களுக்கு ஏற்பவே தொழில் நேரத்தை நிர்ணயிக்கிறது. காலை, மதியம், மாலை, இவற்றுக்கு இடைப்பட்டவேளைகள் என மீனவர்கள் மீன்பிடியில் பரதரப்பட்ட நேரங்களில் ஈடுபடுகிறார்கள்.

மாலை அல்லது சூரியன் மறைந்து இருள்படரத் தொடங்கிய வேளைகளிலும், நள்ளிரவுக்கு முன்பாக நிலவு தோன்றுகிற வேளைகளிலும் மீன்பிடிக்கச் செல்வது அதில் ஒரு வகை. அந்த மீன்பிடிப்பைச் "செக்கல்" தொழில் என்றும், நள்ளிரைவைத் தாண்டிய அல்லது சூரியன் உதிக்க முற்படுகின்ற அதிகாலை வேளை மீன்பிடிப்பை "வெள்ளாப்பு" என்றும் அழைப்பது மீனவர்கள் மத்தியில் இருக்கும் வழக்கம்.



பழங்காலத்தில் செக்கல் தொழிலில் கிடைக்கின்ற மீன்களை (அந்தக் காலத்தில் பெருமெடுப்பில் தொழில் செய்வதில்லை. நவீன வலைகள், இயந்திர சாதனங்கள், பெருமுதலாளிகளின் முதலீட்டுக் கப்பல்கள் இல்லை. தனிநபர்கள் சிறியளவில் கரையோரங்களில் தொழிலில் ஈடுபட்டுத் தமது அன்றாட வாழ்வாதாரத்தைப் போக்கும் வகையிலேயே தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மறுநாள் சமைப்பதற்கு வைத்திருப்பதற்குக் குளிர்சாதனப் பெட்டிகள் இருக்கவில்லை. அந்த மீன்களை அவித்து வைத்து மறுநாள் கறியாக்கும் பழக்கமே இருந்தது. தனியாக நீரூற்றி அவிப்பதைவிடத் தீயல் செய்துவைத்துவிட்டு (தீய்ச்சு வைத்தல்) மறுநாள் சமைக்கும்போது அந்த மீன்கூட்டு அதிக ருசியைத் தருவதாக இருந்தது. அவ்வாறாகத்தான் மீனவர் சமூகத்தில் மீனைத் தீய்ச்சு வைக்கும் பழக்கம் தொடங்கியது என்கிறார்கள் கரையோர மூதாதையர்கள் பலர். அத்தகைய மீன் தீயல் குறித்துத்தான் இந்த வாரம் சமையல் பகுதியில் நாம் பார்க்கவிருக்கிறோம்.

முரல், காரை, நெத்தலி, சிறையா, அகலி, திருவன், பாரை ஆகிய மீன்கள் இந்தத் தீயலுக்கு அதிக ருசியைத் தருவதாக இருந்தாலும் எந்தவொரு மீனையும் தீய்ச்சுக் கொள்ளலாம்.

**தேவையானவை**

சுத்தம் செய்யப்பட்ட மீன்கள் ஒரு கிலோ அளவில், புளி கால் கிலோ, சின்னவெங்காயம் 100கிராம், பச்சைமிளகாய்கள் 2, தனிமிளகாய்த்தூள், கட்டைத்தூள், நல்லெண்ணெய், உப்பு, மஞ்சள்தூள் ஆகியன சிறியளவில்.

**எப்படிச் செய்வது**

மீன்களைக் கழுவித் துப்புரவாக்கி வெட்டிவிட்டு மஞ்சள்தூள், உப்புப் போட்டுப் பிரட்டிச் சில நிமிடங்கள் வரை வைக்க வேண்டும். பின்னர் புளியைக் கரைத்து அதற்குள் ஊற்றி நன்றாக அவியவிடவேண்டும். கொதித்து இறுகிவரும்போது மிளகாய்த் தூள்களைப் பேட்டுச் சாதுவாகக் கிளறவேண்டும். பின்னர் சிறிது நல்லெண்ணையை விட்டுச் சட்டியைக் குலுக்கி மெல்லிய தீயில் விடவேண்டும். புளிக் கரைசல் வத்திப்போகும்வரை தீயில் இருக்கவிட்டு இறக்கினால் சுவையான மீன் தீயல் தயார்.



# பயறுக் கறி

தானியங்களில் ஒன்றான பருப்பு எம்மவரின் விருப்புக்குரிய ஒன்றாகி விட்டது. பருப்புக் கறி சமைக்காத வீடுகளும், பருப்புச் சேர்க்காத உணவும் இல்லையென்றாகியும் விட்டது. பருப்புக் கறியை நேரடியாகப் பருப்பிலேயே சமைத்து வருவதைப்போல பயற்றம் பருப்பிலும் ஆக்கிக் கொள்ள முடியும். பருப்பைப்போன்ற ஒருவகைத் தானியமே பயறும் ஆகையால் பருப்புக் கறிக்கு ஈடான சுவையை இந்தப் பயற்றம் பருப்புக் கறியும் தருகிறது.

**தேவையான பொருள்கள்**

பயறு 200கிராம், செத்தல் மிளகாய்கள் 4, சின்ன வெங்காயங்கள் 8, பச்சை மிளகாய்கள் 3, சின்னச் சீரகம் - அரைக்கரண்டி, உள்ளிப் பற்கள் இரண்டு, உப்பு, கறிவேப்பிலை ஆகியன சிறிதளவு. மஞ்சள் கட்டி ஒன்று.

**எப்படிச் சமைப்பது?**

பயறை வறுத்துக் குற்றித் தோல் நீக்கி வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் அதைச் சட்டியில் நீர் ஊற்றி அவிக்க வேண்டும். மஞ்சள் கட்டி, செத்தல் மிளகாய், சின்னச் சீரகம், உள்ளி ஆகியவற்றை அம்மியில் வைத்து அரைத்து அந்தக் கலவையைப் பயற்றுடன் சேர்க்கவேண்டும். உப்புச் சேர்த்து ஐந்து நிமிடம் வேகவிட்டுக் கறிவேப்பிலை, பச்சை மிளகாய், வெங்காயத்தைத் தாளித்துக் கறியுடன் சேர்க்கவும். சுவையான பயற்றம் பருப்புக் கறி தயார்.



# மீண்டும் மாமத யானைகள்!

பனியுகத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் மாமத யானைகளை (மமத்) மீண்டும் உயிர்ப்பிக்கும் ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பூமியில் அதிகரித்துவரும் வெப்பத்துக்கு மத்தியில் ஒரு சுற்றுச்சூழல் சமநிலையை ஏற்படுத்துவதற்கு இது உதவும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

மாமத யானைகள் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே பூமியில் இருந்து அழிந்துவிட்டன. இவை டைனோசர் காலத்திற்கும் முந்தியவை என்று கருதப்படுகின்றன. பூமி கடுமையாகக் குளிர்ந்திருந்த காலத்தில் இவை வாழ்ந்தன.

அழிந்துபோன இந்த உயிரினங்களின் எச்சங்கள் சைபீரியா போன்ற பனிப் பகுதிகளில் இப்போதும் புதை படிமங்களாகக் கிடைக்கின்றன. அந்தப் படிமங்களில் இருந்து மரபணுக்களைச் சேகரித்து, அவற்றை மாமத யானைகளின் மின நெருங்கிய இன்றைய உயிரினமான ஆசிய யானைகளின் மரபணுக்களுடன் சேர்த்து புதிய கலப்பு மாமத யானைகளை உருவாக்குவதே ஆய்வாளர்களின் திட்டம்.

கொலாஸல் என்ற நிறுவனம், இதுவரை இந்தத் திட்டத்துக்காக 15 மில்லியன் டாலர்களை ஸ்பான்சர் பணமாகப் பெற்றிருக்கிறது. மாமத யானை மற்றும் ஆசிய யானையின் கலப்பினம் ஒன்றை உருவாக்கினால், கிட்டத்தட்ட அது சடை யானையைப் போன்றே இருக்கும் என்றும், சைபீரியாவின் பரந்த வெளிகளில் இந்த விலங்குகள் விடப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவிக்கிறது.

"எங்களுக்கு இது ஒரு முக்கியமான மைல் கல்" என்று நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கைக்குப் பேட்டியளித்திருக்கிறார் இந்தத் திட்டத்தின் பிதாமகர் முனைவர் ஜார்ஜ் சர்ச். ஹார்வேர்ட் மருத்துவக் கழகத்தைச் சேர்ந்த இவர், "இது உலகத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்" என்கிறார்.





## மருத்துவம்

# எந்நாளும் நலம் வாழ



### குழந்தைகளுக்கான உணவுகள் 2

மருத்துவர்
கந்தையா -சோதிதாசன்

## குழந்தைகளுக்கான திட உணவை தொடக்குதல்

மருத்துவரின் பரிந்துரையின்படி ஐந்து முதல் ஆறு மாதங்களுக்குள் நீங்கள் தாராளமாகத் திட உணவைக் கொடுக்கலாம். அதாவது, ஆறாவது மாதத்திலிருந்து திட உணவைக் குழந்தைகளுக்கு கொடுத்தாக வேண்டும். ஏனெனில் குழந்தையின் வளர்ச்சிக்கு திட உணவுகள் முக்கியம்.



**குழந்தைகள் திட உணவை எடுக்க தயாராகிறார்களா என்பதை எப்படி அறிந்து கொள்ளலாம்?**

தன் கைகளால் எதையாவது எடுக்க முயற்சி செய்வது.கட்டைவிரல், ஆட்காட்டி விரலால் பொருட்களை எடுக்கத் தொடங்குவது.தேவையான பாலைக் குடித்தபோதும் பசியுடன் இருப்பது.பொருட்களை எடுத்து வாயில் வைக்கத் தொடங்குவது.குழந்தை தன்னுடைய நாக்கை உள்ளேயும் வெளியேயும் சுழற்றியபடி இருப்பது. வாயை எப்போதும் அசைபோட்டபடி இருப்பது.சாப்பிடுபவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் தன் நாக்கை வெளியே நீட்டி சைகை கொடுத்தாலும் குழந்தை திட உணவைச் சாப்பிட விரும்புகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

திட உணவுகள் கொடுக்கும்போது கவனிக்க வேண்டியவை குழந்தை அமர்ந்திருக்கும் நிலையில் உணவைக் கொடுக்க வேண்டும். குழந்தையைப் படுக்கவைத்தபடி உணவை ஒருபோதும் கொடுக்கக்கூடாது குழந்தைக் காகப் பயன்படுத்தும் உணவுப் பாத்திரங் களை வெந்நீரில்இட்டு நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். உணவு சரியான பதத்தில் இருக்க வேண்டியது அவசியம். உணவைத் தயார் செய்த இரண்டு மணி நேரத்திற்குள் குழந்தைக்கு ஊட்டிவிடுங்கள்.

தயாரித்த உணவு இரண்டு மணி நேரமாகிவிட்டால், அதைக் குழந்தைக்குத் கொடுக்காதீர்கள் எப்போதும் புதிதாக தயாரித்த உணவுகளைத் தருவது நல்லது.முதல் முறையாக குழந்தை திட உணவை சுவைத்து, தன் நாக்குக்கு புது சுவையை அறிமுகப்படுத்துவதால் குறைவான அளவிலிருந்து உணவைக் கொடுக்கத் தொடங்கவேண்டும்.

**குழந்தைகளுக்கு எவ்வாறான உணவுகளை கொடுக்க வேண்டும்?**

குழந்தை பிறந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு சத்துமாவுக் கஞ்சி, பருப்பு, மசித்த இட்லி, மசித்த சோறு, இடியப்பம், வேகவைத்த உருளைக் கிழங்கு மற்றும் வாழைப்பழம், வேகவைத்த கரட், போன்றவற்றை கொடுக்கலாம்.

ஒரு வயது பூர்த்தி அடைந்த குழந்தைகளுக்கு சோறு, அனைத்து வகை பழங்கள் கீரை வகைகள் காய்கறிகள் முட்டை மீன் கோழி இறைச்சி போன்றவற்றை சிறிது சிறிதாகக் கொடுத்துப் பழக்கவேண்டும். வளரும் குழந்தைகளுக்கு என்பு பல் வளர்ச்சிக்காகக் கல்சியம் அதிகம் தேவைப்படுவதால் காலையில் ஒரு கிளாஸ் பால் தினமும் கொடுக்கலாம். காலை உணவாக நீராவியில் அவித்த புட்டு இடியப்பம் போன்ற உணவுகளோடு அவித்த உருளை கிழங்கு வற்றாளைக் கிழங்கு என்பவற்றையும் கொடுக்கலாம்.

இடைநேரத்தில் வேகவைத்த சுண்டல் பழச்சாறு அல்லது பழக்கலவை என்பவற்றைக் கொடுக்கலாம். குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியில் உணவு முக்கிய இடம் பெறுகிறது

திட்டமிடப்பட்ட ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுகளைச் சுவையாகச் சமைத்து



கொடுத்து குழந்தைகளை எதிர்ப்புசக்தி மிக்கவர்களாகவும் வல்லவர்களாகவும் வளர்ப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும்.

குறிப்பாக பொதி செய்யப்பட்ட அவசர உணவுகள் எண்ணெயில் பொரித்த மசாலா உணவுகள் சொக்லேட் ஐஸ்கிரீம் போன்ற உணவுகளை அதிகம் குழந்தைகளுக்கு கொடுப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும் இன்றைய குழந்தைகள் எதிர்காலத்தில் நம் நாட்டின் தலைவர்கள்.

# முகத்திலுள்ள பருக்களை போக்க இயற்கை வழிகள்..!



ஆண்கள் மற்றும் பெண்கள் பெரிதும் பாதிப்படையும் சருமபிரச்னைகளில் ஒன்று தான் இந்த முகப்பரு. இவ்வாறு முகத்தில் உருவாகும் பருக்கள் அனைத்து அழகையும் கெடுத்துவிடுகிறது.ஒருசில இயற்கைப் பொருட்கள் மற்றும் செயல்கள் மூலம் இந்தப் பருக்களைப் போக்கமுடியும்.

**கராம்பு**

கராம்பு பருக்களைப் போக்கக்கூடிய பொருட்களில் ஒன்றாகும். இந்தக் கராம்பை நீரில்போட்டு கொதிக்கவிட்டு, குளிரவைத் துப்,பின் அதனை அரைத்து பருக்கள் உள்ள இடங்களில் பூசி 15 அல்லது 20 நிமிடம் ஊற வைத்து, குளிர்ச்சியான நீரில் கழுவவேண்டும்.

**சந்தனம்**

சந்தனப் பொடியுடன் தயிர், கடலை மா மற்றும் சிறிதளவு எலுமிச்சைசாறு சேர்த்து கலந்து, முகத்திற்கு தடவி ஊறவைத்து கழு வினால், பருக்கள் நீங்குவதோடு, முகமும் பொலிவோடு காணப்படும்.

**தேன்**

தேனைக் கொண்டு பருக்கள் உள்ள இடங் களில் மசாஜ் செய்து, 15-20 நிமிடம் ஊற வைத்து, பால்கொண்டு முதலில் கழுவி, பின் நீரில் அலசினால், சரும வறட்சியைத் தவிர்ப் பதோடு, பருக்களையும் போக்கலாம்.








நவரசா திரைப்படத்தில் வரும் விஜய் சேதுபதியின் கதாப்பாத்திரத்தைத் தழுவி இக்கவிதை எழுதப்பட்டுள்ளது. வாக்குவாதம் முத்தி ஆத்திரத்தில் ஒருவனைக் கொன்று விடுகிறார் விஜய் சேதுபதி. கதவைத் திறந்து தப்பித்துச் செல்லும்போது அவர் மனைவியை நேருக்கு நேர் காண் கின்றார். பின்னர் குற்ற உணர்வால் துவள்கிறார்.

## ஒரு கொலைகாரனின் புலம்பல்

*சீறும் குருதி முன்*
*சீற்றம் தனிந்தே*
*சில நிமிடம் பார்த்து நின்றேன்*
*உயிர் நாற்றம் உணர்ந்தே*

*சொன்ன சொல் முடிவிற்கும்*
*இன்னுயிர் பிரிவிற்கும்*
*இடைப்பட்ட கணங்களில்*
*என்னுயிர் எனதல்ல*

*ஆடிய கதிரை*
*ஓய்கின்ற பொழுதில்*
*அவன் இதயமும் ஓய்ந்திருக்கும்*
*கூடிய கதவுகள் பிளக்கின்றபோது*
*இரு விழி*
*என்னைப் பிளந்துவிடும்*

*கூறியே வார்த்தைகள்*
*மன்னிப்புக் கோரியும் பலமுறை*
*கோபத்தின் கனல்*
*கொடும் நரகத்தில் எனைச் சேர்க்கும்*
*ஆகினும் தேவை*
*அவ் அன்னையின் வார்த்தை மட்டுமே*



*நரகபாதாளம்*
*சிறைவாசம்*
*என் மகள் கண்ணில் நான்*
*இவை விடப் பெரும் தண்டனை ஏதிங்கு?*

*கூறிய ஒரு வார்த்தை*
*அத்தகு சக்தி கொண்டதா*
*இல்லை*
*வளர்த்து வைத்த காட்டினுள்*
*விழுந்த வெறும் தீப்பொறி மட்டுமா*

■ரதிதேவி- மானிப்பாய்

# பாரிஸின் வெற்றி வளைவுக்கு புத்தாடை போர்த்திப் புது எழில்



**குமாரதாஸன்**

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு ஓவியர் ஒருவர் விரும்பிய கனவு இப்போது பலித்திருக்கிறது. பல்கேரியாவில் பிறந்த கிறிஸ்ரோ (CHRISTO) என்ற ஓவியர் 1961 இல் பாரி ஸின் ARC DE TRIOMPHE என்கின்ற வளை வுக்கு முழுவதுமாகத் துணி போர்த்திப் பார்க்க விரும்பினார்.

பின்னர் அவர் இறந்து விட்டார். ஆயி னும் அவரது விருப்பம் இப்போது நிறை வேறியிருக்கிறது. பாரிஸின் முக்கிய நினை விடங்களில் ஒன்று ARC DE TRIOMPHE என்கின்ற வெற்றி வளைவு.பாரிஸ் வாசிகள் மட்டுமன்றி உலகம் எங்கும் இருந்து வரும் உல்லாசப் பயணிகளும் பார்க்கத் தவறாத சுற்றுலா மையங்களில் ஈபிள் கோபுரத்துக்கு அடுத்த இடத்தில் இருப்பது ARC DE TRIOMPHE.

பிரமாண்டமானதும் கம்பீரமானதுமான அந்த வெற்றி வளைவின் அடித்தளத்தில் போரில் உயிர்நீத்த - பெயர் தெரியாத- படை வீரர் ஒருவரது கல்லறை உள்ளது. அங்கு அணையாத தீபம் ஒன்று எந்நேரமும் எரிந்து கொண்டிருக்கும். அதனால் அந்த நினை விடத்தை பாரிஸ் தமிழர்கள் "அணையா விளக்கு" என்று அழைப்பர். பாரிஸின் வெற்றி வளைவு நேற்று முதல் வெள்ளி-நீலம் நிறத்திலான துணியின் மூலம் (SILVER BLUE FABRIC)முழுவதும் போர்த்தி மூடி புத்தாடை அணிந்தது போன்று எழிலாகக் காட்சியளிக் கிறது.

நினைவிடங்களையும் பழமை வாய்ந்த கட்டடங்களையும் துணி அல்லது பொதி செய்யும் கடதாசிகளால் போர்த்தி (WRAP PING) வண்ணமயமாக மாற்றுகின்ற ஒருவித அதிசய சித்திரக் கலை வடிவம் அது.பல நாடுகளில் முக்கிய கட்டடங்கள் இவ்வாறு துணிபோர்த்தி அலங்கரிக்கப் பட்டுள்ளன. பாரிஸ் நகரில் அமைந்துள்ள PONF NEUF எனப்படும் பாலம்1985 ஆம் ஆண்டில் இவ்வாறு துணியால் போர்த்தி காட்சிக்கு விடப் பட்டது.

மீள் சுழற்சியில் பயன்படுத்தக் கூடிய துணி போன்ற அழகிய பிளாஸ்ரிக் படங்கினால் (RECYCLABLE PLASTIC WRAPPING) வெற்றி வளைவு முழுவதும் அதன் வடிவம் குலையா மல் மூடி மறைக்கப்பட்டுள்ளது. ஓவியர் கிறிஸ்ரோவின் விருப்பத்தை அவரது உறவினர் ஒருவர் சுமார் அறுபது ஆண்டுக ளுக்குப் பிறகு 14 மில்லியன் ஈரோ செலவில் நிறைவேற்றியுள்ளார். சுமார் 2,500 சதுர மீற்றர் பரப்பளவு துணி வவளைவைச் சுற்றி வரப் போர்க்கப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

புதுக் கோலம் பூண்டுள்ள வெற்றி வளைவை அதிபர் எமானுவல் மக்ரோன் தனது துணைவியார் சகிதம் சென்று திறந்து வைத்தார். நேற்று நடைபெற்ற அந்த நிகழ்வில் பாரிஸ் நகர மேயர் ஆன் கிடல்கோ மற்றும் கலாசாரத் துறை அமைச்சர் ரோஸ்லின் பட் ச்லொட் (ROSELYNE BACHELOT) ஆகியோரும் கலந்து கொண்டனர். "கிறிஸ்ரோவின் பைத் தியக் காரத்தனமான கனவு இன்று நிறைவேறி யிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது" என்று மக் ரோன் அங்கு தெரிவித்தார்.ARC DE TRIOMPHE எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதி வரை இந்தப் புதிய அலங்காரத்துடன் காட்சிதரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(படங்கள் :நன்றி ஏஎப்பி செய்திச் சேவை)

## போர்க் குற்றமா ...

தவறல்ல அதற்குரிய-அதற்கு வகுக்கப்பட்ட விதிமுறைகளை மீறிச் சண்டை பிடித்ததுதான் தவறு என்பதுபோலுள்ளது விவகாரம். சண்டையிடுபவர்கள் ஓர் ஓரமாகப்போய் நின்று சண்டையிடவேண்டும். மற்றவர்களுக்குப் பாதிப்பளிக்கக்கூடாது. இதன்படி சண்டையிட்டு முடியச் சண்டையிட்டபோது இழைத்த குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றனவே தவிர, ஏன் சண்டையிடுகிறார்கள், சண்டையின் தொடக்கப்புள்ளி என்ன என்கிற பல விடயதானங்கள் கடந்தோ, கண்டுகொள்ளப்படாமலோ விடப்படுகின்றன. சண்டை தொடங்கியபோதோ, சண்டை நடந்துகொண்டிருந்தபோதோ கூடக் காண்பிக்கப்படாத அக்கறையைப் போர் முடிந்த பிற்பாடு போர்க் குற்றங்கள் சார்ந்த விடயங்களில் காண்பிப்பதாலும், அதை முறையான -சரியான (சண்டையின் தொடக்கப் புள்ளியிலிருந்து) அணுகுதல்கள் இல்லாமல் இடைநடுவில் நடந்த - நடப்பவற்றை விசாரித்துத் தீர்ப்பளிப்பதாலும் பயனேதும் இருக்கிறதா என்பதும் கேள்வியே. ஆனாலும் சிக்கலை அதிகப்படுத்திவிட்டிருப்பதால் கட்டம் கட்டமாகத்தான் தீர்வையும் காணவேண்டியிருக்கிறது.

போர் தொடங்கிய காலத்தில் அது ஏன் தொடங்கியது, அதற்கான மூலம் எங்கிருந்து தொடங்கி யது, அது நீளக் காரணம் என்ன, அது நீளும் போதெல்லாம் நடந்த குற்றங்கள் யாவை என்றும் பல வாறு சிந்தித்துத் தீர்வு காண்பதாகவுமில்லை.

போர் பற்றியோ, அது ஏன் ஏற்பட்டது என்பது பற்றியோ, அதன் தொடக்கப் புள்ளி ஏது என்பது பற்றியோ, முடிவுறுத்தப்பட்ட பின்னராவது அதற்குத் தீர்வு கிடைத்துவிட்டதா என்பது பற்றியோ சிந்திப்பதற்கோ, கதைப்பதற்கோ எவரும் தயாராகவும் இல்லை. கால இழுப்புடன் அந்நியப்பட்டுச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அல்லது அரசியல் சதுரங்கம், ராஜதந்திரம் என்றெல்லாம் சூழ்ச்சிகளையும், சூதுவாதுகளையும் நிறைத்து விடயத்தைச் சிக்கலாக்கிவிட்டிருக்கிறார்கள். இதன் ஒரு முடிச்சுத்தான் சண்டை பிடித்த இருவரும் ஓர் ஓரமாகப்போய் நின்று சண்டையிடாமல் மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய விவகாரம். இந்தப் போர்க்குற்ற முடிச்சை - சிக்கலை அவிழ்ப்பதால் - தீர்வு காண்பதால் அதுவே முழுமையான தீர்வாகுமா...?

முழுமைக்கும் தீர்வு காண்பதற்கும் எவரும் தயாராயில்லை. (இந்தக் கட்டங்கள் கட்டங்களுக்கான தீர்வுகூட இப்போதைக்கு நடக்கின்ற காரியமல்ல)

இதையெல்லாம் தாண்டி எல்லாச் சிக்கல்களுக்குமாக ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு இந்த அறிவாளிகள்கூட்டம் சிந் திக்கத் தொடங்கு வதற்குப் பல ஒளியாண்டுகள் தேவைப்படலாம்.

அத்தனை ஒளியாண்டுகள் கடந்த பின்னரும்கூட, பிரபாகரன் என்றொரு நபர் குடித்துவிட்டு வெறியில் துப்பாக்கி ஏந்தி அப்பாவி மக்களைச் சுட்டுத்தள்ளினார் என்றும் போராளிகளை இணைத்து அவர்களுக்கும் ஊத்திக்கொடுத்து அவர்களையும் சுடச் செய்தார் என்றும் கதை எழுதும் மனநிலை தோன்றினாலும் சந்தேகப்படுவதற்கில்லை.

இவ்வாறில்லாமல் இந்தச் சிக்கல் ஏன் தொடங்கியது, எப்படித் தொடங்கியது என்றெல்லாம் யோசித்தபடி புதுக்கோணத்தில்போய் முட்டுப்பட்டு முழி பிதுங்கி நிற்கவும் வாய்ப்புண்டு.

## இந்த வார சுடோக்கு - 53

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 8 | | 6 |
| 4 | | 5 | 6 | 9 | | | 1 | |
| | | 9 | | | 2 | 4 | | |
| 5 | | | | | 3 | | 8 | |
| | | 7 | 8 | | 9 | 6 | | |
| | 9 | | 2 | | | | | 3 |
| | | 4 | 7 | | | 1 | | |
| | 6 | | | 4 | 1 | 7 | | 8 |
| 7 | | 3 | | | | | | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
*சுடோக்கு,*
*551 A, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 9 | 4 | 6 | 5 | 3 | 7 | 8 |
| 6 | 7 | 3 | 8 | 9 | 2 | 5 | 1 | 4 |
| 4 | 8 | 5 | 7 | 1 | 3 | 6 | 9 | 2 |
| 9 | 5 | 4 | 1 | 2 | 8 | 7 | 3 | 6 |
| 7 | 2 | 1 | 5 | 3 | 6 | 8 | 4 | 9 |
| 3 | 6 | 8 | 9 | 4 | 7 | 2 | 5 | 1 |
| 8 | 9 | 6 | 3 | 5 | 1 | 4 | 2 | 7 |
| 1 | 3 | 2 | 6 | 7 | 4 | 9 | 8 | 5 |
| 5 | 4 | 7 | 2 | 8 | 9 | 1 | 6 | 3 |

*குறிப்பு: கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.*

# ஊடகவியலாளரது அரசியல் ஆசை: அவரது ரீ.வி. நிகழ்ச்சி பறிபோனது!

குமாரதாஸன்




பிரபல ஊடகவியலாளர்கள் தேர்தல் காலங்களில் அரசியலில் குதிக்கப் போவதாகச் செய்திகளைக் கசியவிடுவ துண்டு. பரபரப்புக்காக அல்லது தங்கள் செல்வாக்கை,அதன் பிரதிபலிப் புகளை அறிவதற்காகச் சிலர் அவ்வாறு கதை விடுவதும் பின்னர் அவர்களாகவே அதை மறுத்து அறிக்கை விடுவதும் புதிதல்ல.

பிரான்ஸில் தீவிர வலதுசாரியான ஊடகவியலாளர் எரிக் செமூர் அதிபர் தேர்தலில் போட்டியிட ஆசைப்பட்டதால் தனது பிரபலத் துக்குக் காரணமான தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இருந்து தூக்கப்பட்டிருக்கிறார்.

எரிக் செமூர் அதிபர் தேர்தலில் போட்டியிடப்போகிறார் என்ற பல செய்திகள் அண்மைய நாட்களாக வெளியாகி அரசியல் தரப்புகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. அவரும் லேசாக அதனைஒப்புக் கொண்டார். அவரது விருப்பத்தை அறிந்துகொண்ட இளம் ஆதரவாளர்கள் தேர்தல் செலவுக்கு நிதி சேகரிக்கவும் தொடங்கி விட்டனர். பாரிஸ் நகரில் அவரது படத்துடன் தேர்தல் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.இன்னமும் தனது தர்மானத்தை அவர் முறைப்படி அறிவிக்கவில்லை. அதற்குள் தனது தொலைக் காட்சி நிகழ்ச்சியில் எதிர் அரசியல் தரப்புகளைக் கடு மையாக விமர்சிக்கத் தொடங்கி விட்டார்.

பிரான்ஸில் Le Conseil sup-rieur de l'audiovisuel என்ற ஒலி மற்றும் காட்சிஊடக அதிகாரசபை எரிக் செமூரின் நடவடிக் கைகளைக் கண்காணிக்கத் தொடங்கியது.அவர் தொலைக்காட்சி நிகழ்ச்சியைத் தனது தனிப்பட்ட அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்துகிறார்என்று அதிகாரசபை கருதுகிறது.

செமூரின் நிகழ்ச்சியை ஒளிபரப்பி வருகின்ற'சி நியூஸ்' (CNews) தொலைக்காட்சியின் நிர்வாகம் அதிகாரசபையின் அழுத்தத்தை அடுத்து எரிக் செமூரைக் குறிப்பிட்ட அந்த அரசியல் விவாத நிகழ்ச்சியில் இருந்து நீக்கியுள்ளது.லட்சக்கணக்கான பார்வை யாளர்களைக் கவர்ந்த அந்த நிகழ்ச்சிக் களத்தை அவர் இழக்க நேரிட்டுள்ளது.

63 வயதுடைய எரிக் செமூர்(-ric Zemmour) பிரான்ஸில் மரீன் லூ பென்னை விஞ்சிய தீவிர தேசிய வலதுசாரியாக அடையாளப்ப டுத்தப்பட்டவர். 'லூ பிஹாரோ' (Le Figaro) என்ற வலது சார்புப் பத்திரிகையின் பத்தி எழுத்தாளரான அவர் தேசிய அரசியல் விவகாரங்கள் தொடர்பாக விவாதிக்கின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி கள் ஊடாகப் பல லட்சக்கணக்கான பார்வையாளர்களைக் கவர்ந்த வர்.

காட்சி ஊடகம் மூலமாக வெளிநாட்டுக் குடியேறிகள் மற்றும் இஸ்லாமியர்களுக்கு எதிரான கடும் வாய்மொழித் தாக்குதல்களை நடத்தி வருபவர். இனவாதம் கக்குகின்ற அவரது உரையாடல்கள் மனித உரிமை பேணுவோரால் அடிக்கடிக் கண்டிக்கப்படுவதுமுண்டு.புதிய தாராளமயமாக்கல் (NEOLIBERALISM) கொள்கைகளால் பிரான்ஸ் நாடு அருகி மறைந்து வருகிறது. இன்னும் சில காலத்தில் அது வெளி நாட் டுக் குடியேறிகளது தேசமாகவே விளங்கும் - என்று எரிக் செமூர் தனது நூல் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். "பிரான்ஸ் மிகவும் அவலமான நிலையில் உள்ளது. எனது விருப்பத்துக்குரிய பிரான்ஸ் மறைந்துபோய்க் கொண்டிருக்கிறது" - என்று அவர் அடிக்கடிக் கூறிவருகிறார்.

2022 ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் மக்ரோனும் மரீன் லூ பென்னும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறுவார் கள் என்று கணிப்பிடப்படுகிறது. ஆனால் மரீன் லூ பென்னைத் தோற் கடிப்பதை இலக்காகக் கொண்டே எரிக் செமூர் காய் நகர்த்திவருகின்றார் எனச் சொல்லப்படுகிறது. அவர் தேர்தல் களத்தில் இறங்கும் பட்சத்தில் தீவிர வலதுசாரிகளுக்கு ஆதரவான வாக்குகள் இரண்டாகப் பிளவுபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மரீன் லூ பென்னின் கனவுகளுக்கு அது பலத்த பின்னடைவை உருவாக்கலாம்.மரீன் லூ பென்னுக்கு மாறாக வேறு ஒரு வேட்பாளர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேற நேர்ந்தால் அது மக்ரோனின் வெற்றி வாய்ப்புக்கும் சவாலாகிவிடலாம்.

எது எவ்வாறாயினும் எரிக் செமூர் தேர்தலில் போட்டியிடப் போவ தில்லை என்று கடைசி நேரத்தில் அறிவித்துவிட்டு மீண்டும் ஊடகப் பணிக்கே திரும்பிவிட்டால் இந்தக் கணிப்புகள் பொய்த்து விடலாம்.

# போர்க் குற்றமா போருக்கான காரணமா?

## எது திர்வு?

எந்தத் தரப்பாயினும் விசாரணைக்குட்படுத் தப்பட வேண்டும் என்ற கட்டத்தில் வந்து நிற்கிறது போர்க்குற்ற விசாரணை விவகாரம். இறுதிப்போரில் பெருமடுப்பில் நடைபெற்றதாலும், அப்போது அரங்கேறிய குற்றங்களின் கனதியாலும் தான் அந்த விவகாரம் இன்றுவரை சூடு தணியாமல் இருக்கிறது.

இறுதிப்போரின் பின்னர் அதாவது போர் முடிந்த பின்னர்தான் இந்தச் சொல்லாடலைக்கூடப் பலரும் உச்சரிக்கத் தொடங்கினார்கள்.

இறுதிப்போரில் குற்றங்களைப் பெருமெடுப்பில் நடத்தி அதிக குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி, அத னால் தொடர் அழுத்தங்களுக்கும் உள்ளாகி வரு கின்ற தரப்பினர்தான் இந்த இறுதிப்போர்க்குற்றங் களின்போது நிகழ்ந்த பெரும்பாலான குற்றங்களுக் கும், மனித குலத்துக்கு எதிரான அந்தப் பெரும் குற்றங்களுக்கும் உரிமைகோரக்கூடியவர்கள். முக்கிய குற்றவாளிகள். ஆனால், அது சக எதிரிக ளின் குற்றங்களைச் சுட்டிக்காட்டுவதுடன், இறு திப்போருக்கு முந்தைய கால கட்டம் வரை இழுத் துச்சென்று அவர்களின் குற்றங்களைப் பட்டி யல்படுத்துவதிலும் வந்து நிற்கிறது.

இதற்கு முன்னர் ஒருபோதும் தமது எதிர்த் தரப்பினர் போர்க்குற்றம் இழைத்தனர் என்றோ அதை விசாரிக்க வேண்டும் என்றோ அந்தத் தரப்பு குரல் எழுப்பியதாக இல்லை. போர்க் காலத்தின் இடைநடுவில் பல சுற்றுப் பேச்சுகள் நடந்திருந் தாலும் அவற்றில்கூடப் போர்க்குற்றம் குறித்த கதையிருந்ததாக இல்லை.

இந்த நிலையைச் சாட்டாக வைத்தும், இதற் குரிய கால இழுத்தடிப்பைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியும் பெருமெடுப்பில் குற்றமிழைத்த தரப்பைவிடவும் பல தரப்புகள் அதற்கு முந்தைய போர் நீடித்த உறுதியற்ற காலப்பகுதிகளில் நடந்த சில பல குற்றச் செயல்கள் குறித்தும் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன. நாங்கள் மட்டுமா தவறு செய்தோம் - அவர்களும் செய்தார்கள்தானே, அல்லது அவர்களும் தவறு செய்தார்கள்தானே என்கிற கோணத்தில்.

குற்றமிழைத்த எந்தத் தரப்பாயினும் விசார ணைக்குட்படுத்தப்பட வேண்டும், தண்டிக் கப்படவேண்டும் என்று சொல்லப்படும் விடயம் சரியானதே. சக மனிதர்களுக்குப் பாதி ப்பை ஏற்படுத்தியவர்கள் யாராக இருந் தாலும் அவர்கள் தண்டிக்கப்படத்தான் வேண்டும். ஆயினும், இதுதான் இதன் முழுமைக்கும் தீர்வாகுமா என்றால் அது கேள்விக்குறியே. காரணம், இடியப்பச் சிக் கலை ஒத்த வலையமைப்புக்குள் விவகா ரத்தை மூழ்கடித்துவிட்டு அவ்வப்போதான ஒரு சில கட்டங்களுக்குத் தீர்வு காண்பதால் அந்தத் தீர்வு நிரந்தரமானதாகவோ சரி யானதாகவோ முறையானதாகவோ உண் மையை வெளிப்படுத்துவதாகவோ இருக் காது.

போர்க்குற்றம் என்பது போர் விதிகளை மீறி மனிதகுலத்துக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டமையைக் குறிக்கலாம். போர் விதிகளை மீறிப் போர் புரிந்தமையைக் குறிக்கலாம். சுருங்கச் சொன்னால், போர் தவறில்லை அதற்குரிய விதிகளை மீறி அதை நடத்தியதுதான் தவறு என்கிற மூளைசாலிகள் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அடிமட்ட மனிதர்க ளும் விளங்கிக் கொள்ளும்படி இதைச் சொல்வதானால், சண்டை பிடிப்பது

(23ம் பக்கம் பார்க்க)

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.09.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781